www.padippakam.com

16-30 நவம் '91 ரூ. 2-50

பாசிச ஜெயாவை நம்பி
தற்கொலைப் பாதையில் பார்ப்பனர்கள்

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு



# ரவுடி ராச்சியம்

படிப்பகம்

www.padippakam.com



# இமாலயப் பேரழிவும் அரசின் பொய்களும்

"எங்களுக்கு உடனடியாக நிவாரண உதவி செய்யுங்கள்; அல்லது விஷம் கொடுத்து கொன்று விடுங்கள்!" - உறவினர்களையும் வீட்டையும் இழந்து படுகாயமுற்ற நிலையில் அழுது கொண்டிருந்தார் அந்த ஏழைத்தாய். "நாங்கள் எல்லாவற்றையும் இழந்து தவிக்கிறோம். எங்களுக்கு குடிக்கக் கூட தண்ணீர் இல்லை. அரசாங்கம் என்று ஒன்று இருக்கிறதா?" என ஆத்திரத்தோடு கேட்கிறார் ஒரு முதியவர்.

கடந்த அக்டோபர் 20-ந் தேதியன்று பின்னிரவில் ஏற்பட்ட கொடிய பூகம்பத்தினால் உத்திரப் பிரதேசத்தின் உத்தர்காசி, தேரி கார்வால், சாமோலி மாவட்டங்கள் நிலை குலைந்து போயின. 5000க்கும் மேற்பட்ட மக்கள் மாண்டு போயினர். பல்லாயிரக் கணக்கானோர் படுகாயமுற்றனர். சாலைகள் அடைபட்டுப் போயின. இப்பிராந்தியம் முழுவதும் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு எங்கும் பிணவாடையே வீசியது.

பூகம்பத்தின் கடுமை அதிகமாகி எதிர்பாராமல் பல உயிர் - உடமை சேதங்கள் ஏற்பட்ட பின்னர் உடனடி நிவாரண - புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வது அவசியம். 1975-ல் பல லட்சம் பேரைக் காவு கொண்ட பூகம்பம் சீனாவின் வடமேற்கு பகுதியில் ஏற்பட்டது. அப்போது தோழர் மாவோ தலைமையிலான சீன மக்கள் குடியரசு மேற்கொண்ட நிவாரண - புனர்வாழ்வு சீரமைப்புப் பணிகள் உலக மக்களையே பிரமிக்கச் செய்தது. ஆனால் இப்போது வெறும் கண்துடைப்பு நடவடிக்கைகளைச் செய்து விட்டு, எல்லாம் சிறப்பாக நடந்து வருவதாக காங்கிரசு அரசு புளுகி வருகிறது. ஆயிரக் கணக்கில் சாவுகள் நடந்த போதிலும், சில நூறு பேர்களே மாண்டதாக பொய்ச் செய்திகளைப் பரப்பியது. நிவாரண உதவிக்காக கோடிக் கணக்கில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறினாலும், இன்னமும் பல கிராமங்களுக்கு நிவாரண உதவிகள் போய்ச் சேரவில்லை. ஓரளவு சாலைத் தொடர்புகள் உள்ள பகுதிகளில் மட்டுமே அற்ப உதவிகள் செய்யப்பட்டுள்ளன.

இடிபாடுகளுக்கிடையே சிக்கி மாண்டவர் பிணங்களை மக்கள் தாமே மீட்கின்றனர். சாலையோரங்களில் உற்றார் - உறவினர் பிணங்களை வைத்துக் கொண்டு அழுது புலம்புகிறார்கள். பிணங்களை எரிக்க வழியின்றி அவற்றை பாகீரதி ஆற்றில் வேதனையோடு தள்ளி விடுகின்றனர். ஏறத்தாழ 15 நாட்களுக்கு மேலாகியும் மீட்புப் பணிகளை அரசு செய்யவில்லை. கொட்டும் மழையில் கைக் குழந்தைகளுடன் தாய்மார்கள் தவிப்பதைப் பார்க்கும் எவரும் ரத்தக் கண்ணீர் வடிப்பார்கள் என்று 'தேசிய' பத்திரிக்கைகளே படம் பிடித்து அம்பலப்படுத்துகின்றன.

"எங்களிடம் போதுமான அளவுக்கு நிவாரண சாதனங்கள் இல்லை. அக்டோபர் இறுதி வரை 700 பேருக்கு மட்டுமே டெண்டு கொட்டகை கட்டிக் கொள்ள உதவியுள்ளோம். இங்கு போதிய, மருத்துவர்களோ, மருந்துப் பொருட்களோ இல்லை. இதனால் தொற்றுநோய் பரவுவதை எங்களால் தடுக்க முடியவில்லை" என்கிறார் உத்தர்காசி மாவட்ட ஆட்சித் தலைவர்.

இராமனுக்கே கோயில் இல்லாத போது, மக்களுக்கு வீடு எதற்கு என்று உ.பி.யை ஆளும் இந்துவெறி பாரதீய ஜனதா அரசு பாதிக்கப்பட்ட மக்களை கைவிட்டு விட்டது. அயோத்தி விவகாரமும், இடைத்தேர்தலும் முக்கிய விவகாரமாகி, பாதிக்கப்பட்ட மக்களின் மரண ஓலம் அமுக்கப்பட்டு விட்டது. அரசு செய்யும் அற்ப உதவிகளைக் கூட இடைத்தரகர்கள் பறித்துக் கொள்கிறார்கள். அத்தியாவசியப் பொருட்கள் திடீரென விலையேறி விட்டன. இமாலயப் பேரழிவில் சிக்கிய இப்பிராந்திய மக்கள் நிவாரண உதவியின்றி கொள்ளை நோய் தாக்கியும் மெதுவாக கொல்லப்பட்டு வருகின்றனர்.

1934 ஜனவரியில் இதே பிராந்தியத்தில் ஏற்பட்ட பூகம்பம் 10,000 பேரை பலி கொண்டது. 54 ஆண்டுகளுக்குப் பிறகு 1988 ஆகஸ்டில் அதே அளவு கடுமையான பூகம்பம் ஏற்பட்டு வடமாநிலங்களை மட்டுமின்றி நேபாளம் மற்றும் வங்க தேசத்தையும் உலுக்கியது. பூகம்பம் ஏற்படப் போவதை முன்கூட்டியே அறியவோ, முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவோ முடியாது என்று ஆட்சியாளர்கள் சமாதானம் கூறுகின்றனர். ஆனால் 1985-ல் பூனாவிலுள்ள அருண்பாபட் என்ற நில அதிர்ச்சி ஆய்வாளர் இமயமலை அடிவாரத்தில் பூகம்பம் ஏற்படப் போவதைப் பற்றி முன்கூட்டியே அரசுக்கு அறிவித்தார். பின்னர் இந்தியாவுக்கு வந்த ஒரு அமெரிக்க ஆராய்ச்சியாளரும் இவ்வாறே கணித்து எச்சரித்தார். இவை ஒருபுறமிருக்க, பூகம்பம், எரிமலை சீற்றம் ஆகியவை அடிக்கடி நடக்கும் ஜப்பானிய அனுபவங்களைக் கொண்டும் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். ஆனால் மக்கள் நலனில் கிஞ்சித்தும் அக்கறையற்ற இந்திய அரசு இவற்றை அறிந்தே புறக்கணித்தது.

நில நடுக்கம் ஏற்பட்ட இப்பகுதியில் தான் தேரி அணை 5000 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகிறது. நில அதிர்ச்சி அபாயமுள்ள இப் பகுதியில்தான் நரோரா அணுமின் திட்டமும் நிறுவப்பட்டுள்ளது. இவையெல்லாம் எத்தகைய கோரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று சொல்லத் தேவையில்லை. சுற்றுச்சூழல் வாதிகளும், பல ஆய்வாளர்களும் பல முறை எச்சரித்த போதிலும், ரஷிய நிபுணர்கள் பாதுகாப்பாக உள்ளதென சான்றிதழ் கொடுத்து விட்டார்கள் என்று கூறி மக்கள் உயிருடன் இந்திய அரசு விளையாடிக் கொண்டிருக்கிறது.

வறட்சி - பஞ்சம்; வெள்ளம் - கடுங்குளிர், கொள்ளை நோய்கள் ஆகியவற்றுக்கு ஆண்டு தோறும் தொடர்ச்சியாக ஆயிரக் கணக்கில் இந்திய மக்கள் பலியாகி வருகிறார்கள். இரு மாதங்களுக்கு முன்பு நாக்பூர் அருகே ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கினால் நூற்றுக் கணக்கானோர் மாண்டு போயினர். மக்கள் உயிரை எவ்வளவு அற்பமாக அதிகாரத்திலிருப்பவர்கள் கருதுகிறார்கள் என்பதற்கு இவையெல்லாம் சாட்சியங்கள்.

அடிக்கடி தனது போக்கை மாற்றிக் கொண்டு பேரழிவுகளை ஏற்படுத்திய மஞ்சள் நதியை கட்டுப்படுத்தவும் பூகம்பத்தின் பேரழிவுகளை சமாளிக்கவும் சீனாவிலும் கூட உழைக்கும் மக்களின் அரசு அவசியமாயிருந்தது. அதைப் போன்றதொரு புதிய அரசின் கீழ்தான் இயற்கையின் சீற்றங்களிலிருந்து உழைக்கும் மக்கள் தம்மை தற்காத்துக் கொள்ள முடியும்.

● பாலன்.

படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

ஏழாம் ஆண்டு

1

16-30 நவம் '91

உள்நாடு:
தனி இதழ்: ரூ.2.50
ஆண்டு சந்தா: ரூ.60

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 15

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

இரா.சண்முகராசு
ஆசிரியர், புதிய ஜனநாயகம்
21, பாலாஜிசிங் தெரு,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# பேரிடியென விலைவாசி ஏற்றம்

விலைவாசியேற்றம் நடுத்தர வர்க்கத்தினரையே மூச்சுத்திணறும்படி செய்கிறது. 'தினசரிப் பத்திரிக்கை, இரண்டு வேலை பால், மாதம் இரண்டுமுறை கறி - மீன், இரண்டு சினிமா என்பதை எல்லாம் நிறுத்திவிட்டோம்; விக்கிற விலைவாசியிலே இதெல்லாம் ஆடம்பரமாகிவிட்டன. மாதம் சராசரி 50 ரூபாய் வீதம் விலை ஏறிக்கொண்டே போகிறதே, என்ன செய்வது' என்று புலம்புகிறார்கள் இந்த நடுத்தரவர்க்கத்தினர். அப்படி இருக்கும்போது அடித்தள ஏழை எளிய மக்களை இந்த விலைவாசி ஏற்றம் எவ்வளவு தூரம் பாதிக்கிறது என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஏறக்குறைய அரைப்பட்டினி நிரந்தரமாகிவிட்டது. 'முன்பு ரொட்டியோடு பருப்பு வைத்துக் கொள்வேன்; பிறகு ரொட்டிக்கு வெங்காயம் கடித்துக் கொண்டேன்; இப்போது வெறும் ரொட்டி - அது கிடைத்தால் கூடப்போதும் என்றாகிவிட்டது' என்கிறார் ஒரு வடநாட்டுக்காரர் இப்படி அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய், உப்புப் புளி, மிளகாய் ஆகிய எல்லாமே யானை விலை, குதிரைவிலையாகிவிட்டது. உணவுப் பொருட்களுக்கே இந்த நிலை என்கிறபோது துணிமணிகள், மருந்துகள் போன்ற வேறு பொருட்களின் விலையோ அதன் நேரடியான பொருளிலேயே விண்ணை முட்டுவதாக உள்ளது.

இப்போது மத்தியிலும் மாநிலத்திலும் ஆளும் கட்சிகள் என்ன சொல்லிக் கடந்த தேர்தல்களில் ஓட்டுப் பொறுக்கி ஆட்சிக்கு வந்தன? ஆட்சிக்கு வந்த நூறு நாட்களிலேயே 1989 நவம்பரில் இருந்த நிலைக்கு விலைவாசியைக் குறைத்துவிடுவோம் என்றார்கள் ''ஆனால், விட்டுவிட்டு விலைவாசி ஏறுவது என்பதுதான் முன்பெல்லாம் வழக்கமாக இருந்தது. இப்போதோ இடைவெளியின்றி ஏறுமுகமாகவே இருக்கிறது.

கடந்த 10 ஆண்டுகளில் அதிகபட்ச விலையேற்றம் கடந்த அக்டோபரில் ஏற்பட்டுள்ளது. விலையேற்றத்தைக் குறிக்கும் பணவீக்கம் 15.5 சதவீதத்தை எட்டியுள்ளது. 1972 - 74 மற்றும் 1978 - 80 ஆகிய ஆண்டுகளுக்குப் பிறகு அவற்றையும்விட அதிகமாகிய பணவீக்கம் இப்போது இந்தக் குறியீட்டைத் தொட்டு நிரந்தரமாகிவிட்டது. இது குறைவதற்கான சாத்தியக் கூறுகளையே காணோம்; மேலும் கூடுவதற்கான வாய்ப்பே தென்படுகிறது என்கின்றனர் பொருளாதார நிபுணர்கள். மத்திய, மாநில ஆட்சியாளர்களோ தமக்கு முந்தைய அரசுகள் தான் இந்த மோசமான பொருளாதார நிலைக்குக் காரணம் என்று திரும்பத் திரும்பப் புளுகுகின்றனர். உண்மையில் இவர்கள் ஆட்சிக்கு வந்தபோது பணவீக்கம் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டிருந்தது; அதை மேலும் குறைப்பதற்கான வாய்ப்பும் இருந்தது.

ஆனால், விலைவாசியேற்றத்துக்குக் காரணமானவை என பல்வேறு பொய்களைச் சொல்லிப் பாமர மக்களை ஏய்த்திடவே திரும்பத் திரும்ப ஆட்சியாளர்கள் முயலுகிறார்கள். நல்ல மழை விளைச்சலைப் பொருத்தே விலைவாசி, குறிப்பாக உணவுப் பொருட்களின் விலை குறையும் என்கிறார்கள். அப்படியானால் கடந்த மூன்றாண்டுகளாக நல்ல மழையும் விளைச்சலையும் கண்டுள்ளோம்; குறிப்பாக காவிரியில் போதிய நீர்வரத்தும் குறுவைப் பயிர் சாகுபடியும் கண்டும்கூட அரிசிவிலை கிடுகிடுவென ஏறுவது ஏன்? விலையேற்றத்துக்கு இன்னொரு காரணமாக கடத்தல் - பதுக்கல், கள்ளச் சந்தை - ஊக வணிகம் ஆகிய வர்த்தக சூதாடிகளின் கைவரிசை எனக்கூறித் தட்டிக் கழிக்கிறார்கள். இது வழக்கமானதுதான்; இந்த வர்த்தகச் சூதாடிகளின் கொள்ளையில் ஆளும் கட்சிகளுக்கும் அதிகாரிகளுக்கும் பங்குண்டு என்பதும் அறிந்ததுதான். இவை ஒருபுறம் இருக்க விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தும் - குறைக்கும் வகையில் புதிய ஆட்சியாளர்களின் பொருளாதாரக் கொள்கை உள்ளதா என்பதே கேள்விக்குரியது.

இந்த ஆட்சியாளர்கள் பதவி ஏற்றதும் முதல் காரியமாக சில தொழில் மற்றும் நிதிக் கொள்கைகளை ரகசியமாகவும், வெளிப்படையாகவும் அமுல்படுத்தினார்கள். இரண்டு தவணைகளில் ரூபாயின் மதிப்பைக் குறைத்தும், பல தவணைகளில் அந்நியக் கடன் வாங்கியும், தங்கக் கையிருப்பை அடகு வைத்தும் முதல் நடவடிக்கையில் இறங்கினர். இதனால் ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்களின் விலையேறியது. அரிசி, காய்கறி - பழங்கள், கார வகைகள், துணிமணிகள் ஆகிய ஆதாரப் பொருட்களின் ஏற்றுமதி மதிப்பு 40 சதவீதம் உயர்ந்தது. விலையேற்றத்துக்கு இது ஒரு முக்கிய காரணம். பட்ஜெட் பற்றாக்குறையை ஈடுகட்டுவதற்காக மானியங்களை, குறிப்பாக உரமானியங்களை வெட்டியதால் உரவிலையேற்றம் விவசாயத்தைப் பாதித்தது. விவசாய விளைபொருட்களுக்கு, குறிப்பாக உணவு கொள்முதல் விலையையும் அரசு உயர்த்தியது. மொத்தத்தில் விவசாயத்துறைப் பொருட்களின் விலை 10 சதவீதம் உயர்ந்தது. ஆண்டு இறுதியில் விலைவாசிகள் இறங்குவதாகத் தோற்றமளிக்கும். ஆனால், அரசின் புதிய கொள்கைகளினால் நேரடிப் பாதிப்புக்குள்ளாகும் கச்சாப் பொருட்கள், இடைத்தர மற்றும் மூலதனப் பொருட்களின் விலையேற்றம் இன்னும் முழுமையாகத் தெரியவில்லை; அதுவும் சேர்ந்து கொண்டால் விலையேற்றவும் மக்களை அகல பாதாளத்துக்கே தள்ளிவிடும் .

இதன் மதிப்புகளை குறைத்து மதிப்பீடு செய்ததோடு, பட்ஜெட் பற்றாக்குறையை ஈடு செய்வதற்காக அரசே கட்டுப்படுத்தும் தொழில், வர்த்தகங்களிலும் கட்டணம் - விலையேற்றி சுமையை மக்கள் மீது திணித்தது. அரசின் இந்தப் புதிய பொருளாதார - நிதி, வர்த்தக மற்றும் தொழில் கொள்கைகளும், நடவடிக்கைகளும் தான் இப்போதைய விலைவாசி ஏற்றத்துக்கான காரணம். ஆனால், இந்தக் கொள்கைகளும் நடவடிக்கைகளும் புரட்சிகரமானவை என்றும் எவ்வித தடங்கலும், தளர்வும், சமரசமும் இல்லாது இவற்றைத் தொடரப் போவதாகவும் மீண்டும் மீண்டும் மத்திய, மாநில அரசுகள் சவடால் அடிக்கின்றன. உண்மையில் இவை ஏகாதிபத்திய, மேல்நிலை வல்லரசுகள் மற்றும் அவற்றின் சர்வதேச நிதி நிறுவனம் (ஐ.எம்.எஃப்), உலக வங்கியின் உத்தரவுகளின் பேரில் தண்டலிட்டு அமுல்படுத்தப்படுபவை. இதை அறியாத அரசியல் நோக்கர்களே கிடையாது. இந்நிலையில் மீண்டும் ரூபாயின் மதிப்பைக் குறைக்கும்படி ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள் நிர்பந்திக்கின்றன. இதோடு அந்நியக் கடனும், அதற்கான வட்டி அதிகரிப்பு மேலும் விலைவாசி ஏறச் செய்து நாட்டை திவாலாக்கி மறுகாலனியாக்கிவிடும்.

படிப்பகம்

www.padippakam.com

## அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களின் அட்டகாசங்கள்

# பாசிச ஜெயா கும்பலின் ரெளடி ராச்சியம்!

"நான் திராவிட இயக்கத்தின் புதிய பரிணாம வளர்ச்சி" என்று ஆட்சிக்கு வந்த சில நாட்களிலேயே பெருமையாக அறிவித்துக் கொண்டார் முதல்வர் ஜெயலலிதா. சட்டமன்றத்தில் பண்ருட்டி ராமச்சந்திரன் மீது தாக்குதல், பரிதி இளம்வழுதியின் வேட்டியை உருவி சாதியைச் சொல்லி அவமானப்படுத்தி வெளியே வீசியது, மத்திய மந்திரி சிதம்பரத்தின் மீது தாக்குதல் என்று ரெளடித்தனங்களை ஏவிவிட்டு ரசித்த ஜெயா, அதன் பிறகு மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு, மாணவர்கள் மீது தாக்குதல், ஜெயாவின் பார்ப்பன - பாசிச ஆட்சியை எதிர்ப்போரை கொடிய கருப்புச் சட்டங்களின் கீழ் சிறையிலடைத்தது என அதிரடி தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டு அடக்குமுறையில் புதிய பரிணாம வளர்ச்சி பெற்று பாசிசத் தலைவியாக உயர்ந்தார். பாசிசத் தாய் எட்டடி பாய்ந்தால் குட்டிகள் பதினாறு அடி பாயாதா என்ன! இப்போது அ.தி.மு.க. மந்திரிகளும், மாவட்டங்களும், எம்.எல்.ஏக்களும் தம்பங்குக்கு அட்டகாசங்களை அரங்கேற்றி ரெளடித்தனத்தில் புதிய பரிணாம வளர்ச்சியை சாதித்து வருகின்றனர்.

★ மதுராந்தகம் தொகுதியின் எம்.எல்.ஏ. சொக்கலிங்கம். கடந்த அக் 10-ந் தேதியன்று பொதுப் பணித்துறை அலுவலகத்துக்குச் சென்ற எம்.எல்.ஏ. பொறியியலாளர் வேலாயுதத்திடம் யார் யாருக்கு காண்டிராக்ட் கொடுக்கப்பட்டுள்ளது என்கிற விபரம் கொண்ட "எம் புக்"கை தன்னிடம் காட்டுமாறு கோரினார். "அது ரகசிய ரெகார்டு; உயரதிகாரி அனுமதியின்றி காட்ட முடியாது" என்று விதிகளைக் காட்டி பொறியியலாளர் மறுக்கவும், ஆத்திரமடைந்த சொக்கலிங்கம் அவரைத் தரக்குறைவாக பேசியதோடு, தனது வீட்டிற்கு வரவழைத்து அடியாட்களுடன் சேர்ந்து கொண்டு காட்டுமிராண்டித்தனமாக தாக்கினார்.

இச்செய்தி பரவியதும் ரெளடி எம்.எல்.ஏ. மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மாவட்டம் முழுவதும் பொறியியலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அதன் பிறகு போலீசார் ஜெயாவிடம் நிலைமையின் விபரீதத்தை விளக்கி அவர் உத்திரவிட்ட பின்னரே எம்.எல்.ஏவைக் கைது செய்தனர். இச்சம்பவத்துக்கு முன்தினம் ரேஷன் கடைக்குச் சென்ற எம்.எல்.ஏ. அங்குள்ள ஊழியர்கள் ஊழலில் ஈடுபடுவதாக ஆபாசமாகப் பேசி, கடையைப் பூட்டிக் கொண்டு சாவியைத் தர மறுத்து அடாவடித்தனம் செய்தார்.

★ அதிகாரிகளை மிரட்டி அடியாட்களைக் கொண்டு மிரட்டும் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்களின் வரிசையில் சேர்ந்துள்ள இன்னொருவர் செங்கம் தொகுதியின் எம்.எல்.ஏ. வீரபாண்டியன். அவர் மட்டுமல்ல; அவரது மகளான விநோதினி, பஞ்சாயத்து யூனியன் பி.டி.ஓ.வுக்குப் போன் செய்து மிரட்டுமளவுக்கு வளர்ந்துள்ளார். இத்தனைக்கும் விநோதினிக்கு வயது 12 தான்!

கடந்த மாதத்தில் சத்துணவுக் கூட ஆயாக்கள் சிலரை இடமாற்றம் பண்ணச் சொல்லி பி.டி.ஓ.வை வீரபாண்டியன் மிரட்ட, விதிமுறைகளின்படி சாத்தியமில்லை என்று அவர் மறுக்கவும் எரிச்சலடைந்த எம்.எல்.ஏ. தனது அடியாட்களை பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் கலாட்டா செய்ய ஏவிவிட்டார்.

இதைத் தொடர்ந்து கடந்த அக்.11-ந் தேதியன்று எம்.எல்.ஏ.வின் அட்டகாசத்தைக் கண்டித்து பஞ்சாயத்து யூனியன் ஊழியர்கள் ஊர்வலம் நடத்தினர். அந்த ஊர்வலத்திலும் எம்.எல்.ஏ.வின் அடியாட்கள் புகுந்து ஆபாசமாகப் பேசி அட்டகாசம் செய்து ஊழியர்களை மிரட்டினர். ஊழியர்கள் போலீசிடம் புகார் செய்த பிறகு வேறு வழியின்றி அடியாட்கள் கைது செய்யப்பட்டனர். ஆனால் சிறிது நேரத்தில் போலீசு நிலையத்துக்கு வந்த எம்.எல்.ஏ. தனது எடுபிடிகளை வழக்கு ஏதுமின்றி மீட்டுக் கொண்டு போனார்.

★ புவனகிரி சட்டமன்ற எம்.எல்.ஏ. மல்லிகா. இவரது அக்காள் கணவர் பெயர் ராஜாராம். இத்தொகுதியைப் பொருத்தவரை இவர்தான் நிஜ எம்.எல்.ஏ. புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தில் சத்துணவு ஆயா வேலைக்கு தனது ஆட்களைப் போடச் சொல்லி மேலாளர் கிருஷ்ணமூர்த்தியை ராஜாராம் மிரட்டினார். அவர் பணிய மறுத்ததால், 30 பேர் கொண்ட தனது அடியாட்களை ஏவி அலுவலகத்திலேயே தாக்கினார். இதைக் கண்டித்து 2.8.91 அன்று சிதம்பரத்தில் 5 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த ஊழியர்கள் மௌன ஊர்வலம் நடத்தினர். அதன் பிறகு கைது செய்யப்பட்ட ராஜாராமை, எம்.எல்.ஏ. மல்லிகா தனது குண்டர்களுடன் வந்து போலீஸ் நிலையத்தை முற்றுகையிட்டு மீட்டுக் கொண்டு போனார்.

★ திருச்சி 2-வது தொகுதி எம்.எல்.ஏ.வான மாலாவும் அவரது குடும்பமும் நடத்தும் அட்டூழியங்களைப் பார்த்து திருச்சி நகரமே பீதியில் உறைந்து போயுள்ளது. அண்மையில் மாலாவின் தந்தை ராஜனும், அவரது தம்பிகள் இருவரும் அடியாட்களுடன் சேர்ந்து கொண்டு ஜெயா எனும் விதவைத் தாயின் வீட்டைச் சூறையாடி குடும்பத்தி

வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட வரும் ஜெயாவுக்கு ஏ.கே.47 ரக துப்பாக்கியுடன் பாதுகாப்பு; அவரை ஆதரிக்கும் மக்களுக்கு எங்கே பாதுகாப்பு?





படிப்பகம்

www.padippakam.com

னரை மிருகத்தனமாக தாக்கி பட்டப்பகலிலேயே அட்டூழியம் புரிந்தனர். ஏற்கனவே மாலாவின் குடும்பம பல்வேறு ரௌடித்தனங்களில் இறங்கி அம்பலப்பட்டுப் போயுள்ளதால், வேறு வழியின்றி ஜெயாவின் உத்திரவுக்குப் பிறகு எம்.எல்.ஏ.வின் தந்தையும் தம்பிகளும் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

★ ...பாடி தொகுதியின் எம்.எல்.ஏ. பன்னீர்செல்வம். இத்தொகுதியிலுள்ள எந்த கூட்டுறவு சங்கமானாலும் இவர்தான் ஊழியர்களுக்கு நியமன உத்திரவு போடுகிறார். ...வின் பிடியிலிருந்த சங்கத்துக்கு எதிராக போட்டி கூட்டுறவு சங்கத்தை ஏற்படுத்தி பால் உற்பத்தியாளர்களை தனது சங்கத்துக்கே விற்க வேண்டுமென அடாவடித்தனம் செய்து வருகிறார். இதனால் பால் உற்பத்தியாளர்கள் தாங்கள் உறுப்பினர்களாக உள்ள பழைய சங்கத்துக்கு பாலை விற்க முடிவதில்லை. மீறி விற்றால் அடியாட்கள் வந்து தாக்குகின்றனர்; போலீசு பொய் வழக்குகளில் பிடித்துச் செல்கிறது.

★ சங்கராச்சாரியின் சிபாரிசினாலும் ஜெயாவின் தயவினாலும் எம்.எல்.ஏ.வாகியுள்ளார், கும்பகோணம் குடுமி பார்ப்பனர் ராமநாதன். இத்தொகுதியில் மல்லிகா என்பவர் ஒரு கள்ளச் சாராய வியாபாரி. மல்லிகா மீது எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று போலீசாருக்கு உத்திரவிட்டுள்ளார் எம்.எல்.ஏ. ஏனெனில் மல்லிகாவிடமிருந்து வாரம் ரூ.5,000 மாமூல் வந்துவிடுகிறது. அம்மாசி என்பவன் ஒரு கஞ்சா வியாபாரி. அவனை உள்ளூர் போலீசார் பிடித்து உள்ளே தள்ள, ராமனாதன் உடனே போலீசாரை உருட்டி மிரட்டி அம்மாசியை மீட்டு வந்துவிட்டார். இந்த லட்சணத்தில், குடுமி எம்.எல்.ஏ. ராமனாதன் சாராய ஒழிப்பு மாநிலக்குழுவில் ஒரு உறுப்பினராகவும் உள்ளார்.

நான்தான் அடுத்த அறநிலையத்துறை அமைச்சர் என்று இத்தொகுதியிலுள்ள கடைகளில் வசூல் வேட்டை நடத்தும் இவரது அடாவடித்தனங்களை எதிர்த்து அ.தி.மு.க. உள்ளிட்டு சர்வ கட்சியினரும் கூட்டாக கண்டனக் கூட்டம் நடத்துமளவுக்கு தொகுதியில் இவர் 'புகழ்' பரவியுள்ளது.

★ திருச்சி மாவட்டம் முசிறி தொகுதியில் கடந்த ஆகஸ்ட் 24-ந் தேதியன்று இடைத் தேர்தல் நடந்தபோது, கொடுந்துறை வாக்குச் சாவடியில் கட்சி சின்னம் பொறித்த பேட்ஜ் உடன் உள்ளே நுழைய முயன்ற உப்பிலியாபுரம் எம்.எல்.ஏ ரவிச்சந்திரனை போலீசுக்காரர் சுப்பிரமணி, பேட்ஜை கழட்டி வைத்து விட்டுச் செல்லுமாறு கூறியிருக்கிறார். ஆத்திரமடைந்த எம்.எல்.ஏ தனது அடியாட்களுடன் வந்து போலீசுக்காரர் சுப்பிரமணியை தெருவில் இழுத்துப் போட்டு துவைத்ததோடு, தனது செருப்பைக் கழட்டியும் அடித்துள்ளார்.

★ ராசிபுரம் தொகுதி எம்.எல்.ஏ பழனியம்மாளுக்கு இந்த ஆண்டு தலை தீபாவளி. பட்டு நெசவாளர்கள் நிறைந்த தொகுதி என்பதால், ராசிபுரம் கூட்டுறவு சங்கங்களுக்கு தனது கணவருடன் "விசிட்" செய்த எம்.எல்.ஏ. கட்டாய தீபாவளி அன்பளிப்பாக




டஜன் கணக்கில் பட்டுப் புடவைகளை சுருட்டிக் கொண்டு போனார்.

★ தூத்துக்குடியின் புகழ்பெற்ற ரௌடியான ரமேஷ், ஜெயாவின் குடும்ப நண்பரான நடராஜன் தயவில் வெற்றி பெற்று எம்.எல்.ஏ. ஆகியுள்ளார். ஆனாலும் இவரது அட்டூழியங்கள் சற்றும் குறையாமல், தொகுதியிலும் வெளியிலும் எல்லை மீறியது. ஜெயாவின் ரகசிய உத்திரவுப்படி, அ.தி.மு.க.வினரே இவரை வழி மறித்து தாக்கி மண்டையைப் பிளந்தனர். இவரது கூட்டாளிகள் நால்வரை கஞ்சா கடத்தியதாக போலீசார் பொய் வழக்குப் போட்டு உள்ளே தள்ளியுள்ளனர். மருத்துவமனையில் கிடக்கும் இந்த எம்.எல்.ஏ.வை எந்தவொரு அ.தி.மு.க.வினரும் இதுவரை எட்டிக்கூட பார்க்கவில்லை.

— இவையெல்லாம் ஜெயலலிதா தானே தேர்ந்தெடுத்து, வேட்பாளர்களாக நிற்க வைத்து, எம்.எல்.வாக்கிய கழகக் கண்மணிகளின் அண்மைக்கால சாதனைகள். கிசுகிசு பத்திரிக்கைகள் மட்டுமின்றி ஜெயாவுக்குத் தாளம் போடும் பத்திரிக்கைகளே சகிக்க முடியாமல் செய்தி வெளியிடுமளவுக்கு எம்.எல்.ஏ.க்களின் அட்டகாசங்கள் எல்லை மீறி தமிழகமே ரௌடிகளின் ராஜ்ஜியமாகிவிட்டது. எம்.எல்.ஏக்களே இப்படியென்றால் அவர்களின் கைத்தடிகளான ரௌடிகளின் அட்டகாசங்களைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை.

ரேஷன் கடைகள் தினமும் ரூ.100/- மாமூல் தரவேண்டுமென மிரட்டுவது, கள்ளச் சாராயத்தை விற்பது, புறம்போக்கு நிலங்களை அபகரிப்பது, தியேட்டர்களில் ஆபாச மலையாளப் படங்களை ஓட்ட ஒத்துழைப்பாக இருந்து மாமூல் கறப்பது, எதிர்க் கட்சித் தொண்டர்களை வம்புக்கு இழுத்து தாக்குவது, பொது மக்களிடமும் கடைகளிலும் 'அம்மா' பெயரைச் சொல்லி கட்டாய நிதி வசூல் செய்வது என்பதாக அ.தி.மு.க. ரௌடிகளின் கொட்டம் தலைவிரித்தாடுகிறது. இவை மட்டுமல்ல; ஜெயாவின் பாசிச ஆட்சியை எதிர்க்கும் புரட்சிகர - ஜனநாயக இயக்கத்தவர்களைத் தாக்குவது, வீடு புகுந்து பெண்களை மிரட்டுவது, ஜெயா ஆட்சியை விமர்சித்து ஒட்டப்படும் சுவரொட்டிகளையும், பிரச்சார தட்டிகளையும் கிழித்தெறிவது, புரட்சிகர இயக்கத்தினரை போலீசுக்கு காட்டிக் கொடுக்கும் ரகசிய உளவாளிகளாகச் செயல்படுவது என பாசிச குண்டர் படையாக இக்கும்பல் வளர்ந்து வருகிறது.

தனது பாசிச நடவடிக்கைகளால் மக்கள் அதிருப்தியும் ஆத்திரமும் அடையும் போது, அமைச்சர்களுக்கு கல்தா கொடுப்பது, மாவட்டச் செயலாளர்களைப் பந்தாடுவது என்கிற அதிரடி அரசியலின் மூலம் மக்களின் கவனத்தை திசை திருப்பி தனது ஆட்சியும் கட்சியும் களங்கமற்றது என காட்டிக் கொள்வது பாசிச எம்.ஜி.ஆரின் உத்தி. அதே பாணியில்தான் எம்.எல்.ஏ.க்கள் மீது நடவடிக்கை எடுப்பது, கட்சி நிர்வாகிகளைக் கூட்டி வைத்து புகார்களைப் பரிசீலிப்பது, அரசுப் பணிகளில் குறுக்கீடும் எம்.எல்.ஏ.க்கள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்குமாறு காவல்துறைக்கு உத்திர விடுவது என்று நாடகமாடுகிறார், பாசிச ஜெயா.

பாசிச ஜெயா கும்பல் மேற்கொள்ளும் மக்கள் விரோத நடவடிக்கைகளால் அவற்றுக்கு எதிராக மக்கள் போராட்டங்கள் பெருகத் தொடங்கும் போது அவற்றை அடக்குவதற்குத் தயாராக இந்த எம்.எல்.ஏ.க்களும் அடியாட்களும் இருப்பார்கள். தனது பாசிச ஆட்சியை நிலை நிறுத்திக் கொள்ள இத்தகைய பாசிச குண்டர் படை ஜெயாவுக்கு மிக அவசியமானது. பாசிச ராஜீவ் சாவைத் தொடர்ந்து ரௌடித்தனத்திலும் சூறையாடலிலும் ஈடுபட்டுக் கைதான அ.தி.மு.க. - காங்கிரசு குண்டர்கள் மீது எந்த வழக்குமின்றி விடுதலை செய்தவர்தான் பாசிச ஜெயா. மதுசூதனன் போன்ற அடியாட்களையே மந்திரியாக்கியுள்ளவர் தான் அவர். எனவே ரௌடித்தனத்தில் இறங்கும் எம்.எல்.ஏ.க்கள் மற்றும் குண்டர்களைக் களையெடுப்பதல்ல அவர் நோக்கம். மாறாக, எல்லை மீறிப் போய் அம்பலப்பட்டு விடாமல் தடுக்கவே தற்போது எச்சரிக்கை விடுக்கிறார்.

இவற்றையெல்லாம் மூடி மறைத்து விட்டு, தனது கட்சி எம்.எல்.ஏ.க்கள் மீதே நடவடிக்கை எடுத்து பாசிச ஜெயா மக்களுக்கு தொண்டாற்றுவதாக விசுவாச பத்திரிக்கைகள் பிரமையூட்டுகின்றன. ஆனால் அ.தி.மு.க. என்பதே கவர்ச்சி வாதத்தை அடிப்படையாகக் கொண்ட பிழைப்பு வாதக் கட்சி. கள்ளச்சாராய வியாபாரிகள், பிழைப்பு வாத அரசியல் வாதிகள், துதிபாடிகள், ரௌடிகள் - குண்டர்களைக் கொண்ட கூடாரம். பார்ப்பனீயத்தையும், பாசிசத்தையும் சுமந்து வரும் பல்லக்கு. நாடாளுமன்ற ஜனநாயகத்தின் இழிந்த இறுதி வடிவமான பொறுக்கி அரசியலின் இலக்கண சுத்தமான எடுத்துக்காட்டுதான் அ.தி.மு.க.

எனவே மாண்புமிகு மக்கள் பிரதிநிதிகளின் அரசியல் பண்பாட்டுத் தரம் தாழ்ந்து விட்டதாகக் கருதி நாய் வாலை நிமிர்த்தி விட முடியாது. அ.தி.மு.க. ரௌடிகளின் அட்டகாசங்களுக்கு எதிராக புரட்சிகர அமைப்புகளில் திரண்டு உழைக்கும் மக்கள் எதிர்த்தாக்குதல் தொடுக்க வேண்டும். ரௌடி ராஜ்ஜியத்துக்கு எதிரான போராட்டத்தை பாசிச எதிர்ப்பு போராட்டமாக வளர்த்தெடுக்க வேண்டும்.

● மாணிக்க வாசகம்

www.padippakam.com

# ஜெர்மனிக்கு நாஜிகள் இந்தியாவுக்கு பாரதீயஜனதா

இந்து மதக் கோட்பாட்டின்படி கோயிலை இடிப்பது பாவச்செயல்! சாலையோரத்தில் திடீர் பிள்ளையார் கோயில்களை உருவாக்கி போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள அவற்றைக் கூட அகற்ற மறுத்து அடம்பிடிக்கும் இந்துவெறியர்கள் இப்போது தாங்கள் புனிதமாகக் கருதி வழிபடும் கோயில்களையே இடிக்கத் தொடங்கி விட்டார்கள். அயோத்தியிலுள்ள பாபர் மசூதியை இடித்து, ராமர் கோயில் கட்டப் புறப்பட்டுள்ள இந்து வெறியர்கள் இம்மாத துவக்கத்தில் அப்பகுதியிலுள்ள சிறிய கோயில்களையே இடித்து 'கரசேவை' நடத்தியுள்ளனர்.

அயோத்தியிலுள்ள பாபர் மசூதியின் எதிரே தனிப்பட்ட சில சாமியார்கள், மகந்துகளின் பொறுப்பில் ராம்-ஜானகி கோயில், சத்ருகன் கோயில், சங்கத் மோட்ச கோயில், சக்ஷி கோபால் கோயில் முதலான கணக்கற்ற சிறிய கோயில்கள். உள்ளன. கடவுள் ராமன் இங்குதான் பிறந்தான். இதுதான் ராமஜென்ம பூமி என்று ஒவ்வொரு சாமியாரும் தமது கோயிலையே உயர்வாகப் பேசினர். அயோத்திக்கு வரும் பக்தர்களும் இச்சிறிய கோயில்களுக்குச் சென்று தரிசிப்பதை மரபாகக் கொண்டிருந்தனர்.

இப்போது இச்சிறிய கோயில்கள்ளயும் இந்து வெறியர்கள் இடித்துத் தள்ளிவிட்டார்கள். ராமஜென்ம பூமி என்றால் அது பாபர் மசூதியில் இந்துவெறியர்கள் திருட்டுத்தனமாக ராமர் சிலையை வைத்துள்ள இடம் தான்; அதுதான் ''ஒரிஜினல் `ராமஜென்ம பூமி'' என்று நிலைநாட்டுவதற்காக மற்ற சிறிய ராமர் கோயில்களை இடித்து எந்த வரலாற்றுத் தடயமும் இல்லாமல் அழிக்கும் 'கரசேவை'யில் இறங்கியுள்ளனர். ஏனெனில் இங்குள்ள சில சிறிய கோயில்கள் 40 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வருகின்றன. இதையே ஒரு வரலாற்று ஆதாரமாகக் காட்டி போட்டிக் குழுக்களும் எதிர்க்கட்சிகளும் வாதிட இடமளித்து விடக் கூடாது என்பதற்காக அந்நிலங்களையும், கோயில்களையும் பலாத்காரமாக கைப்பற்றி இடித்து, தடயங்களை அழிப்பதில் இந்துவெறியர்கள் இறங்கியுள்ளனர்.

''பைசாபாத் தொகுதி (அயோத்தி இந்த தொகுதியில் உள்ளது) எம்.பியும் பஜ்ராங்தள தலைவருமான வினய் கத்தியார் 200 குண்டர்களுடன் திரண்டு வந்து என்னை மிரட்டினார். அவர்கள் கொடுத்த ஒரு லட்ச ரூபாயை வாங்கிக் கொண்டு வெளியேறுவதைத் தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை'' என்கிறார் ராம்-ஜானகி கோயிலைப் பராமரித்து வந்த பூசாரியான பல்ஹாரி பாபா. இதேபோல இந்து வெறியர்களின் சூலாயுத மிரட்டலுக்கு அஞ்சி ரூ.27,000-ஐப் பெற்றுக் கொண்டு சத்ருகன் கோயிலை விட்டு வெளியேறி விட்டார், சாமியார் கேசவதாஸ். ''இது எங்கள் ராஜ்ஜியம். நாங்கள் என்ன நினைக்கிறோமோ அதை சாதிப்போம் என்று அவர்கள் மிரட்டும்போது பணத்தைப் பெற்றுக் கொண்டு வெளியேறுவதைத் தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை'' என்கிறார் கேசவதாஸ்.

இன்று ராம்-ஜானகி கோயிலும், சத்ருகன் கோயிலும் தரைமட்டமாகி விட்டன. 40 ஆண்டுகளுக்கும் மேலாக இவற்றைப் பராமரித்து வந்த பூசாரிகளும் மகந்துகளும் இன்று நடுத்தெருவில் நிற்கின்றனர்.

மசூதி அருகே தாவாவுக்குட்படுத்தப்பட்ட நிலப்பகுதியில் ஏறத்தாழ நூறாண்டுகளாக சக்ஷி கோபால் கோயில் உள்ளது. இக்கோயிலின் தலைமைப் பூசாரியான ராம் கிரிபால் தாஸ், ''வினய்கத்தியாரும், விசுவ இந்து பரிஷத்தின் தலைவர் அசோக் சிங்காலும் என்னை கரசேவகர் முகாமுக்கு இழுத்துச் சென்று மிரட்டினர். கோயிலையும் அடுத்துள்ள சிறிய அறைகளையும் ஒப்படைக்காவிட்டால் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று என்னை அச்சுறுத்தினர்'' என்கிறார். இங்குள்ள கிருஷ்ண விக்ரகத்தை இடிக்கவோ வேறிடத்துக்கு மாற்றவோ மாட்டோம் என்று பூசாரியிடம் சத்தியம் செய்த இந்து வெறியர்கள், இப்போது அக்கோயிலை பாதிக்குமேல் இடித்துத் தள்ளிவிட்டனர். சுருக்கமாகச் சொன்னால், எதைச் சொல்லி பாபரையும், கஜினி முகமதுவையும் இந்துக்களின் எதிரிகளாக சித்தரிக்கிறார்களோ, அதையேதான் இப்போது அயோத்தியில் இந்து வெறியர்கள் செய்துள்ளனர்.

இத்தனைக்கும் பிறகும் எந்த சங்கராச்சாரியோ, சாமியாரோ வாய் திறக்கவே இல்லை. அப்படி ஏதாவது பேசினால், அவர்கள் இந்துக்களின் எதிரிகள் என்று முத்திரை குத்தப்பட்டு இந்து வெறியர்களால் தனிமைப்படுத்தப்படுவார்கள், தாக்கப்படுவார்கள் என்ற பீதியே காரணம். தாவாவுக்குட்படுத்தப்பட்ட நிலப்பகுதியை உ.பி அரசு கையகப்படுத்தியதை அலகாபாத் உயர்நீதி மன்றம் அங்கீகரித்த போதிலும், அங்கே கட்டிடம் கட்டுவதோ இடிப்பதோ கூடாது என்று தீர்ப்பளித்திருந்தது. ஆனாலும் தற்போது சிறிய கோயில்கள் இடிக்கப்பட்டபோது நீதித்துறை மௌனமாக நின்று வேடிக்கைப் பார்த்தது. கோயில்களை இடிக்க வன்முறையை ஏவியதாக எங்களுக்கு எந்த புகாரும் வரவில்லை என்று நீதித்துறையும் அதிகாரவர்க்கமும் இந்து வெறியர்களுக்கு ஆதரவாக கைகட்டி நின்று சேவகம் செய்தன.

பஜ்ராங்தள குண்டர்படை தளபதியான வினய் கத்தியார் இன்னும் ஒருபடி மேலே போய், ''இவை கோயில்களே அல்ல'' என்று ஒரு புதிய கண்டுபிடிப்பைச் செய்துள்ளார். ''அயோத்திக்கு வரும் பக்தர்களின் ஆத்ம திருப்திக்காக இவை அமைக்கப்பட்டன. இங்குள்ள பூசாரிகளும் மகந்துகளும் கூலிக்கு வேலை செய்பவர்கள்தான். அவர்களுக்கும் இச்சிறிய கோயில்களுக்கும் எந்த உரிமையும் கிடையாது'' என்கிறார். விசுவ இந்து பரிஷத்தின் உள்ளூர் தலைவர்களில் ஒருவர், ''நாங்கள் கோயிலை இடிக்கவில்லை. மறுசீரமைப்பு (புனருத்தாரணம்) செய்கிறோம். இது இந்துமதக் கோட்பாட்டிற்கு எதிரானதல்ல'' என்று நியாயம் கற்பிக்கிறார்.

- இவையெல்லாம் காட்டுவதென்ன? மதவெறியர்களுக்கு மதக் கோட்பாடுகளிலேயே நம்பிக்கையோ அக்கறையோ கிடையாது. மதவெறியும் இனவெறியும் முழுக்க முழுக்க குறிப்பிட்ட அரசியல் பொருளாதார சூழ்நிலைகளிலிருந்து எழுவதாகும். ஆளும் வர்க்கங்கள் தமது அரசியல் பொருளாதார நோக்கங்களுக்காக மக்களை அணிதிரட்டுவதற்கான சாதனமாகவும், வர்க்க

இந்து கோயில்களை இடித்து, தடயங்களை அழிக்கும் கடப்பாரை சேவையில் இந்துவெறியர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

முரண்பாடுகளைத் திசை திருப்பும் கருவியாகவும் மதவெறி பயன்படுத்தப்படுகிறது.

மதக் கடுங்கோட்பாட்டாளர்கள் தங்கள் மதத்தின் மதக்கோட்பாடுகளை வழுவாமல் பின்பற்றவேண்டும் என்றுதான் வலியுறுத்துகிறார்கள். பிற மதத்தினரை அவ்வாறு நிர்ப்பந்திப்பதில்லை. ஆனால் மதவெறியர்கள் அப்படியல்ல; இவர்களுக்கு மதக்கோட்பாடுகள் முக்கியமானதல்ல. அதிகாரத்தைக் கைப்பற்ற வெறிகொண்டு அலையும் தத்தம் மதத்தைச் சேர்ந்த ஆளும் வர்க்கங்களின் பிரதிநிதிகளே இவர்கள். சிறுபான்மை மத-இனத்தவரை அடக்கி மேலாதிக்கம் செய்ய எதையும் செய்யத் தயங்காத பாசிஸ்டுகளே இவர்கள்.

**எதைச் சொல்லி பாபரையும் கஜினி முகமதுவையும் இந்துக்களின் எதிரிகளாக சித்தரிக் கிறார்களோ, அதையேதான் இப்போது இந்துவெறியர்கள் அயோத்தியில் செய்துள்ளனர்.**

தங்கள் மதக்கோட்பாட்டிற்கு எதிராக இந்துக் கோயில்களையே இடித்த மதவெறியர்கள், இப்போது மீண்டும் பாபர் மசூதி மீது தாக்குதல் நடத்தி இரண்டாவது கரசேவையை நடத்தியுள்ளனர். கடந்த ஆண்டில் பாபர் மசூதி மீது தாக்குதல் நடத்திய அதே நாளில் (அக்-30) மீண்டும் இந்துவெறி குண்டர்கள் தாக்குதலை நடத்தியுள்ளனர். மசூதியின் மூன்று கும்பங்களிலும் காவிக்கொடிகள் ஏற்றப்பட்டன. நூற்றுக்கணக்கான பஜ்ராங்தள வானரப்படைகள் போலீஸ் தடையை உடைத்துக்கொண்டு மசூதியின் சுற்றுச்சுவரை இடித்தனர். இந்த அக்கிரமத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த போலீசும் ராணுவமும் எல்லாம் முடிந்த பிறகு தடியடி நடத்தியதே தவிர முன்கூட்டியே மதவெறியர்களைக் கைது செய்ய வில்லை. அதே சமயம், இந்த அட்டூழியங்களை எதிர்த்து தர்ணா போராட்டம் நடத்த அயோத்திக்கு வரத் திட்டமிட்டிருந்த இடதுசாரி - தேசிய முன்னணித் தலைவர்களை ஊருக்குள் நுழையவிடாமல் எல்லையிலேயே கைது செய்தது. அதன்பிறகு, இந்துக் கோயில்களும் மசூதியின் சுற்றுச்சுவரும் இடிக்கப்பட்டது உண்மைதானா என்பதை நேரில் கண்டறிய முன்னாள் காங்கிரசு எம்.பியும் பத்திரிகையாளருமான எம்.ஜே.அக்பரும் முன்னாள் மத்திய மந்திரியுமான சகாயும் ஒரு குழுவாக அயோத்திக்குச் சென்றனர். அவர்களை அயோத்திக்குள் நுழைய விடாமல் இந்து வெறியர்கள் சூழ்ந்து கொண்டு போலீசார் முன்னிலையிலேயே தாக்கி துரத்தியடித்தனர்.

இவ்வளவுக்கும் பிறகும் மத்தியிலுள்ள காங்கிரசு அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்படி ஏதாவது செய்தால் அது இந்து வெறியர்களுக்கு சாதகமாகிவிடும் என்று அஞ்சியது. தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்சில் என்ற பெயரில் அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி விவாதித்து முடிவு செய்வது என்று தீர்மானித்தது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பார்ப்பன - பாசிச ஜெயா, சட்டபூர்வமாகவோ அரசியல் ரீதியாகவோ அயோத்தி விவகாரத்துக்கு தீர்வு காண முடியாது; பெரும்பான்மை இந்துக்களின் கருத்துப்படியே தீர்வுகாண வேண்டும்; சிறுபான்மை மதத்தினர் தேசிய நலனை முன்னிறுத்தி விட்டுக் கொடுக்கவேண்டும்; என்கிற பாணியில் இந்து வெறியர்களுக்கு ஆதரவாகப் பேசியுள்ளார். இதை பாரதீய ஜனதா கட்சியினர் வெகுவாக பாராட்டியுள்ளனர்.

அயோத்தி விவகாரத்துக்கு உருப்படியாக எந்தத் தீர்வுமின்றி, வழக்கம்போலவே மதத்தலைவர்கள் இணக்கமாகப் பேசித் தீர்ப்பது; அல்லது கோர்ட் தீர்ப்பை ஏற்பது என்று தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்சில் முடிவு செய்தது. இம்முடிவை ஒருபுறம் ஏற்பதாக நாடகமாடிக் கொண்டே, மறுபுறம் அதற்கு எதிராக இந்துவெறி பாரதீய ஜனதா செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. "இந்துக்களுக்குச் சாதகமாக கோர்ட் தீர்ப்பு அமையாவிட்டால், சட்டமன்றத் தீர்மானம் மூலம் அதை ரத்து செய்துவிட்டு கோயிலைக் கட்டுவோம்" என்று கொக்கரிக்கிறார் உ.பி. மாநில பாரதீய ஜனதா முதல்வர். காங்கிரசின் கையாலாகாத்தனம், எதிர்க்கட்சிகளின் போலிமதச்சார்பின்மை, பெருகிவரும் அரசியல் பொருளாதார நெருக்கடிகள் ஆகியவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு இந்து வெறி பாசிசம் பற்றிப் படர்ந்து வருவதையே இவை தெளிவாக்குகின்றன. நேற்று ஜெர்மனிக்கு ஒரு நாஜிக்கட்சி; இன்று இந்தியாவுக்கு ஒரு பாரதீய ஜனதா!

● மனோகரன்.

# மாணவி பாதிப்பு! முதல்வரின் அடக்குமுறை!

கல்வி நிலையங்கள் கொள்ளைக் கூடாரமாகவும், அடக்குமுறைக் கொட்டில்களாகவும் மாற்றப்பட்டுவிட்டன. சிறுபான்மை முஸ்லீம்கள் கையிலிருக்கும் கல்வி நிலையங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. வக்ஃபோர்டின் நிர்வாகத்திற்குட்பட்டு இயங்கி வரும் ஹாஜி கருத்தராவுத்தர் கலைக்கல்லூரி, மதுரை - உத்தமபாளைத்தில் உள்ளது. கல்லூரி முதல்வர் நைனார் முகம்மது, மாணவ - மாணவிகள் மீது அடக்குமுறையை ஏவி ஆட்டம் போட்டு வருகிறார்.

அண்மையில் இளங்கலை ஆங்கிலப் பிரிவில் 2 ஆம் ஆண்டு படித்து வரும் மாணவி சகினாவை காரணமேயில்லாமல் அடாவடித்தானமாக 'டி-சி'யைக் கொடுத்து வெளியேற்றினார். சகினா சற்று முற்போக்கு சிந்தனையுள்ள மாணவி. சக மாணவர்களுடன் சகஜமாகப் பழகக்கூடியவர். கல்லூரி விழாக்களில் சமூக அக்கறையுடன் தனது கருத்தை துணிச்சலாக பேச்சு - கவிதை மூலம் வெளிப்படுத்துபவர். கடந்த ஆண்டு இவர் கவியரங்கத்தில் கல்லூரி முதல்வரின் 'மாமியார் தனங்களை' அம்பலப்படுத்தினார். இதனால் சகினாவை பழிவாங்க காத்திருந்த முதல்வர், மாணவன் ஒருவனோடு பேசியதை காரணம் காட்டி கல்லூரியின் புனிதமே கெட்டுவிட்டதாக கூறி சகினாவை கல்லூரியிலிருந்து நீக்கியுள்ளார்.

மாணவ - மாணவியரின் நட்புறவையே கொச்சைப்படுத்தி அவதூறு பரப்பியதையும், சகினாவை கல்லூரியை விட்டு நீக்கியதையும் கண்டித்து அனைத்து மாணவ-மாணவியர்களும் வகுப்புகளை புறக்கணித்தனர். பதறிப்போன கல்லூரி நிர்வாகம் பேச்சு வார்த்தைக்கு அழைத்தது. சகினாவை மீண்டும் கல்லூரியில் சேர்ப்பது, மாணவர் தேர்தலை நடத்துவது, விடுதியின் பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பது போன்ற மாணவர்களின் கோரிக்கைகளை நிர்வாகம் ஏற்க மறுக்கவே மாணவர்கள் ஊர்வலம், உண்ணாவிரதம் எனப் போராட்டத்தை தொடர்ந்தனர்.

ஆனால் நிர்வாகமோ போராட்டத்தைச் சீர்குலைக்க நரித்தனமாக செயல்பட்டது. வக்ஃபோர்டு தலைமையை உடன் அழைத்துப் பேசியது. வக்ஃபோர்டு தலைமை, சகினாவின் ஊரான சின்னமனூர் ஜமாத் கமிட்டியின் மூலம் மாணவியின் பெற்றோர்களை "ஜமாத்திலிருந்து நீக்கிவிடுவோம்" என மிரட்டியது. மேலும் மாணவியின் தந்தையை போராடும் மாணவர்களிடம் அனுப்பி "என் மகளுக்காக நீங்கள் போராட வேண்டாம்; மீறினால் உங்கள் மீது மானநஷ்ட வழக்குப் போடுவேன்" என்று நிர்பந்தப்படுத்தி சொல்ல வைத்தது. "போராட்டத்தை வாபஸ் வாங்காவிட்டால் உங்கள் அனைவருக்குமே 'டி.சி'யை கொடுத்துவிடுவேன்" என்று நிர்வாகம் நேரடியாகவும் மாணவர்களை மிரட்டியது.

மாணவர்களின் தன்னெழுச்சியான போராட்டத்திற்கு தலைமை கொடுத்த போலிக் கம்யூனிஸ்ட்டுகளின் மாணவர் அமைப்புத் தலைமைகள் போராட்டத்தை எதைநோக்கி எடுத்துச் செல்வது என்ற தொலைநோக்கு பார்வையின்றி போராட்டத்தை பாதியிலேயே கைகழுவி விட்டனர். போராடிய மாணவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என நிர்வாகத்திடம் எழுதி வாங்கிக் கொண்டு போராட்டத்தை முடித்துக் கொண்டனர்.

பிரச்சினை தற்காலிகமாக ஓய்ந்திருந்தாலும் நிர்வாகம் தனது அடக்குமுறையை நியாயப்படுத்தியே வருகிறது. மீண்டும் அதன் அடக்குமுறைக் கரம் மாணவர்கள் மீது பாயவே செய்யும். அதற்குள் ஓட்டுக்கட்சிகளின் துரோகத் தலைமைகளைத் தூக்கி எறிந்து விட்டு புரட்சிகரத் தலைமையின் கீழ் திரண்டு நிர்வாகத்தின் அடக்குமுறையை எதிர்கொள்ள மாணவர்கள் தயாராக வேண்டும்.

— தகவல்: புதிய ஜனநாயக வாசகர் வட்டம், உத்தமபாளையம்

www.padippakam.com

சிவசேனா

# இந்து வெறியர்களின் இளைய பங்காளிகள்

இடைத் தேர்தலில் ஆதாயமடையும் நோக்குடன் இந்து வெறி பாரதீய ஜனதா, அயோத்தி விவகாரத்தைக் கிளறி விட்டுள்ளதைப் போலவே, மகாராஷ்டிராவில் இனவெறி பிடித்த சிவசேனா, குறுகிய தேசிய வெறியைக் கிளறிவிட்டுள்ளது. காஷ்மீர் போராளிகளுக்கு பாகிஸ்தான் பயிற்சியும் பணமும் ஆயுதங்களும் கொடுத்து பிரிவினைவாத - தீவிரவாத சக்திகளைத் தூண்டிவிட்டு இந்தியாவை சீர்குலைப்பதாக வழக்கம் போலவே இந்திய அரசு பீதியூட்டத் தொடங்கியதும், சிவசேனா அதை ஊதிப் பெருக்கத் தொடங்கியது.

கடந்த 'தசரா' பண்டிகையின் நிறைவு நாளன்று தமது கட்சி ஊழியர் கூட்டத்தில் பேசிய சிவசேனா தலைவரான பால்தாக்கரே, ''இந்தியாவை சீர்குலைக்க பாகிஸ்தான் தொடர்ந்து முயற்சி செய்கிறது. எனவே நடைபெறவுள்ள இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியை பம்பாயில் நடத்த நாம் அனுமதிக்கக் கூடாது. அதையும் மீறி விளையாட்டு போட்டி நடைபெறுமானால், வான்கீட் விளையாட்டரங்கத்தை தீயிட்டுக் கொளுத்துவோம்'' என்று வெறியூட்டினார்.

மகாராஷ்டிராவில் மயிரிழை பெரும்பான்மையுடன் ஆட்சி நடத்தும் காங்கிரசு அரசு, முக்கிய எதிர்க்கட்சியான சிவசேனாவுடன் சமரச பேச்சுவார்த்தை என்ற பெயரில் கெஞ்சிப் பார்த்தது. சிவசேனா இணங்காததால் காங்கிரசு முதல்வர் சுதாகர்ராவ் நாயக் டெல்லிக்குப் பறந்தார். இதற்கிடையே பால் தாக்கரேவைக் கைது செய்யப் போவதாக வதந்திகள் பரவியதும், அக்டோபர் 23 அன்று சிவசேனா குண்டர்கள் விளையாட்டுப் போட்டி நடைபெறவிருக்கும் வான்கீட் விளையாட்டு அரங்கத்தை முற்றுகையிட்டு ஆடுகளத்தை கடப்பாரையால் சிதைத்தும், தரையெங்கும் கிரீஸ், டீசல் முதலானவற்றைக் கொட்டியும் நாசப்படுத்தினர். அரங்க வாயிலில் ''இந்துஸ்தானத்தில் நுழைய பாகிஸ்தான் விளையாட்டுக்காரர்களுக்கு அனுமதி இல்லை'' என்று தட்டியில் எழுதித் தொங்கவிட்டனர்.

இப்புதிய நிலைமைகளைத் தொடர்ந்து, தற்போதைய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க இயலாது என்று பாகிஸ்தான் அறிவித்தது. இந்திய - பாகிஸ்தான் பிரதமர்கள் நட்புறவுக்கான பேச்சு வார்த்தை நடத்திய சில நாட்களுக்குள், இப்படியொரு விபரீதம் நடந்து விட்டதாக நாளேடுகள் அங்கலாய்த்தன.

பாகிஸ்தான் இந்தியாவுடன் விளையாடுவதற்கு வந்திருக்க வேண்டும்; தேவையில்லாமல் பாக். ஆட்சியாளர்கள் இதை அரசியல் படுத்துகிறார்கள் என்று பாகிஸ்தான் மீதே பழியைப் போட்டன. சிவசேனாவை எதிர்த்தால் அது பாகிஸ்தானை ஆதரிக்கும் 'தேச விரோத'ச் செயலாகிவிடும் என்று பத்திரிக்கைகள் பயந்து மழுப்பின.

இதே நேரத்தில் பம்பாயிலிருந்து வெளிவரும் மராத்திய மாலைப் பத்திரிக்கையான ''மகாநகர்'', சிவசேனாவின் வன்முறையையும், அதன் பாசிசத் தன்மையையும் அம்பலப்படுத்தி செய்திக் கட்டுரை வெளியிட்டது. ஆத்திரமடைந்த சிவசேனா குண்டர்கள், அடுத்த நாளே-அக்.25 அன்று - அப்பத்திரிக்கை அலுவலகத்தைச் சூறையாடினர். துணை ஆசிரியர்களைத் தாக்கி கை-கால்களை முறித்தும், தொலைபேசி மற்றும் செய்தி - தகவல் தொடர்பு சாதனங்களையும் நாசமாக்கிவிட்டுச் சென்றனர். நகரின் பல இடங்களில் இச்செய்திதாள் எரிப்புப் போராட்டத்தை நடத்தினர். ஆனாலும் இன்றுவரை சிவசேனா குண்டர்களை காங்கிரசு அரசு கைது செய்யவில்லை.

அதன் பிறகு பம்பாய் நகரப் பத்திரிக்கையாளர்கள் அணிதிரண்டு சிவசேனாவின் அட்டூழியங்களைக் கண்டித்து மகாநகர் பத்திரிக்கை அலுவலகத்தின் அருகே தர்ணா போராட்டத்தை நடத்தினர். இதனால் மேலும் ஆத்திரமடைந்த சிவசேனா குண்டர்கள், பத்திரிக்கையாளர்கள் மீது பாய்ந்து இரும்புத் தடி, சைக்கிள் செயினால் மிருகத்தனமாக தாக்கினர். கணக்கற்ற பத்திரிகையாளர்கள் படுகாயமடைந்தனர். குறிப்பாக, நவ பாரத் டைம்ஸ், தேபார், பெமினா, ஏக்மத் ஆகிய பத்திரிகைகளைச் சேர்ந்த 4 செய்தியாளர்கள் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் பெண்கள். அவர்களின் கபாளம் நொறுக்கப்பட்டு மருத்துவமனையில் மரணப் படுக்கையில் கிடக்கின்றனர். ஆனால் ''சிவசேனா தொண்டர்கள் இத்தாக்குதலில் ஈடுபடவில்லை; அப்படி நிரூபிக்கப்பட்டால் நான் கட்சியைக் கலைத்துவிட்டு பொது வாழ்க்கையிலிருந்தே விலகுவேன்'' என்று சவால் விடுகிறார், சிவசேனாவின் தலைவர் பால்தாக்கரே. ஆனால் அதேசமயம் சிவசேனாவுக்கு எதிரான பத்திரிக்கைகளைத் தாக்கிய செயலை தைரியமான, தேச பக்த நடவடிக்கை என்று கட்சிக் குண்டர்களை பாராட்டுகிறார்.

அதன்பிறகு, அக்டோபர் 28 முதலாக நடைபெறவிருந்த கிரிக்கெட் போட்டி ரத்து செய்யப்பட்ட போதிலும், அதே நாளில் பம்பாய் நகரில் சிவசேனா கடையடைப்பு போராட்டத்தை நடத்தி, அதை ஆதரிக்கும் படி மக்களைக் கட்டாயப்படுத்தியது. போலிக் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட எந்த எதிர்க்கட்சியும் குறுகிய தேசிய வெறியூட்டும் சிவசேனாவின் அட்டூழியங்களை எதிர்க்க முன்வரவில்லை. சிவசேனாவின் தேச பக்தியில் சங்கமமாகிப் போனார்களா அல்லது இந்த விவகாரத்தில் காங்கிரசும் சிவசேனாவும் மோதிக் கொள்ளட்டும் என்று புதிய 'தந்திரம்' வகுத்தார்களா? தெரியவில்லை.

ஆனால் இந்து வெறியர்களும், இன வெறி பாசிஸ்டுகளும் தேசபக்தி என்ற பெயரில் மத-இனச் சிறுபான்மையினரை அடக்கவும், குறுகிய தேசிய வெறியூட்டவும் கைகோர்த்து புதிய அணியை வேகமாக கட்டி வருகிறார்கள். பம்பாயைத் தொடர்ந்து பஞ்சாபிலுள்ள ஜலந்தரிலும் அடுத்து நடைபெற உள்ள கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியை அனுமதிக்க மாட்டோம் என்று சிவசேனாவும் பாரதீய ஜனதாவும் எச்சரித்துள்ளன. இதே போல சென்னையிலும் பாகிஸ்தானுடன் இந்தியா கிரிக்கெட் விளையாட அனுமதிக்க மாட்டோம்



''மகாநகர்'' பத்திரிகை அலுவலகத்தைச் சூறையாடி, அதன் பிரதிகளைக் கொளுத்தி ஆட்டம் போடும் சிவசேனா குண்டர்கள்.

படிப்பகம்

www.padippakam.com

என்று இந்து முன்னணி எனும் மதவெறி அமைப்பு கொக்கரிக்கிறது.

காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் தலையிடுவது இது முதன்முறையல்ல; பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா தேசிய வெறியூட்டி பழி தூற்றுவதும் புதியதல்ல. ஆனால் இப்போது திடீரென பாகிஸ்தான் எதிர்ப்பு கோஷமிட்டுக் கொண்டு சிவ சேனா தேசபக்தி நாடகமாடுவதற்கு காரணம் இல்லாமலில்லை. ஏற்கனவே முஸ்லிம் மக்கள் மீதான இனவெறியாட்டங்களாலும், குண்டாந்தடி அரசியலாலும் அம்பலப்பட்டுப் போயுள்ள சிவசேனாவுக்கு தனது பாசிச முகத்தை மறைத்துக் கொள்ள தேச பக்த முகமூடி அவசியமாயுள்ளது. அதை விட, மகாராஷ்டிராவில் காலூன்ற முயற்சிக்கும் பாரதீய ஜனதாவை முந்திக் கொண்டு இந்துவெறி - இனவெறியாட்டங்களைக் கட்டவிழ்த்துவிட்டு தனது மேலாண்மையை நிலைநாட்டிக் கொள்ள பாக்.எதிர்ப்பு தேச பக்த நாடகம் அவசியமாக உள்ளது.

சிவசேனாவின் வாதப்படி, காஷ்மீர், விவகாரத்தில் பாகிஸ்தான் தலையிடுவது தவறு என்றால், அதே போல இந்தியா தனது அண்டை நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவது மட்டும் எப்படி சரியாகும்? பாகிஸ்தானிலுள்ள சிந்து, பஞ்சாப், பலுசிஸ்தான் தேசிய இனப் போராட்டங்களுக்கு இந்தியா மறைமுகமாக ஆதரவு தருவது எப்படி நியாயமாகும்? பாகிஸ்தானைத் துண்டாடி வங்கதேசத்தை உருவாக்கி, முக்திபாஹினி என்ற அமைப்பின் பெயரால் இந்திய ராணுவமே வங்கதேச விடுதலைப் போரில் பங்கேற்றது எவ்வாறு சரியாகும்? நேபாளத்தின் மீது பொருளாதாரத் தடைவிதித்தும், மன்னராட்சி எதிர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவளித்தும், இலங்கையில் நேரடியாக ஆக்கிரமிப்பு நடத்தியும், மாலத் தீவில் ராணுவத் தலையீடு நடத்தியும் அண்டை நாடுகளின் மீது இந்தியா மேலாதிக்கம் செய்தவையெல்லாம் எந்த வகையில் நியாயமானதாகும்?

அண்டை நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகளை நட்பு ரீதியில் பேசித் தீர்ப்பதற்கு மாறாக, சிறிய நாடுகள் மீது பகைமையை வளர்த்து தேசிய வெறியூட்டி மேலாதிக்கம் செலுத்துவது தான் இந்து வெறியர்களின், இனவெறியர்களின் தேச பக்தி கொள்கையாகும். ஏகாதிபத்திய எதிர்ப்பு - மேலாதிக்க எதிர்ப்பு தேசிய உணர்வூட்டுவதற்கு மாறாக, மத - மொழி - இனச் சிறுபான்மையினருக்கு எதிராக இந்துஸ்தானம் - அகண்ட பாரதம் என்பது தான் இந்து வெறியர்களின் தேசபக்தி. காஷ்மீர் மக்களின் நியாயமான சுயநிர்ணய உரிமையை மட்டுமல்ல; அனைத்து இனங்களின் சுயநிர்ணய உரிமையையும், ஜனநாயக கோரிக்கைகளையும் பாசிசமுறையில் அடக்குவதுதான் அவர்களின் தேசிய உணர்வு. பாசிச இட்லரை பகிரங்கமாக ஆதரிக்கும் சிவசேனா, இந்துவெறி பாரதீய ஜனதா ஆகியவற்றின் கூட்டும் வளர்ச்சியும், பாசிச காங்கிரசின் அரவணைப்பும் இந்து வெறி பாசிசம் பற்றிப் படர்ந்து வருவதை அபாய அறிவிப்புகளாக எச்சரிக்கின்றன.

● குமார்.

# ஒரத்தநாட்டில் ஒரு போலீசு ரௌடி!

பாசிஸ்டுகள் ஆட்சியில் அடிவருடிகளும் - அரசு எந்திரமும் அதிகாரப் போதை தலைக்கேறி ஆடுவது சாதாரண செயலாகிவிடும். பாசிசத்தை அரங்கேற்றிவரும் ஜெயா கும்பல் ஆட்சியிலும் இதுதான் நடக்கிறது. போலீசு கும்பல் அதிகார மமதையில் தலைகால் புரியாமல் குதிப்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார் ஒரத்தநாடு எஸ்.ஐ.குணசேகரன்.

ஒரத்தநாடு தொகுதி எம்.எல்.ஏ. -அமைச்சர் அழகு திருநாவுக்கரசு செல்வாக்குடனும் போலீசு துறையிலுள்ள மேலிடத்து செல்வாக்குடனும் கொட்டமடித்து வருகிறார் எஸ்.ஐ. குணசேகரன். ஊரில் தினம் இரவு 11 மணிவரை ரெய்டு என்ற பெயரில் வலம் வந்து பொதுமக்களை துன்புறுத்துவது இவரது வாடிக்கை. கடைத்தெருவில் ரவுடியாக பவனிவரும் எஸ்.ஐ. குணசேகரனைப் பார்த்து பொதுமக்களும், இளைஞர்களும் பயந்து ஓடுகிறார்கள். பைக்கை இஷ்டத்திற்கு தெருவில் ஓட்டிவந்து கண்ணில் படுபவர்களை பிடித்து லத்தியால் அடித்து துன்புறுத்துவது, மனம்போன போக்கில் அவர்களை கைது செய்து இழுத்துப்போய் பொய் வழக்கு போடுவது இவரது அன்றாட வேலை. வயதானவர்கள், பெண்கள் என்று பாராமல் ஆபாசமாகவும் - அவதூறாகவும் கண்டபடி திட்டுவது குணசேகரனது வழக்கம். இவருடைய அதிகார மமதைக்கு அதிகம் இலக்காவது ஊர் இளைஞர்கள்தான்.

எஸ்.ஐ. குணசேகரனின் காட்டுதர்பாரில் பகுதியிலுள்ள கடைகள் எல்லாம் இரவு 11 மணிக்குள்ளேயே மூடப்பட்டு விடுகின்றன. ஊர் ஜனங்கள் நடமாட்டமும் அறவே இல்லாமல் போய் விடுகிறது. இதனை பயன்படுத்தி திருட்டுக் கும்பல்கள் ஊரில் சகஜமாக உலாவுகின்றன. அண்மையில் அமுதம் அங்காடியில் உள்ள மதுக்கடையிலும் தேவி போட்டோ ஸ்டுடியோவிலும் பணமும் பொருளும் களவு போயின. இதுவன்றி பட்டபகலிலேயே முஸ்லிம் பெண் ஒருவர் கொல்லப்பட்டு அவரிடமிருந்த பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. திருட்டும் கொள்ளையும் எஸ்.ஐ. குணசேகரன் பதவியேற்ற 5 மாதகாலமாக பெருகி பகுதி மக்களின் நிம்மதி கெட்டுள்ளது. மேலும் இங்குள்ள அரசு மருத்துவமனை இரவு சரிவர இயங்காததால் சில தனியார் மருத்துவமனைகள், மகப்பேறு கிளினிக்குகள் 24 மணி நேரமும் இயங்கி வருகின்றன. ஆனால் இரவு 11 மணிக்கு மேல் ஹோட்டல்கள், டீ கடைகள் இல்லாததால் நோயாளிகள் வெந்நீர், டீ கூட கிடைக்காமல் அவதிப்படுகின்றனர்.

பகுதி மக்கள் புகார் மனுக்களை அனுப்பிவிட்டு நீதி கிடைக்கும் என காத்திருக்கிறார்கள். போலீசு என்பதே கிரிமினல்கள் அடங்கிய மக்கள் விரோத நிறுவனம். இதில் ஆட்களை இடமாற்றிப் போடுவதால் பிரச்சினை தீராது. சட்டமும், அதிகாரமும் இக்கும்பலின் கையிலே இருக்கும் வரை மக்களுக்கு நீதி கிடைக்காது. எனவே சமூக விரோத கும்பலையே ஒழிப்பதற்கான போராட்டத்தில், அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான போராட்டத்தில் பகுதி மக்கள் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

— தகவல்:- ஜி.கே.ஒரத்தநாடு.

# சீக்காளியாக மன்னார்குடி மருத்துவமனை

மன்னார்குடியிலுள்ள அரசினர் மருத்துவமனை, வருவாய் கோட்ட அளவிலான தலைமை மருத்துவமனை. இம்மருத்துவமனையில் மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம் மற்றும் இவ்வூர்களைச் சுற்றியுள்ள கிராமங்கள் உட்பட அனைத்து பகுதி மக்களும் உள் நோயாளிகளாகவும், புற நோயாளிகளாகவும் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். மருத்துவமனையிலுள்ள மருத்துவர்கள் சொந்தமாக 'கிளினிக்' வைத்துக் கொண்டும், நகரில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் பகுதிநேர மருத்துவர்களாக இருந்து கொண்டும் கொள்ளை லாபம் ஈட்டுகின்றனர். இதனால் அரசு மருத்துவமனையில் இம்மருத்துவர்கள் இருப்பதே கிடையாது.

சாதாரண காய்ச்சலை குணப்படுத்தும் மருந்துமுதல் உயிர்காக்கும் மருந்துவரை யாதொரு மருந்தும் இங்கு கிடையாது. குளுக்கோஸ் பாட்டில்கூட வெளியில் இருந்து நோயாளிகள்தான் வாங்கி கொடுத்தாக வேண்டும். குடும்பக்கட்டுப்பாடு செய்து கொண்டவர்க்கு மட்டுமே அதுவும் ஒரிரு பாட்டில் குளுகோஸ் என குறைந்த அளவே கிடைக்கும். மின் விளக்குகளோ, மின் விசிறியோ, சுகாதார வசதியோ இங்கு முறையாகப் பராமரிக்கப்படுவதில்லை. அத்தியாவசிய மருந்துகள் இல்லாததால் ஆபத்தான நிலையில் கொண்டுவரப்படும் நோயாளிகளுக்கும் கண் துடைப்பு சிகிச்சை அளித்துவிட்டு தஞ்சைக்கு கொண்டு போகச் சொல்கிறார்கள். அவ்வாறு தஞ்சைக்கு கொண்டு செல்லப்பட்டவர்கள் வழியிலேயே இறந்தும் இருக்கிறார்கள்.

உயர் அலுவலர்களோ, மந்திரிகளோ சோதனைக்கு வரும்போது மட்டுமே மருத்துவமனையை சுகாதாரமானதாக்கி காட்டுவார்கள். சோதனை முடிந்ததும் மீண்டும் பழைய நிலைக்கே மருத்துவமனை வந்துவிடும். இத்தகைய சீர்கேடுகளை அம்பலப்படுத்தியும், பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்கக் கோரியும் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி (RSYF), சுவொரட்டி மூலம் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com

# இட ஒதுக்கீடு மோசடிகள்: திராவிடக் கட்சிகளை அம்பலப்படுத்தும் மண்டல்

தி.க. வீரமணி கும்பலின் அதிகாரபூர்வ ஏடுகளில் ஒன்று "உண்மை" அதன் '91 நவ. 1-15 இதழ் 'மானமிகு'வின் பதில்கள் பகுதியில் ந.அப்துல் ரகுமான் என்ற வாசகரின் கேள்வியும், அதற்கான பதிலும் பின்வருமாறு வெளிவந்துள்ளது.

"கேள்வி: நான் RSYF என்ற நக்சலைட் இயக்கத் தோழர் ஒருவரை சமீபத்தில் சந்தித்தேன். ('புதிய ஜனநாயகம்' இதழை நடத்துபவர்கள்). மண்டல் கமிசன் அறிக்கையில் தி.க. உட்பட திராவிடக் கட்சிகள் இடஒதுக்கீடு விசயத்தில் செய்த மோசடி குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதனால்தான் தி.க அறிக்கையை முழுவதும் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடாமல் சில பக்கங்களை மட்டும் மேற்கோள் காட்டி கட்டுரைகள் வெளியிடுவதாகவும் சொன்னார். உங்கள் பதில் என்ன?
பதில்: இப்படியும் சிலர் இருக்கிறார்களா? அவர்களுக்காகப் பரிதாபப்படுங்கள். வணக்கத்துக்குரிய நமது பொதுச்செயலாளர் மண்டல் கமிசன் அறிக்கையை முழுவதும்தான் கூட்டத்தில் வைத்துப் பேசுகிறார்.

முழுவதும் வெளியிட்டால் நம் தோழர்கள் வாங்குவது சிரமம், மற்றும் மக்களுக்கு அது தேவையும் இல்லை.

உங்களிடம் சொன்னவர் சொல்வது உண்மையானால் அவர்களே அந்தப் பகுதியை வெளியிடலாமே."

"எங்கப்பன் குதிருக்குள் இல்லை" என்கிற தோரணையில் வீரமணி கும்பல் எழுதியுள்ளதை வாசகர்கள் தாமே புரிந்து கொள்ள முடியும். திராவிடக் கட்சிகளின் உயிராதாரமான 'வகுப்புரிமை' வழங்கிடும் மண்டல் கமிசன் அறிக்கையைப் பத்தாண்டுகளாகியும் வெளியிடாமல் இருப்பதன் காரணம் இந்தப் பதிலிலேயே அடங்கியிருக்கிறது. 'உண்மை' என்று பெயர் வைத்து கொண்டு பொய் எழுதுவதையும் சேர்த்து அம்பலப்படுத்துவதற்காக மண்டல் கமிசன் அறிக்கையின் சம்பந்தப்பட்ட பகுதியை வெளியிடுவது என்று தீர்மானித்துள்ளோம்.

இடஒதுக்கீடு முறைக்கு பீகார் - உ.பி. போன்ற வடமாநிலங்களில் மேல்சாதியினரிடம் இருந்து கடும் எதிர்ப்புக் கிளம்புகிறது. தமிழ்நாடு, கர்நாடகா போன்ற தென் மாநிலங்களில் அவ்வாறில்லை. அதற்கு என்ன காரணம், இடஒதுக்கீடு முறையின் விளைவுகள் என்னவென்பதை ஆய்வு செய்வதற்காக டாடா சமூக அறிவியல் கழகம் மூலமாக ஒரு துணைக்குழு அமைத்தது, மண்டல் கமிசன். அத்துணைக் குழுவின் ஆய்வறிக்கை மண்டல் கமிசன் அறிக்கையின் பகுதி II தொகுதி IV ஆகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதில் II -வது அத்தியாயம், "தமிழ்நாடு: பிராமணரல்லாதோர் இயக்கத்தில் இருந்து தமிழர் மீட்புவாதம் வரை" என்கிற தலைப்பில் உள்ளது. (பக்: 147-150). தமிழ்நாட்டில் இடஒதுக்கீடு முறை உண்மையில் பார்ப்பனரல்லாத மேல்சாதி, மேட்டுக்குடியினரின் ஆதிக்கத்துக்குத் தான் பயன்பட்டிருக்கிறது; இந்த உண்மையை மூடி மறைத்து அவர்களின் நலன்களுக்காகவே திராவிடக் கட்சிகள் பாடுபடுகின்றன என்பதை இந்த ஆய்வறிக்கை காட்டுகிறது.

அந்த ஆய்வறிக்கையின் சாராம்சத்தைப் பின்வருமாறு மண்டல் கமிசனின் பிரதான அறிக்கைத் தருகிறது:

"பிரிட்டிஷ் கல்வி முறையாலும் அதிலிருந்து கிடைத்த வாய்ப்புகளாலும் பிரதானமாக நலனடைந்தவர்கள் தமிழ் பிராமணர்கள் தாம். ஏனென்றால், அவர்கள்தான் மேல்நிலைப் படிப்புக்கான பரம்பரைக் 'காவலர்'களாக இருந்தார்கள். அனைத்து அரசாங்கத் துறை பதவிகளிலும் பிற தொழிற்துறைப் பணிகளிலும் கிட்டத்தட்ட ஏக போக நிலையை நிறுவுவதற்கு இது உதவியது. மாண்டேகு - சேம்ஸ் போர்டு சீர்திருத்தங்கள் மற்றும் இரட்டை ஆட்சிமுறை ஏற்படுவதால் எச்சரிக்கை அடைந்திட்ட பிராமணரல்லாத மேட்டுக்குடிச் சாதிகள் முதலில் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தையும் பிறகு 1916-இல் நீதிக் கட்சியையும் நிறுவுவதற்குத் தலைமையெடுத்தனர். இந்தக் கட்சி 1920-இல் ஆட்சிக்கு வந்தபிறகு (அரசுத் துறைகளின்) பதவிகளில் பிராமணருக்கிருந்த பிடிப்பைத் தளர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. 1927 வகுப்புவாரி ஆணையின்படி பல்வேறு வகுப்புகளுக்கும் பதவிகளைத் தொகுதி பிரித்து இடஒதுக்கீடு செய்யப்பட்டது.

"நீதிக்கட்சித் தலைவர்கள் நிலவுடமை வகுப்புகளில் இருந்து வந்தவர்கள், அவர்கள் தங்களது அணிவரிசையில் நிலமற்ற சாதிகளைச் சேர்த்துக்கொண்டு தமது சமூக அடிப்படையை விரிவுபடுத்திக் கொள்வதில் அவ்வளவு அக்கறை கொண்டிருக்கவில்லை....... 1927 வகுப்புவாரி அரசாணை வெள்ளாள சாதிகளின், குறிப்பாக முதலியார்களின் வெற்றியைக் குறித்தது" என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த அணுகுமுறை நீதிக்கட்சியின் மக்கள் திரள் அடிப்படையை கரைந்து போகச் செய்தது. தேசிய இயக்கத்தில் இருந்து அது ஒதுங்கியிருந்தது அதை மேலும் பலவீனப்படுத்திவிட்டது.

இதற்கிடையே காங்கிரசில் பிராமணர்களின் ஆதிக்கத்தால் கோபமும் ஒரு சுத்தமான வருணாசிரம சித்தாந்தத்தை காந்திஜி பின்பற்றியதால் எரிச்சலும் அடைந்த ஈ.வெ.ராமசாமி நாயக்கர் காங்கிரசில் இருந்து வெளியேறி சுயமரியாதை இயக்கத்தைத் துவங்கினார். அவர் பிராமணீய மதம் மற்றும் பண்பாட்டை நிராகரித்து ஒரு தனி திராவிட நாடு கோரினார். திராவிடர் கழகம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த சித்தாந்தத்தோடு இந்தி எதிர்ப்பு, வடவர் எதிர்ப்பு முழக்கங்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

"1927 வகுப்புவாரி அரசாணை 1947-இல் மாற்றியமைக்கப்பட்டது; 'முதன் முறையாக பிராமணரல்லாத சாதிகளை பிராமணரல்லாத இந்துக்கள் என்றும், பிராமணரல்லாத பிற்பட்ட இந்துக்கள் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது' இந்தப் புதிய அரசாணையின் ஒரு முக்கிய அம்சமாக இருந்தது. இந்தத் தனித்தனி தொகுதிவாரி இடஒதுக்கீடு திட்டத்தை உச்சநீதிமன்றம் ரத்து செய்துவிட்டது. 1951-இல் தாழ்த்தப்பட்ட சாதிகள், பழங்குடி சாதிகள் மற்றும் பிற பிற்பட்ட சாதிகளுக்கு மட்டுமே இடஒதுக்கீடு செய்யும் இன்னொரு ஆணையை அரசாங்கம் பிறப்பித்தது. இது பிராமணரல்லாத முற்பட்ட சாதிகளிடம் இருந்து கடுமையான எதிர் விளைவு எதையும் ஏற்படுத்தவில்லை. ஏனென்றால் அவர்கள் 'ஏற்கனவே தமது நலன்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் அளவுக்குப் போதிய அதிகாரமுள்ளவர்களாக மாறியிருந்தார்கள்; எனவே அவர்கள் எந்த வகையிலும் கண்டித்தெழவோ, எதிர்விளைவைக் காட்டவோ இறங்கிடவில்லை.

"மேற்கண்ட இடஒதுக்கீட்டுத் திட்டத்தின் ஒரு சிறப்பு அம்சம் என்னவென்றால் மிகவும் பெரிய சமூகத்தையோ, சாதிக் குழுக்களையோ அது முற்பட்ட, பிற்படுத்தப்பட்ட பிரிவுகள் என்று பிரித்தது. 'தாழ்த்தப்பட்ட சாதிகளில் இருந்து கிறித்தவர்களாக மதம் மாறியவர்கள் பிற்பட்டவர்கள்; பிற கிறித்தவர்கள் முற்பட்டவர்கள்; லப்பை மற்றும் தெக்காணி முஸ்லீம்கள் பிற்படுத்தப்பட்டவர்களாக உள்ள அதே சமயம் உருது பேசும் முஸ்லீம்கள் முற்பட்டவர்கள்; ஆதிசைவ, கார்காத்த, களவல வெள்ளாளர்கள் முற்பட்டவர்களாக உள்ள அதே சமயம் துளுவ மற்றும் சோழிய வெள்ளாளர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள், கஞ்சம ரெட்டிகளைத் தவிர எல்லா ரெட்டியார்களும் முற்பட்டவர்கள். கௌரா, வடுகநாயுடுகள் பிற்படுத்தப்பட்டவர்கள். கம்மாநாயுடுகள் முற்பட்டவர்கள்". இந்த பாணியிலான வகைப்படுத்துதல்கூட முற்பட்ட கிளைச்சாதிகள் கண்டித்தெழவோ,

படிப்பகம்

www.padippakam.com

கிளர்ச்சி செய்யவோ இருந்த வாய்ப்பை மிகவும் குறைத்துவிட்டது.

"உண்மையான அமுலாக்கத்தில் இடஒதுக்கீட்டின் பலன்கள் பட்டியலிடப்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்குள்ளாகவே ஒப்பீடு ரீதியில் மிகவும் முன்னேறிய சாதிகளுக்கே பிரதானமாகச் சென்றது. இதை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கான கமிசன் சிறப்புக் கவனத்தில் எடுத்துக் கொண்டது; பிற பிற்பட்ட வகுப்புகளின் வெவ்வேறு வகைகளுக்கும் தனித்தனி தொகுதிவாரி இடஒதுக்கீட்டை அறிமுகப்படுத்த வேண்டும் என பரிந்துரைத்தது; ஆனால் இந்தப் பரிந்துரைக்கு மாநில அரசாங்கம் செவி சாய்க்கவில்லை. 'பிற்பட்ட மக்கள் தொகையில் 88.7% கொண்ட பலவீனமான, சிறிய பிற்படுத்தப்பட்ட சாதிகள் இடஒதுக்கீட்டின் பலன்கள் ஒரு கையளவேயான சாதிகளுக்கு மட்டுமே போய்ச் சேருவதற்கு எதிராக ஏன் வெறுப்பு அதிருப்தி கொள்ளவில்லை என்பது இங்கே முக்கிய கேள்வியாக இருக்கிறது'. கர்நாடகத்தில் 'இந்த வெறுப்பு - அதிருப்தியை மூலதனமாக்கிக் கொண்டு தேவராஜ் அர்ஸ் தனக்கென ஒரு புதிய அரசியல் ஆதரவு - அடித்தளத்தை கட்டியமைத்துக் கொண்டார்; ஆனால் தமிழ்நாட்டில் அம்மாதிரியான இயக்கம் உருப்பெறவில்லை; காரணம் திராவிடர் கழகப் பண்பாடு... தமிழ் பண்பாட்டு மீட்புவாதம் மாநிலத்தைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டிருப்பது தொடரும் வரை... ஒரு உண்மையான பிற்பட்ட வகுப்புகளின் இயக்கம்... தோன்றாது'.

"பிராமணர் - பிராமணர் அல்லாதோர் பிளவை மறைத்து விடுமளவுக்கு வேறு பிற மாநிலங்களில் உள்ளதைப் போல தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கும் இடையே ஒரு வெளிப்படையான மோதல் வளரவில்லை. 'ஏனென்றால் தமிழ்நாடு சமஸ்கிருதப் பண்பாடு அல்லாத பகுதி. நான்கு வகை வருண முறை அங்கு குறைவாகவே பிரயோகிக்கக் கூடியதாக இருந்தது'. இங்கு தாழ்த்தப்பட்டவர்கள் கூட சுயமரியாதை இயக்கத்துக்கு மிகச் சரியாகவே செவி மடுத்தார்கள்.

"விரிவடையும் தமிழ்நாட்டுப் பொருளாதாரம், நகரமயமாக்குதலின் ஒப்பீட்டு ரீதியிலான அதிகரித்த விகிதம் ஆகியவை பிராமண, பிராமணரல்லாத மேல் சாதிகளைச் சேர்ந்த இளைஞர்களுக்குப் புதிய வழிகளையும் வேலைவாய்ப்புகளையும் தோற்றுவித்தன. இவ்வாறில்லையானால் இடஒதுக்கீடு, இன்ன பிறவற்றால் இந்தச் சமூகங்களுக்கிடையில் உருவாகி இருக்க வேண்டிய பதட்ட நிலை நிச்சயம் குறைந்திருக்கிறது." (மண்டல் கமிசன் அறிக்கை பகுதி I தொகுதி I பக்கம் 32.)

மண்டல் கமிசன் அறிக்கையில் இருந்து தரப்பட்டிருக்கும் மேற்கண்ட பகுதியில் இருந்து யதார்த்தமாகப் பார்க்கும் எவரும் பின்வரும் முடிவுகளை ஏற்பர்:

★ திராவிடக் கட்சிகள் வரலாற்றைத் திரித்துக் கூறுவதைப் போல நீதிக் கட்சியானது பார்ப்பனரல்லாத அனைத்துச் சாதி மக்களின்

**திராவிடக் கட்சிகளின் முன்னோடியான நீதிக் கட்சியானது பார்ப்பனரல்லாத அனைத்து சாதி மக்களின் நலனுக்கானதாக இருக்கவேயில்லை. நிலவுடமை மேட்டுக்குடி மேல்சாதியினரின் நலனுக்காகவே அது செயல்பட்டது. "கீழ் சாதி" மக்களை சேர்த்துக் கொள்வதில் அதற்கு அக்கறையே கிடையாது.**

நலனுக்கானதாக இருக்கவேயில்லை. நிலவுடமை மேட்டுக்குடி மேல் சாதியினரின் நலனுக்கானதுதான்; நிலமற்ற "கீழ் சாதி" மக்களைச் சேர்த்துக் கொள்வதில் அவர்களுக்கு அக்கறையே கிடையாது.

திராவிடக் கட்சிகளின் முன்னோடியான நீதிக் கட்சியின் மகத்தான வகுப்புரிமைச் சாதனை எனப்புகழப்படும் 1927 வகுப்புவாரி அரசாணை (கம்யூனல் ஜி.ஓ.) பார்ப்பனரல்லாத எல்லாச் சாதி மக்களின் நலன்களுக்கான ஏற்பாடு கிடையாது; அப்போதே முற்பட்ட - மேல் சாதி மேட்டுக்குடியினரான வெள்ளாள சாதிகள், குறிப்பாக வெள்ளாள முதலியார்களின் வெற்றியைத் தான் குறிக்கிறது.

★ 1947 வரை அதாவது 20 ஆண்டுகளாக பார்ப்பனரல்லாத மேல் சாதி மேட்டுக் குடியினருக்கான இட ஒதுக்கீடே அமுலில் இருந்தது.

# கரம்சேடிலிருந்து சுண்டூர் வரை....

# தொடரும் படுகொலைகள்!

ஆந்திரப் பிரதேச மக்கள் உரிமைக் கமிட்டியின் [APCLC] வெளியீடு (ஆங்கிலம்)
பிரதிகளுக்கு புதிய ஜனநாயகம் முகவரியில் தொடர்பு கொள்க.
விரைவில் இவ்வெளியீடு தமிழில்

**வெளிநாட்டு சந்தாதாரர்களுக்கு...**

அண்மையில் இந்திய அரசு வான் அஞ்சல் கட்டணங்களை அநியாயமாக ஒரு மடங்கு உயர்த்தியுள்ளதன் விளைவாக, புதிய ஜனநாயகம் இதழின் ஆண்டு சந்தா யு.எஸ். டாலர் 15 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தவிர்க்கவியலாத இச்சந்தா உயர்வை ஏற்று தொடர்ந்து ஆதரவு தருமாறு கோருகிறோம்.

ஆசிரியர் குழு.

1947இல் தான் பார்ப்பனரல்லாத சாதிகளிலேயே பார்ப்பனரல்லாத இந்துக்கள் எனமேல் சாதிகளையும், பார்ப்பனரல்லாத பிற்படுத்தப்பட்ட இந்துக்கள் எனப் பிற சாதிகளையும் பிரித்து இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.

★ 1951 இல்தான் தாழ்த்தப்பட்ட, பழங்குடிச் சாதிகளுக்கும் பிற பிற்பட்ட சாதிகளுக்கும் மட்டுமே இட ஒதுக்கீடு செய்வது என்கிற முறை அமுலுக்கு வந்தது. ஆனால், அதற்குள்ளாகவே 24 ஆண்டுகாலமாக பார்ப்பனரல்லாத மேல்சாதி மேட்டுக்குடிக்கு வழங்கப்பட்டிருந்த இட ஒதுக்கீட்டைப் பயன்படுத்திக் கொண்டு பின்னர் எப்போதும் தனது நலன்களை பாதுகாத்துக் கொள்ளும் அளவுக்குப் போதிய அதிகாரம் பெற்றவர்களாக அவர்கள் மாறிவிட்டார்கள்.

★ பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கான தனி இடஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகு, அவற்றுள்ளும் ஒருசில முன்னேறிய சாதிகள் மட்டுமே இட ஒதுக்கீட்டின் பலன்களைச் சுருட்டிக் கொண்டன; 88.7% மக்கள் தொகையைக் கொண்ட பலவீனமான, சிறிய பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கு அதன் பலன்கள் போய்ச் சேரவில்லை. இந்தப் பெரும்பான்மையினரின் சாதிகளைக் கொண்ட உண்மையான பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் இயக்கம் தோன்றாததற்குக் காரணம் திராவிடர் கழகப் பண்பாடு ஆகும்.

☆ ★ ☆

மண்டல் கமிசனே கேட்டுக் கொண்டவாறு ஆய்வு செய்து சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை வடிகட்டித்தான் அதன் பிரதான அறிக்கையில் மண்டல் கமிசன் சேர்த்துள்ளது. மண்டல் கமிசனுக்கு திராவிடக் கட்சிகளுடன் இருந்த அரசியல் உறவுதான் இப்படி வடிகட்டுவதற்கு காரணம். அதோடு அந்த ஆய்வறிக்கையின் கருத்துக்களை கமிசன் அவசியம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்று அவசியமில்லை என்று கூறியும் மண்டல் கமிசன் தெரிவித்துவிட்டது; இருந்தபோதும் அக்கமிசன் வடிகட்டி தரப்பட்ட பகுதியும் கூட மேற்கண்டவாறு இடஒதுக்கீடு பிரச்சினை பற்றிய திராவிடக் கட்சிகளின் மோசடிகளை அம்பலப்படுத்தி விடுகிறது.

மண்டல் கமிசன் அறிக்கையின் பகுதி II, தொகுதி IV, அத்தியாயம் II வதாகப் பிரசுரிக்கப்பட்டுள்ள டாடா சமூக அறிவியல் கழக ஆய்வறிக்கை மேலும் கூர்மையாகவே திராவிடக் கட்சிகளின் மோசடிகளை அம்பலப்படுத்துகிறது. அதன் முக்கிய அம்சங்களை அடுத்த இதழில் பார்ப்போம்.

படிப்பகம்

www.padippakam.com

பஸ் கட்டண உயர்விற்கு எதிரான தமிழக மாணவர் போராட்டம் மின்னி மறைந்துவிட்டது. இப்போராட்டத்தில் மாணவ - மாணவிகள் சிந்திய ரத்தத்திற்கு அர்த்தமில்லாமல் போய்விட்டது. போராட்டம் தோல்வியைத் தழுவியுள்ளது. இன்னொரு வகையில் சொல்லப்போனால் ஆளுங்கும்பல் எதிர்பார்த்த முடிவை அடைந்துவிட்டது.

"மிஞ்சி, மிஞ்சிப் போனால் கொஞ்சம் நாட்களுக்குப் போராடுவார்கள்; பிறகு தானே அடங்கிப் போவார்கள்" என்ற திமிருடனேயே அநியாயமாகப் பஸ் கட்டணத்தை பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் உயர்த்தியது. ஆனால் எதிர்ப்பு போராட்டம் தீவிரமடைந்தது. மாணவர்கள் தன்னெழுச்சியாக வீறுகொண்டு எழுந்து போராடினர். ஓட்டுக்கட்சிகளும் இதற்குப்பின் தத்தம் பங்கிற்கு போராட்டத்தை அறிவித்து நடத்தின. இதை முறியடிக்கத் திட்டமிட்டு 'பஸ் கட்டணக் குறைப்பு' எனத் தில்லுமுல்லு திட்டத்தை அறிவித்து ஆளுங்கும்பல் பூதாகரமாகப் பிரச்சாரப்படுத்தியது. மாணவர்களின் வாயை அடக்கவும் அவர்களுக்குரிய சலுகை கட்டணத்தில் ஏற்கனவே உயர்த்தியதில் சிறிதளவு குறைத்தது. ஆளுங்கும்பல் எதிர்பார்த்தபடியே மாணவர்களின் போராட்டம் முடங்கிப்போனது. பா.ம.க., தி.மு.க நடத்திய போராட்டங்களும் பிசுபிசுத்துப் போயின.

ஜெயா கும்பலின் பஸ் கட்டணக் குறைப்பு மோசடியை (அதாவது உயர்த்திய கட்டண வருவாயில் அரசுக்கு பெருமளவிற்கு இழப்பு இல்லாதவண்ணம் குறிப்பிட்ட கட்டணங்களில் மட்டும் மாற்றம் செய்யப்பட்டது. ஜவுளிக்கடையில் துணியின் விலையை இருமடங்காக்கிவிட்டு தள்ளுபடி என குறைந்த தொகையை அறிவிப்பார்களே அதுபோல்) அம்பலப்படுத்தி அதற்கெதிராக இன்னும் வேகத்தோடு போராட்டத்தை முன்னெடுத்திருக்க வேண்டும். இடையில் ஓடிவந்து தலைமை தாங்கிய போலிக் கம்யூனிஸ்டுகளின் மாணவர் அமைப்புத் தலைமையும் போராட்டத்தை பாதியிலேயே கைகழுவிவிட்டன. பிற ஓட்டுக்கட்சிகளும் வரம்புக்குட்பட்ட போராட்டத்துடன் நிறுத்தி முகந்திருப்பிக் கொண்டன.

எழுச்சியுற்ற மாணவர் போராட்டம் வீழ்ச்சியுற்றதற்கு என்ன காரணம்? போராட்டம் தோல்வியைத் தழுவினாலும் அதைப் பயனுள்ளதாக்கிக் கொள்வது எவ்வாறு? இவற்றிற்கான விடையை காண்பது அதாவது தோல்விகளிலிருந்து படிப்பினை பெற்று வெற்றிக்கான படிகள் அமைப்பது மிகவும் அவசியமானது.

• • •

மாணவர்களை வன்முறையாளர்களாகச் சித்தரித்து, அடக்குவேன், ஒடுக்குவேன் என மிரட்டி இரண்டு மாதங்களுக்கு முன்பு தனது வாய்க்கொழுப்பை வானொளியில் வழியவிட்டார், ஜெயலலிதா. அன்றிலிருந்தே மாணவாகளை சமூக விரோதிகள் போல் அணுகி, தாக்குதலை போலீசு வலுப்படுத்தியது. மாணவர்களின் போராட்டங்களையெல்லாம் காட்டுமிராண்டித்தனமாக அடக்கியது. சென்னை கால்நடை மருத்துவக்கல்லூரி மாணவர்கள் கற்களாலும் லத்தியாலும் தாக்கப்பட்டனர். பலர் மண்டைபிளக்கமுற்றும், படுகாயமடைந்தும் சிகிச்சை பெற்றனர். திருவண்ணாமலை கலைக்கல்லூரி மாணவர்கள் ஓட ஓட விரட்டியடிக்கப்பட்டனர்.


இதைத் தொடர்ந்து பஸ் கட்டண எதிர்ப்பு போராட்டத்தில் சென்னை, மதுரை, திருச்சியில் மாணவர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டனர். குறிப்பாக மதுரை மருத்துவக் கல்லூரி மாணவர்களை தாக்கி பலரின் மண்டையை உடைத்தது, உதவி கமிஷனர் சிவனாண்டி தலைமையிலான போலீசுப்பட்டாளம். போலீசின் அராஜகத்தைக் கண்டித்து அதன்பின் நடந்த மாணவர் போராட்டங்களும் இவ்வாறே அடக்கப்பட்டன. தமிழகமெங்கும் ஆயிரக்கணக்கில் மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

போராடிய மாணவர்களை போலீசு மட்டுமல்ல, அ.தி.மு.க. காலிகளும் தாக்கினர். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மீது போலீசும் உள்ளூர் அ.தி.மு.க புள்ளியின் காலிகளும் கூட்டு சேர்ந்தே தாக்குதல் தொடுத்தனர். சென்னை புதுக்கல்லூரி மாணவர்களும், மாநில கல்லூரி மாணவர்களும் வடசென்னை அம்பேத்கார் கல்லூரி மாணவர்களும் அ.தி.மு.க காலிகளால் தாக்கப்பட்டனர்.

ஜெயா கும்பலின் பாசிச அடக்குமுறையைக் கண்டித்து போராட எவ்விதத்திலும் தகுதியற்ற போலிக் கம்யூனிஸ்டுகள் தான் மாணவர் போராட்டங்களுக்கு தலைமை கொடுத்தனர். இரு போலி கம்யூனிஸ்டுகளும் தாங்கள் ஆளும் மாநிலங்களில் - ஆட்சி செய்த மாநிலங்களில் மக்கள் போராட்டங்களை ... அடக்கவும் அடக்கி ஒடுக்குபவர்களாகவுமே இருக்கிறார்கள்.

'மார்க்சிஸ்டுகள்' ஜெயா கும்பலைப் போலவே தாங்கள் ஆளும் மேற்கு வங்கத்தில் பஸ் கட்டணத்தை ஏற்றினர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராடியவர்களை போலீசை விட்டுத் தாக்கினர். பலரின் மண்டையை உடைத்து படுகாயப்படுத்தியது மே.வங்கப் போலீசு. அ.தி.மு.க காலிகளைப் போலவே 'மார்க்சிஸ்டு' குண்டர்கள், போராடியவர்களை தாக்கி காயப்படுத்தினர். இவர்கள்தான் ஜெயா கும்பலின் பாசிச அடக்குமுறையை எதிர்ப்பதாக தமிழகத்திலே நாடகமாடுகிறார்கள்.

# தமிழக மாணவ
# படிப்பி







# வெற்றிக்க

ஜெயாவின் ஜனநாயக விரோதத் தாக்குதலை முறியடிப்பது அல்ல; எரிகிற வீட்டில் கிடைப்பது ஆதாயம் என அரசியல் ஆதாயம் தேடுவதுதான் இவர்களது நோக்கம். அதனால்தான் இரு போலி கம்யூனிஸ்டு அமைப்புகளின் மாணவர் அமைப்புகள், மாணவர்களின் போராட்டம் தன்னெழுச்சியாக எழுந்து வீச்சை ஏற்படுத்தியபின் ஓடிவந்து தலையை நுழைத்தன.



படிப்பகம்

www.padippakam.com

மாணவர்கள் தங்கள் போராட்டத்தை ஒரு வரம்புக்குள் குறுக்கிக் கொண்டனர். வெகுஜனப் பிரச்சினையாக இருந்தும் சகல தரப்பினர்களிடையே இணைந்து அல்லது ஆதரவை நாடி பெற்றாவது போராட்டத்தை முன்னெடுத்திருக்க வேண்டும். இதை மாணவர்கள் செய்யாததைக் கூட ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் இரு போலிக் கம்யூனிஸ்டு அமைப்புகளும் தெரிந்தே அதற்கான எவ்வித முயற்சியும் செய்யாததுதான் பச்சை துரோகம். இத்தனைக்கும் தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், விவசாயிகள், பெண்கள் போன்ற பிரிவினரிடையே போலிகள்

# ...ராட்டம் தரும் ...கள் ...ா படிகள்



போலீசு தாக்குதலுக்குள்ளான தமிழக மாணவர்கள்



மேற்கு வங்கத்தில் போலீசின் தாக்குதல்

அமைப்பை பெற்றுள்ளனர். கட்சி ரீதியாக தமது வெகுஜன அமைப்புகளை ஒருங்கிணைத்து போராட்டத்தை முன்னெடுப்பதை திட்டமிட்டே தவிர்த்தனர்.

போராட்டத்தை ஜெயா கும்பல் பாசிச கரம் கொண்டு ஒடுக்கியது. பல இடங்களில் மாணவர்களை மக்களிடமிருந்து தனியாகப் பிரித்து வட்டமிட்டு வியூகம் அமைத்து போலீசு தாக்கியது. போராடியவர்களை கைது செய்து கொண்டு போய் பொய் வழக்குப் போட்டதோடு போராடமால் இருந்த மாணவர்களையும் முன்கூட்டியே கைது செய்தது. மாணவர் விடுதிகளில் புகுந்து கைது செய்து சிறையிலடைத்தது. கூட்டமாக சென்ற மாணவர்களைக் கூட அ.தி.மு.க காலிகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் மாணவர்களிடையே மாணவர்களாகப் புகுந்தும் தாக்குதல் தொடுத்தனர். இவையெல்லாம் தொடர்ந்தும் போலி கம்யூனிஸ்டுகள் சவத்தனமாக பழைய முறையிலேயே ஊர்வலம், ஆர்ப்பாட்டம், பஸ் மறியல் என்று மட்டுமே போராட்டத்தை நடத்தினர். புதிய உக்தியோடு பாசிச கும்பலின் சதித்தனமான தாக்குதலை முறியடித்து போராட்டத்தை முன்னெடுக்கவில்லை. பஸ் மறியலையும் பிற ஓட்டுக் கட்சிகளைப் போலவே முன்னறிவித்து கும்பல் கும்பலாக சிறைக்குச் சென்று போராட்ட சக்திகளை இழந்தனர். புதிய உக்தியோடு மேற்கு வங்கத்தில் போராட்டத்தை அடக்கும் போலிக் கம்யூனிஸ்டுகளுக்கு புதிய வகை - ரகசிய முறைகளிலும் போராட்டத்தை எடுத்துச் செல்ல வேண்டும் என்பது தெரியாமலில்லை; வேண்டுமென்றே நிராகரித்தனர் என்பது தான் முக்கியம்.

தொலைநோக்குப் பார்வையுடனும் -விரிந்த அரசியல் பார்வையுடனும் மாணவர்கள் போராட்டம் முன்னேறியிருக்க வேண்டும். ஜெயா கும்பலின் பாசிச அடக்குமுறையில் ஒரு பகுதிதான் பஸ் கட்டண உயர்வு எதிர்ப்பு போராட்டத்தின் மீதான அடக்குமுறை. இதே சமயத்திலும் இதற்கு முன்னரும் ஈழ விடுதலை ஆதரவாளர்கள் மீதும் அமைப்பினர் மீதும் ஜெயா கும்பல் அடக்குமுறை தொடுத்துக் கொண்டிருந்தது. போராடிய மீனவர்கள், தொழிலாளர்கள் கூட துப்பாக்கிக்கு இரையாக்கப்பட்டு ஒடுக்கப்பட்டனர். சனாதன தேவபாடை மொழி சமஸ்கிருதத்திற்கு வேதாகம கல்லூரி, பார்ப்பன சங்கராச்சாரி கும்பலுக்கு சலுகை, கோயில் திருப்பணிக்கு கோடி ரூபாய் என மேல்சாதி வெறிச்செயல்களை ஜெயா கும்பல் அரங்கேற்றுகிறது. இதற்கு எதிராக வரும் குரல்களும் நசுக்கப்படுகின்றன. எதிர்த்தவர்கள் சாதிரீதியாக இழிவுபடுத்தப்பட்டு தாக்கப்படுகிறார்கள். இவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு வெறும் பஸ் கட்டண உயர்வு எதிர்ப்பு போராட்டத்தைப் பொருளாதாரப் போராட்ட பாணியிலேயே இரு போலி கம்யூனிஸ்டு அமைப்புகளும் முன்னெடுத்துச் சென்றன. பஸ் கட்டண உயர்வு எதிர்ப்பு போராட்டத்தை அரசியல் போராட்டத்துடன் அதாவது பார்ப்பன - பாசிச அடக்கு முறைக்கு எதிரான போராட்டத்துடன் ஒருங்கிணைத்திருக்க வேண்டும். ஆனால் இதையும் போலிகள் திட்டமிட்டே புறக்கணித்தார்கள். அடுத்த முறை தேர்தலில் நான்கு சீட்டுக்காக ஜெயா காலை நக்குவதற்கு கணக்கு போட்டுக்கொண்டு வாளாயிருந்தார்களோ என்னவோ?

போலிகளின் மேற்கண்ட நடவடிக்கைகள் எல்லாம் ஆணித்தரமாக அறிவிப்பது அவர்களின் அரசியல் ஓட்டாண்டித்தனத்தைத் தான். பிழைப்புவாதிகளாக மாறிவிட்ட அவர்களிடம் நாம் வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது. ஆனால், மந்திரத்தில் மாங்காய் வரவழைப்பது போல் இத்தகைய ஓட்டாண்டித்தனமான நடைமுறையிலேயே புரட்சியை சாதிக்கப் போவதாக பீற்றித் திரிகிறார்கள். இவர்களை நம்பி மோசம் போவது, தெரிந்தே சேற்றை அள்ளி மூஞ்சியில் பூசிக் கொள்வதைத் தவிர வேறில்லை.

ஆனால் இவற்றையெல்லாம் புரிந்து, தெளிந்து போலிகளின் தலைமையை நிராகரிக்கும் நிலையில் மாணவர்கள் இல்லை என்பது வருத்தமளிக்கும் விசயம். போராட்டத்தை அனைத்துக் கல்லூரி மாணவர்களையும் ஒருங்கிணைத்து எடுத்துச் செல்ல மாணவர்களுக்கென ஒரு சரியான வலுவான அமைப்பு வளராததாலேயே போலிகள் முந்திகொண்டு தலைமை கொடுத்து ஆதாயமடைந்துள்ளனர். மாணவர்களும் தவிர்க்க முடியாமல் அவர்களின் தலைமையை ஏற்றுக்கொள்ள வேண்டிவந்தது. ஆனால் போலிக் கம்யூனிஸ்டுகளின் அரசியல் ஓட்டாண்டித்தனத்தை அம்பலப்படுத்தி அதன் தலைமையை தூக்கியெறியும் நிலையிலோ, தங்களுக்கென புதிய ஒரு அமைப்பை உருவாக்கும் முயற்சியோ கூட இன்றி மாணவர்கள் அரசியலற்ற - சமூக அக்கறையற்ற வாதத்திலேயே மூழ்கியுள்ளனர். இதை நோக்கி அவர்கள் சிந்திக்கக்கூட முடியாத வண்ணம் சீரழிவு கலாச்சாரம் அவர்களை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. ரசிகர் மன்ற - சினிமா மாயைகளிலும், ஆபாச கேளியாட்டங்களிலும் சிக்குண்டு கிடக்கிறார்கள்.

இந்நிலை மாறவேண்டும். இந்தியை தமிழகத்தில் அண்டவிடாமல் அடித்து விரட்டிய பெருமை தமிழக மாணவச் சமுதாயத்திற்கு உண்டு. ஜெயா கும்பலின் பார்ப்பன - பாசிச ஒடுக்குமுறை தொடரவே செய்யும். இதையும் தமிழகத்திலிருந்து விரட்டியடிக்கும் சக்தி மாணவச் சமுதாயத்திற்குண்டு. அதற்காக புரட்சிகர அரசியலின் கீழ் - அமைப்பின்கீழ் தங்களை இன்றே இணைத்துக் கொள்ளத் தொடங்கவேண்டும்.

● ராசு.

படிப்பகம்

www.padippakam.com

# தொழிலாளரைப் பலி கேட்கும் புதிய தொழிற்கொள்கை

கோடிக்கணக்கான இந்தியத் தொழிலாளர்களின் கழுத்தில் புதிய தொழிற்கொள்கை என்ற சுருக்கு கயிறு மாட்டப்பட்டுள்ளது. பன்னாட்டு பகாசுர கம்பெனிகளின் பகற்கொள்ளைக்கு கதவை அகலத் திறந்துவிட்டு, தரகு அதிகார முதலாளிகளின் நலனுக்காக ஆலைகளை மறுசீரமைப்பது, தனியார் துறையிடம் ஒப்படைப்பது, நவீன மயமாக்குவது என்கிற புதிய கொள்கையை அரசு அறிவித்துள்ளது. மின் உற்பத்தி, ரயில்வே பெட்ரோலிய எண்ணெய் துரப்பணவு, தொலைத் தொடர்பு, இராணுவத்துக்கான ஆயுத தளவாட உற்பத்தி முதலானவை மட்டுமல்ல; பொது விநியோகம், போக்குவரத்து, சாலைகளைக் கூட தனியாரிடம் ஒப்படைக்க முடிவாகியுள்ளது. ஏற்கனவே உள்ள அரசுத்துறை நிறுவனங்கள் ஏகபோகத் தடைச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு அவை தனியார் வசம் தாரை வார்க்கப்படுகின்றன. அரசுத்துறை நிறுவனங்கள் பெருமளவு மூலதனத்தை விழுங்கிவிட்டு நட்டமேற்படுத்துவதால், உற்பத்தியும் லாபமும் பெருக அவற்றை தனியாரிடம் ஒப்படைப்பதே முன்னேற்றகரமானது என்று ஆட்சியாளரும் பொருளாதார வாதிகளும் வாதிடுகின்றனர்.

'நாட்டின் நலன் கருதி'ச் செய்வதாகக் கூறிக்கொண்டு சிறுபான்மை காங்கிரசு ஆட்சியாளர்களால் கொண்டுவரப்பட்டுள்ள இப்புதிய தொழிற்கொள்கையின் விளைவாக லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிலிருந்து வீசியெறியப்படுவது நிச்சயமாகிவிட்டது. ஏனெனில் எந்தவொரு அரசுத் துறை நிறுவனத்திலும் கணிசமான தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்புவோம் என்கிற முதலாளிகளின் கோரிக்கையை அரசு ஏற்றுக் கொண்டுதான் அவற்றைத் தனியாருக்கு விற்கிறது. மேலும் அன்னிய ஏகபோக நிறுவனங்களும் தரகுப் பெருமுதலாளிகளும் தமது ஆலைகள் நலிவடைந்துவிட்டதாகக் கூறி அவற்றை மூடினால் இனி அரசு அவற்றை ஏற்கப் போவதில்லை. விளைவு - லட்சக்கணக்கான தொழிலாளர்களின் வேலை இழப்பு!

### வேலையில்லாப் பட்டாளம் பெருகும்

கடந்த ஜூன் மாத இறுதிவரை 1042 தனியார் துறை நிறுவனங்களும், 98 அரசுத் துறை நிறுவனங்களும் நலிவடைந்து நட்டத்தில் இயங்குவதாக அரசு அறிவித்துள்ளது. இவை எப்போது வேண்டுமானாலும் மூடப்படலாம்; அரசுத்துறை நிறுவனங்கள் தனியாருக்கு விற்கப்படலாம். "தற்போதைய புதிய தொழிற்கொள்கையின் விளைவாக ஏறத்தாழ ஒரு கோடிப்பேர் வேலையிழப்பார்கள். மேலை நாடுகளில் வேலையிழந்த தொழிலாளருக்கு சமூக பாதுகாப்புத் திட்டம் இருக்கிறது. நமது நாட்டில் வறுமையைத் தவிர வேறொன்றுமில்லை" என்று காங்கிரசு கட்சியின் துரோக தொழிற்சங்கமான ஐ.என்.டி.யு.சி.யின் பொதுச் செயலாளர்களில் ஒருவர் ஒப்புக் கொள்கிறார். வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துவிட்டுக் காத்திருக்கும் மூன்றரை கோடிப் பேரையும், இன்னும் கிராமப்புறத்தில் வேலையில்லாதோரையும் சேர்த்தால் இந்தியாவின் வேலையில்லாப் பட்டாளத்தின் எண்ணிக்கை ஏறத்தாழ 10 கோடியாகிவிடும் என்று பொருளாதாரவாதிகள் மதிப்பிடுகின்றனர்.

### வேலையிழப்புக்கு காரணம் என்ன?

நாட்டை முன்னேற்ற எல்லாத் துறைகளையும் நவீனமயமாக்கி, பன்னாட்டு மூலதனத்தை தாராளமாக அனுமதித்து போட்டியை வளர்ப்பது அவசியம் என்று ஆட்சியாளர்கள் கட்டுப்பாடற்ற கொள்ளைக்கு கதவை அகலத்திறந்து விடுகின்றனர். அன்னிய நிறுவனங்களின் ஆதிக்கம் பெருகுவதால் சிறு தொழில்களும் தேசியத் தொழில்களும் நலிவடைந்து தொழிலாளர்கள் வேலையிழக்க நேரிடுகிறது. மேலும் அன்னிய நிறுவனங்களோடு ஏற்கனவே உள்ள ஆலைகள் போட்டி போட வேண்டுமானால் இயந்திர சாதனங்களை நவீனப்படுத்துவது அவசியமாகி விடுகிறது. இதன் விளைவாக மேலும் பல தொழிலாளர்கள் வேலையிழக்க நேரிடுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக உலக வங்கி ஐ.எம்.எப்-பிடம் நாட்டை அடகு வைத்ததன் விளைவாக, அது விதிக்கும் மக்கள் விரோத கட்டளைகளை இந்திய அரசு ஏற்றுக்கொண்டு ஆட வேண்டியிருக்கிறது. மானியங்களைக் குறை, பேருந்துக் கட்டணத்தை உயர்த்து, லாபமில்லாத ஆலைகளை மூடு, தொழிலாளர்களை வெளியேற்று, தனியார் மயமாக்கு - முதலான நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டுதான் இந்திய அரசு கடன் வாங்கியிருக்கிறது. இதன் விளைவாக லட்சக் கணக்கான தொழிலாளர்கள் வீதியில் வீசியெறியப்படுகிறார்கள்.

> **இப்புதிய கொள்கை தொழிலாளர்களின் உரிமையையும் வாழ்வையும் பறிப்பது மட்டுமல்ல; நாடு முழுவதும் பாசிச அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவதற்கான அரசியல் - பொருளாதார ரீதியான தயாரிப்புதான் இது.**

### அரசு ஆலைகள் தனியாருக்கு! தொழிலாளருக்கு துப்பாக்கிச் சூடு!

நாட்டை 21ம் நூற்றாண்டுக்கு இழுத்துச் செல்லப்போகிறேன் என்று பாசிச ராஜீவ் கொண்டு வந்த புதிய பொருளாதாரக் கொள்கையின் கோரமான விளைவுகள் தெரிய ஓரிரண்டு ஆண்டுகளாவது தேவைப்பட்டது. ஆனால், தற்போதைய புதிய தொழிற்கொள்கையின் விளைவுகள் ஓரிரு மாதங்களிலேயே தெரிந்துவிட்டது. கடந்த ஜூன் மாதத்தில் உத்திரப் பிரதேச சிமெண்ட் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான 3 ஆலைகளை டால்மியா எனும் தரகுப் பெருமுதலாளிக்கு அரசு தாரை வார்த்துக் கொடுத்தது. ஆலையை வாங்கிய டால்மியா கும்பல் 600 தொழிலாளர்களை தேவைக்கு அதிகமாக உள்ளதாகக் கூறி வெளியேற்றியது. இதை எதிர்த்துப் போராடிய தொழிலாளர்கள் மீது போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தி 12 பேரை அநியாயமாகக் கொன்றனர். 50க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் படுகாயமுற்றனர்.

தமிழகத்தில் அரியலூர் சிமெண்ட் ஆலை, விருத்தாசலம் பீங்கான் தொழிற்சாலை, மாயனூர் ஆஸ்பெஸ்டாஸ் பைப்ஸ் நிறுவனம், ஆலங்குளம் சிமெண்ட் ஷீட் நிறுவனம் ஆகிய அரசுத் துறை நிறுவனங்களை தனியாருக்கு விற்பதற்கான அறிவிப்பை தமிழக அரசு கடந்த மே மாதத்தில் வெளியிட்டுள்ளது. இதனால், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழப்பார்கள். இதேபோல ரயில்வே, அனல்மின்துறை, நிலக்கரி சுரங்கங்கள், கொதிகலன் ஆலைகள், எண்ணெய் - துரப்பண நிறுவனம் முதலான அரசுத்துறை நிறுவனங்கள் பகுதியளவுக்கு தனியாருக்கு விற்கப்படுவதன் விளைவாக ஏறத்தாழ 2 லட்சம் தொழிலாளர்கள் வேலை இழப்பார்கள் என்று தொழிற் சங்கங்கள் அச்சம் தெரிவித்துள்ளன.

### ஆலை மூடலுக்கு அங்கீகாரம்

தொழிலாளர்களின் வாழ்வைப் பறித்தது போதாது என்று குப்புறத் தள்ளி குழியையும் பறிக்கத் துவங்கி விட்டது, காங்கிரசு அரசு. புதிய தொழிற்கொள்கையின்படி, தொழிற்சாலை மற்றும் தொழிற்தகராறு சட்டங்களை முதலாளிகளின் கொள்ளைச் சுரண்டலுக்கு வசதியாக திருத்தியமைக்க தீர்மானித்துள்ளது. தொழிற்தகராறு சட்டப்பிரிவு 25(0) என்பது ஆலை மூடலுக்கு எதிரானதாகும். இப்போது இச் சட்டத்தைத் திருத்தி நலிவுற்ற ஆலைகளை மூடுவதற்கு அங்கீகாரம் அளிக்க அரசு தீர்மானித்துள்ளது. இதேபோல ஆலைச்சட்டம் பொருந்துகிற தொழிற்சாலைகளின் குறைந்தபட்ச தொழிலாளர் அளவு கோலான 10 பேர் + 20 பேர் என்பதை 30 பேர் + 50 பேர் என்று மாற்ற அரசு உத்தேசித்துள்ளது. இதன்



படிப்பகம்

www.padippakam.com

விளைவாக 30 பேருக்குக் குறைவான ஆலைகளில் தொழிற்சாலை சட்டம் செல்லுபடியாகாது.


ஏற்கனவே பெருகிவரும் விலையேற்றத்தாலும் ரூபாய் மதிப்புக் குறைப்பாலும், தொழிலாளர்களின் உண்மை ஊதியம் குறைந்து கொண்டே போகிறது. புதிய அரசு ஆட்சிக்கு வந்துள்ளதால், இம்முறை போனசு வழங்கப்பட்டுள்ளதே தவிர பொருளாதார நிலைமையைக் காரணம் காட்டி போனசு மற்றும் ஊதியத்தை முடக்கும் திட்டத்தில்தான் ஆட்சியாளர்கள் உள்ளனர். ஆலை மூடல், ஆட்குறைப்பு, ஊதிய முடக்கம், வேலைப்பளு அதிகரிப்பு முதலான இத்தாக்குதல்கள் தொழிலாளர்களை தவிர்க்கவியலாமல் போராட்டப் பாதைக்கு இழுக்கின்றன. அவ்வாறு தொழிலாளர்கள் போராடும் பட்சத்தில் அவர்களின் குரல்வளையை நெறிக்கும் நோக்கத்தோடுதான் புதிய தொழிற்கொள்கையும் புதிய சட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே போராடும் தொழிலாளர்கள் மீது பயங்கரவாத தடைச்சட்டமும் தேசிய பாதுகாப்புச் சட்டமும் ஏவப்படுகின்றன. அவையும் போதாதென்று தொழிற்சங்க உரிமைகளை முற்றாகப் பறித்து தொழிலாளர்களை முடக்கி வைக்கும் முயற்சிதான் இப்புதிய தொழிற்கொள்கை.

### பாசிசத் தாக்குதலுக்கான தயாரிப்பு

சுருக்கமாகச் சொன்னால் இப்புதிய கொள்கை தொழிலாளர்களின் உரிமையையும் வாழ்வையும் பறிப்பது மட்டுமல்ல; தொழிலாளர்கள் மட்டுமின்றி நாடுமுழுவதும் பாசிச அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவதற்கான அரசியல் - பொருளாதார ரீதியான தயாரிப்புதான் இது. தரகுப் பெருமுதலாளிகளும் அன்னிய ஏகபோக நிறுவனங்களும் இதனாலேயே இக்கொள்கையை வாழ்த்தி வரவேற்கின்றனர். புதிய தொழிற்கொள்கையால் மேலும் பலம் பெற்றுள்ள கோவை மில் முதலாளிகள் தொழிலாளர்களுக்கு இன்னமும் போனசு கொடுக்காமல் அடாவடித்தனம் செய்கின்றனர். மத்தியப் பிரதேசத்திலுள்ள சட்டிஸ்கார் பிராந்தியத்தின் போர்க்குணமிக்க தொழிற்சங்கத் தலைவரான சங்கர் குகா நியோகியை முதலாளிகளின் அடியாட்கள் சுட்டுக்கொன்றுள்ளனர். அகமதா பாத்திலும் பம்பாயிலும் 50க்கும் மேற்பட்ட மில்கள் ஆண்டுக்கணக்கில் மூடிக்கிடக்கின்றன. சென்னை பின்னி மில்லும், ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனமும் முடிவே இல்லாமல் மூடிக்கிடக்கின்றன.

### தொழிற்சங்கங்களின் கையாலாகாத்தனம்

நீண்ட காலமாக பொருளாதாரவாத புதைசேற்றில் தொழிலாளர்களை முடக்கி வைத்துள்ள தொழிற்சங்கங்கள் இப்புதிய தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் விழி பிதுங்கி நிற்கின்றன. "தொழிலாளர்கள் போராட முன்வரவேண்டும். நாம் எவ்வளவு விரைவாக தொழிலாளர்களுக்கு போதமளிக்கிறோமோ அதைப் பொருத்தே நமது வெற்றி அமையும்" என்கிறார் சி.ஐ.டி.யு.வின் பொதுச் செயலாளர், பாண்டே. இதுவரை எத்தனை தொழிலாளர்களுக்கு அரசியல் போதமளித்தார்கள் என்பது அவர்களுக்கே வெளிச்சம்! "நான் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். தனியார் மயமாக்குவது தொடருமானால் எனது போராட்டம் எப்படிப்பட்டது என்பதை நிரூபித்துக் காட்டுவேன்" என்று சவால் விட்டார், பம்பாயின் பிரபல தொழிற்சங்கத் தலைவரான தத்தா சமந்த். இப்போது அவரது சவால் வெறும் சவடாலாகிவிட்டது.




இருப்பினும் மூண்டெழும் தொழிலாளர்களின் வெறுப்பு, அதிருப்தி மற்றும் போராட்டங்கள் காரணமாக புதிய தொழிற்கொள்கையை எதிர்த்து நாடுதழுவிய அளவில் நவம்பர் 29 அன்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்ய அனைத்து தொழிற்சங்கங்களும் தீர்மானித்துள்ளன. வழக்கம்போல காங்கிரசின் துரோக தொழிற்சங்கமான ஐ.என்.டி.யு.சி.யும், பி.எம்.எஸ்.சங்கமும் இவ்வேலை நிறுத்தத்தில் பங்கேற்கப்போவதில்லை என்று அறிவித்துள்ளன. ஆனால், ஐ.என்.டி.யு.சி.யின் இம்முடிவை எதிர்த்து மே.வங்கம், மத்தியப் பிரதேச மாநிலக் கிளைகள் 'போர்க் கொடி'த் தூக்கியுள்ளன. இவையும் இன்னும் சில மாநிலக் கிளைகளும் இவ்வேலை நிறுத்தத்தில் பங்கேற்கப் போவதாக அறிவித்துள்ளன. அதன்பிறகு வேலை நிறுத்தம் நியாயமானதுதான் என்றாலும் அதை அரசியல் நோக்கங்களுக்காக எதிர்க் கட்சிகள் பயன்படுத்துவதாலேயே எதிர்ப்பதாக ஐ.என்.டி.யு.சி. தலைவர் ஜி.ராமானுஜம் மழுப்பினார். ஆளும் கும்பலின் துரோக தொழிற்சங்கமான ஐ.என்.டி.யு.சி.யில் திரண்டுள்ள தொழிலாளர்களிடம் அரசின் புதிய தொழிற்கொள்கைக்கு எதிராக நிலவும் அதிருப்தியும் ஆத்திரமுமே இதற்குக் காரணம்.

ஐ.என்.டி.யு.சி. தொழிலாளர்களே தலைமையின் முடிவை மீறி போராட முன்வந்திருப்பதும், அனைத்து தொழிற்சங்கங்களும் நாடுதழுவிய அளவில் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதும் வரவேற்கத்தக்கதுதான். இருப்பினும் சடங்குத்தனமான முறையில் அடையாள வேலை நிறுத்தம், தர்ணா, கோரிக்கை வாரம் கடைபிடிப்பது என்பதற்கு மேல் போக எந்த சங்கமும் தயாராக இல்லை. தொழிலாளருக்கு எதிரான அரசின் தாக்குதல் வரும்போது மட்டும் எதிர்ப்பு தெரிவித்துவிட்டு பின்னர் முடங்கிக் கொள்வதாகவே அவற்றின் செயல்பாடுகள் உள்ளன. தற்போதைய தனியார் மயமாக்கும் கொள்கைகளும் கருப்புச் சட்டங்களும் பாசிசத் தாக்குதலுக்கான தயாரிப்பு என்று விளக்கி தொழிலாளர்களையும் உழைக்கும் மக்களையும் அரசியல் ரீதியாக அணிதிரட்டுவதை அறிந்தே இச்சங்கங்கள் புறக்கணிக்கின்றன.

கடந்த 10 ஆண்டுகளாக பாசிச காங்கிரசு ஆட்சிகளில் இத்தகைய அரசியல் - பொருளாதாரத் தாக்குதலும் பாசிசத்துக்கான தயாரிப்பும் வேகமாக நடந்து வருகின்றன. கடந்த ஐந்தாண்டுகளில் அகமதாபாத்தில் ஏறத்தாழ 50 மில்கள் மூடப்பட்டு ஒரு லட்சம் தொழிலாளர்கள் வேலையிழந்தனர். பர்மா - ஷெல் நிறுவனம் கடந்த 15 ஆண்டுகளில் 19,000 தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டியுள்ளது. பாசிச ராஜீவின் புதிய ஜவுளிக் கொள்கையால் லட்சக்கணக்கான நெசவாளர்கள் வேலையிழந்து பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்டார்கள். அப்போதும் சரி, இப்போதும் சரி போலிக் கம்யூனிஸ்டுகளும் எதிர்கட்சிகளும் அரசின் கொள்கையை எதிர்ப்பதாக தொழிலாளர்களை அணி திரட்டுகிறார்களே தவிர, அரசின் தன்மையையும் அதை தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் அணிதிரண்டு வீழ்த்த வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்துவதில்லை. அதற்கான அரசியல் போராட்டங்களும் நடத்துவதில்லை.

எனவே தொழிலாளர் நலனை முன்னிறுத்தாமல், தொழிலாளர்களையும் உழைக்கும் மக்களையும் அச்சுறுத்தும் பாசிச அபாயத்துக்கு எதிராக அரசியல் போராட்டங்களையும் அரசியல் கிளர்ச்சிகளையும் தொழிலாளி வர்க்கம் தலைமையேற்று வழிநடத்த வேண்டும். ஓட்டுக்கட்சிகளின் தலைமையிலான பிழைப்புவாத சங்கங்களைப் புறக்கணித்து புரட்சிகர சங்கங்களைக் கட்டியமைத்துப் போராடுவதன் மூலமே இதைச் சாதிக்க முடியும்.

● மணி

படிப்பகம்

www.padippakam.com



# பாசிச மும்மூர்த்திகள்

## பாசிச ஜெயாவை நம்பி தற்கொலைப் பாதையில் பார்ப்பனர்கள்

இந்தியாவில் உள்ள காங்கிரசு, பாரதீய ஜனதா, அ.தி.மு.க. ஆகிய பாசிச கட்சிகள் - தலைமைகளின் அரசியல், சித்தாந்த நிலைப்பாடுகளைக் கவனித்துவரும் எவரும் அவை ஜெர்மனியில் பாசிச ஆட்சியை நிறுவி, உலகப் போரைத் துவக்கி மனித இனத்துக்குப் பேரழிவை ஏற்படுத்திய நாஜி இட்லரின் அரசியல், சித்தாந்தத்தை பல்வேறு அம்சங்களில் ஒத்திருப்பதைக் காண முடியும்.

''ஆரிய பூர்வகுடி இனமே(Race) உலகில் ஒப்புயர்வற்றது. பிற பூர்வகுடி இனங்கள் எல்லாம், குறிப்பாக யூதர், பினீஷியர், அராபியர், அசிரியர் ஆகியோரை உள்ளடக்கிய செமிட்டிக் எனப்படும் பேரினத்தவர் இழிபிறவிகள். உலகை ஆளத் தகுதி உள்ள ஒரே இனமான ஆரியர் ரத்தக்கலப்பின்றித் தூய்மையைக் காத்துக் கொள்வதோடு, மற்ற இனத்தவரை ஒடுக்கி அடிமைப்படுத்த வேண்டும். ஜெர்மனியின் ஐக்கியம் - ஒருமைப்பாட்டை வளர்த்து, விரிவுபடுத்தி அதன் உலகாதிக்கத்தை நிறுவ வேண்டும். ஜெர்மானிய தேசிய சோசலிசமே இந்நாட்டிற்குப் பொருத்தமானதாகும்; அதே சமயம் உழைக்கும் மக்கள் இயக்கங்களை ஒடுக்குவதோடு, கம்யூனிஸ்ட்டுகளை ஒழித்துக்கட்ட வேண்டும்.'' - இவைதான் இட்லரின் நாஜிக் கட்சியின் அடிப்படைக் கொள்கை; அரசியல் - சித்தாந்தமாகும்.

இவ்வளவு அப்பட்டமாக இல்லையானாலும், மூடிமறைக்கப்பட்டவாறு இவற்றையே இந்திய பாசிஸ்டுகள் கொண்டுள்ளார்கள். முக்கியமாக ஆரிய இன ஒப்புயர்வற்ற தன்மையைச் சொல்லி அதன் ஆதிக்க நோக்கத்தை வெளிப்படையாக வைப்பதற்குப் பதிலாக இந்து மதவாதத்தை முன்னிறுத்தி, அதன்மூலமாக மற்ற அனைத்துப்பிரிவு மக்களையும் ஏய்த்து பார்ப்பனீய சனாதன மீட்பை மூடி மறைக்கிறார்கள்.

''அகில இந்திய தேசிய'' ஐக்கியம் -ஒருமைப்பாடு என்பதே ''இந்துத்துவ'' அடிப்படையிலானது எனக்கூறியும், போலியான மதச் சார்பற்ற போக்குகளைக் காட்டியும் சிறுபான்மை மத, இன, மொழியினரையும் இழிவுபடுத்தி அடக்கி ஒடுக்குகின்றனர். இட்லரின் நாஜிக் கட்சி மந்திரிகளான கோயாபல்ஸ், கோயரிங் ஆகியோர் கம்யூனிஸ்டுகள், செமிட்டிக் இனத்தவருக்கு எதிராக பொய்களையும் அவதூறுகளையும் பரப்புவது, ஜெர்மானிய தேசிய இனத்தவருக்கு நேர்ந்த அவமானங்களுக்கு பழிவாங்கும் தேசிய வெறியூட்டுவது, நாஜித் தலைமையின் மீது அடிமைத்தனமான வழிபாட்டை வளர்ப்பது போன்றவற்றையே வக்கிரத்தோடு செய்து வந்தனர்; கம்யூனிஸ்டுகளையும் செமிட்டிக் இனத்தவரையும் சித்திரவதை முகாம்களில் அடைத்து நரவேட்டையாடுவதைச் செய்து வந்தனர்; அண்டை நாடுகளைக் கைப்பற்றுவதற்கான ஆக்கிரமிப்பு விரிவாக்கச் சதிகளில் ஈடுபட்டிருந்தனர்.

இதே வேலைகளைத்தான் இப்போது இந்தியப் பாசிஸ்டுகள் செய்து வருகின்றனர். மத, இன, மொழிச் சிறுபான்மையினர் தமது உரிமைகளுக்காகப் போராடினாலே தேசவிரோதிகளாகவும், பிளவுவாதிகளாகவும் சித்தரிக்கின்றனர். குறிப்பாக 600 ஆண்டுகால மொகலாயர் ஆட்சிக்காலத்தில் இந்துக்கோவில்கள் சூறையாடப்பட்டு, இடிக்கப்பட்டு அவற்றின் புனிதத்தைக் கெடுத்ததாகவும் இந்துக்களைக் கட்டாய மதமாற்றம் செய்ததாகவும் இப்போதும் காஷ்மீரில் இந்துக்கோவில்கள் இடிக்கப்படுவதாகவும் இந்துக்கள் விரட்டப்படுவதாகவும் இந்த தேசிய அவமானங்களுக்கெல்லாம் பழிவாங்க வேண்டும் என்றும் மதவெறியூட்டுகின்றனர். இந்துமதத்தின் ஒரங்கமாக கருதப்படுவதற்கும், அதன் ஆதிக்கத்துக்கும் எதிராக சீக்கிய மதத்தனித்துவம் மற்றும் உரிமைகளுக்காகவும் போராடும் சீக்கியர்கள் அனைவருமே பயங்கரவாதிகள், தேசத்துரோக பிளவுவாதிகள் என மதவெறி, தேசிய வெறியூட்டுகின்றனர். இந்தியாவில் இந்தி மொழித் திணிப்புக்கு எதிராகவும் இன உரிமைக்காகவும் போராடும் ஈழத் தமிழர் விடுதலையை ஆதரிக்கும் அமைப்புகளைப் பிளவு வாதிகள், தேசத் துரோகிகள் என அவதூறு செய்கின்றனர். கம்யூனிசப் புரட்சியாளர்களை சமூக விரோதிகளாகவும், பயங்கரவாதிகளாகவும் சித்தரிக்கின்றனர்.

இவ்வாறு கோயாபல்ஸ் பாணியிலான அவதூறுகளையும் - பொய்களையும் பரப்புவதோடு கோயரிங் பாணியிலே வகுப்புக்கலவரங்களையும், அரசு பயங்கரவாதத்தையும் ஏவி அவர்களை அடக்கி ஒடுக்குவதோடு தலைமைச் சக்திகளை அழித்தொழிக்கின்றனர். இத்தகைய மதவெறி, தேசிய வெறியைப் பயன்படுத்திக்கொண்டு அண்டை நாடுகளுக்கு எதிரான ஆக்கிரமிப்பு, விரிவாக்க, ஆதித்த சதிகளிலும், முயற்சிகளிலும் கூட இறங்குகின்றனர்.

**இந்த இந்திய பாசிச சக்திகளின் அணிவரிசையில் சேர்ந்துள்ள புதிய வரவு தான் பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பல்.**

இந்த இந்திய பாசிச சக்திகளின் அ
வரிசையில் சேர்ந்துள்ள புதிய வரவுதா
பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்ப
தமிழ் நாட்டின் சில தனிச்சிறப்பான நில
மைகள் காரணமாக, திராவிட இயக்கத்தி
சீரழிந்த கவர்ச்சிவாத (பாபுலிசம்) கொ
கையையும், பிழைப்புவாத அமைப்புகள
யும் உள்ளடக்கிய பொறுக்கி அரசியலை
பயன்படுத்திக்கொண்டு இந்த பார்ப்ப
-பாசிச ஜெயலலிதா கும்பல் ஆட்சியை
பிடித்துள்ளது.

ஒரு சிறுபான்மை சாதியினரான பார்
பன நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்து
பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்ப
தனக்கு கூடுதலான சமூக ஆதரவைத் திர
டிக் கொள்வதற்காகவே இந்தக் கவர்ச்
வாத, பிழைப்புவாத பொறுக்கி அரசியல
ஓர் ஆயுதமாகத் தெரிந்தெடுத்துக் கொ
டுள்ளது.

வருடத்தில் பல நாட்கள் வேல
வாய்ப்புகளின்றி பஞ்சத்திலும் பட்டினி
லும் கிடந்து தவிக்கும் கூலி, ஏழை விவசா
களோடு ஒட்டாண்டிகளாகும் நடுத்தர வி
சாயிகள்; அரை குறையாகக் கல்வி பயில்
இளைஞர்கள்; படித்தும் வேலை வாய்
பின்றி, சீரழிந்த கலாச்சாரப் பாதிப்புக்கு
ளான இளைஞர்கள்; ஏற்கனவே நகரத்
குடிசைப்பகுதிகளில் வழியும் உதிரித் தொ
லாளர்களுடன், கிராமப்புறங்களில் இரு
விரட்டப்பட்டு நகரத்து வீதிகளில் குடி
றும் விவசாய ஏழை எளிய மக்கள், பெ
ணடிமைத்தனத்தால் ஒடுக்கப்பட்டு
போக்கில் மூழ்கிக் கிடக்கும் பெண்கள்
இப்படிப்பட்டவர்களையே குறிவைத்
பார்ப்பன - பாசிச கும்பல் தனது சமூக ஆ
வாகத் திரட்டிக் கொண்டுள்ளது. பத்தி
கைகள், வானொலி, வானொளி ஆகிய
கள் திரள் தொடர்பு சாதனங்களைக் கட்டு
டுத்தும் பார்ப்பன முதலாளிகள், அதிக
கள் ஆகியவர்களின் பிரச்சாரபலம் நடுத்
மேட்டுக்குடி மக்களில் பெரும் பிரிவின
யும் பார்ப்பன பாசிச ஜெயா கும்பலு
ஆதரவாகத் திரட்டிக் கொடுத்துள்ளது

பாசிச எம்.ஜி.ஆரிடம் இருந்து அ
யல் சொத்தாக ஒரு பெரிய பிழைப்புவ
அமைப்பை இந்தப் பார்ப்பன - பாசிச ஜெ
லலிதா கும்பல் பெற்றுள்ளது. கள்ளச்ச
யம், விபச்சாரம், சூதாட்டம் சமூக விரோ
செயல்களையும், அரசியல் தரகை
தொழில்களாக கொண்ட பிழைப்புவ
கள்; பிற தொழில்களை விட அரசிய
மிகவும் அதிகமான, சுலபமான, லா
மான தொழில் எனக்கருதி அதை
கொண்டுள்ள மேட்டுக்குடிப் பிழைப்புவ
கள் .-இப்படிப்பட்டவர்களை தலை
ளாக மட்டுமல்ல; நகரங்களிலும், கிராம
ளிலும் அனைத்து மட்டங்களிலும் பொ
பாளர்களாக உள்ள அணிகள் வரை இ



படிப்பகம்

www.padippakam.com

ய பிழைப்புவாதிகளைக் கொண்டது
ன் எம்.ஜி.ஆரிடம் இருந்து பார்ப்பன
ாசிச ஜெயலலிதா கும்பல் பெற்ற அரசி
-அமைப்புச் சொத்து. இவர்களோடு
க்கு மிகவும் விசுவாசமான, சொந்த அர
ல் ஆதரவற்ற பிழைப்புவாதிகளையும்
பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பல்
ாகச் சேர்த்துக் கொண்டுள்ளது.

கவர்ச்சிவாதம் என்று சொல்கிற
து, எம்.ஜி.ஆரிடம் "நெருக்கமான
டன்கட்டை" உறவு கொண்டிருந்த சினி
க்காரி ஜெயலலிதா என்கிற முறையில்
படுத்தப்படும் கவர்ச்சி - தனி நபர்
ாகத்தை மட்டும் குறிப்பிடவில்லை.
ம்.ஜி.ஆரின் அடியொற்றி பிற்போக்கு சித்
ந்தத்தை மூடிமறைத்துக் கொண்டு கிரா
புற, நகர்ப்புற பாமர மக்களின் அன்றா
தேவைகள், விருப்பங்கள், சுவைகளுக்
ற்ப, இலவச - அன்பளிப்புத் திட்டங்க
ளயே அடிப்படையாகக் கொண்ட கவர்ச்
ாதக் கொள்கைகளை வகுத்துக்கொண்டு
யல்படுவதையே குறிக்கிறோம்.

தமக்கென்று ஒரு உலகப் பார்வை
ாண்ட சித்தாந்தமோ, அதைப் பிரதி நிதித்
ப்படுத்தும் தலைமையோ உருவாக்கிக்
ாள்ள முடியாத இந்தப் பாமர மக்களை,
ாவிடமா - தேசியமா - பார்ப்பனியமா
வெறியா - மதச்சார்பின்மையா முற்
ாக்கா - பிற்போக்கோ என்று பார்ப்பன
பாசிச ஜெயலலிதா கும்பலின் அரசிய
ப் பாகுபடுத்திப் பார்க்க முடியாதவாறு
நபர் மோகம் - துதிபாடுகளிலும், இல
- அன்பளிப்புத் திட்டங்களும் அடங்
கவர்ச்சிவாதத்துக்குள் அடித்து வீழ்த்து
து பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்

அதே சமயம் தொழிலாளர்கள் விவசா
ள், மாணவர்கள், ஆசிரியர்கள் - அரசு
ழியர்கள் ஆகிய எந்தச் சமூகப் பிரிவினர்
தமது உரிமைகளுக்காகவும், நீதிக்காக
போராடினாலும் அரசு எந்திரத்தை ஏவி
டக்கி ஒடுக்குவது மட்டுமல்ல; கவர்ச்சி
த வெறியூட்டிப் பாமர மக்களை அவர்க
க்கு எதிராகத் திரட்டுவதுமட்டுமல்ல;
ழைப்புவாத, பொறுக்கி அரசியல் குண்டர்
ளை ஏவி ஒடுக்குவதும் பார்ப்பன - பாசிச
யலலிதா கும்பலின் அணுகுமுறையாக
ளது. தேசிய சோசலிசம் எனப்பட்ட
ாவி சோசலிச சவடால் நாஜிக் கட்சியின்
ாள்கையாக இருந்ததைபோலவே இந்
கவர்ச்சிவாதம் பாமர மக்களின் ஆதர
த் திரட்டிக் கொள்வதற்கான இந்த
ளும் கும்பலின் மோசடிக் கொள்கையாக
ளது.

கவர்ச்சிவாதத்தோடு, தனிநபர் துதி
மாகத்தையும் அனுதாபத்தையும் உரு
க்குவதிலும் அரசியல் எதிரிகளுக்கு எதி
பொய்கள் - அவதூறுகளைப் பரப்புவது
ன்பழி சுமத்துவதிலும் அரசு எந்திரத்தை
ி ஒடுக்குவதிலும் கோயாபல்சு, கோய
கை விஞ்சிவிடக் கூடியதாக பார்ப்பன
ாசிச ஜெயலலிதா கும்பல் முன்னேறுகி

ஜெயலலிதாவின் உடன் கட்டைப்
ச்சு, சட்டசபையில் மானபங்கப்படுத்த
கொல்லவும் முயன்றதாகவும் விஷம்

வைத்தும், லாரியை மோதியும் கொல்ல முயல்வதாகவும் அரசியலை விட்டே விரட்டச் சதி செய்வதாகவும் இதற்காகவே தலைமறைவாக வாழ்வதாகவும் பொய்யும் அவதூறும் பரப்பியது, பூனைப்படை அமைத்துக் கொண்டு வாழ்ந்தது, தீராத நோயிலும் அர[illegible]பணியாற்றுவதாக நடித்தது; சட்டமன்றத்தையே முகத்துதிக்கான பஜனை மடமாக மாற்றியதோடு தனது கைக்கூலிகளை ஏவி எதிர்கட்சி எம்.எல்.ஏ.க்களைத் தாக்கியதுடன் மத்திய மந்திரியையும் தாக்கிவிட்டு எல்லாம் எதிர்க்கட்சிகளின் சதி எனப்புளுகியது ....... ஆகியவை பார்ப்பன -பாசிச ஜெயலலிதா கும்பலின் கோயாபல்சு வேலைகளுக்குச் சான்றாகும்.

தி.மு.க. ஆட்சியைக் கவிழ்ப்பதற்காகவே புலிகளின் ஆயுதக் கலாச்சாரம், அதனால் தமிழ்நாட்டில் பொது ஒழுங்குக்கும், தேசிய ஒருமைப்பாட்டிற்கும் ஆபத்து என்கிற பொய்யான பீதியைக் கிளப்பியது; ராஜீவ் கொலையைப் பயன்படுத்திக் கொண்டு அனுதாப அலையைக் கிளப்பி மிருகபலத்தோடு ஆட்சியைப் பிடித்ததோடு தமிழ்நாட்டில் அரசு பயங்கரவாத ஆட்சியை - அறிவிக்கப்படாத அவசர நிலை ஆட்சியை நிறுவியது. பார்ப்பன -பாசிச ஜெயலலிதா கும்பல். அதற்கும், பாசிச ராஜீவுக்கும் எதிரான அரசியல் விமர்சனங்கள் கூட தேச துரோகக் குற்றமாகவும், வன்முறையையும் பிளவுவாதத்தையும் தூண்டுவதாக சித்தரித்தது. இந்துமதவெறிக்கும் பார்ப்பன ஆதிக்க மீட்புக்கும் எதிரான பிரச்சாரங்களும், ஈழ ஆதரவு இயக்கங்களும் கூட அவ்வாறு முத்திரை குத்தப்பட்டு தடை செய்யப்பட்டன. ராஜீவ் கொலை வழக்கில் சேர்த்து உள்ளே தள்ளிவிடப் போவதாகப் பீதியூட்டி மிரட்டப்பட்டன.

அடுத்த கட்டமாக தமிழ்நாட்டில் முதல் முறையாக பயங்கரவாத கலவர நடவடிக்கைகள் (தடுப்புச் சட்டம்) பிரயோகிக்கப்பட்டு அதன்கீழும், தேசிய பாதுகாப்புச்சட்டம், தேச துரோகக் குற்றங்கள் சாட்டப்பட்டும் பலர் சிறையிலடைக்கப்பட்டனர். ஜெயலலிதா ஆட்சிக்கு எதிராக விமர்சனங்கள் செய்த முதலாளித்துவப் பத்திரிக்கைகள், சாலை வசதி கோரியும், பஸ் கட்டண உயர்வை எதிர்த்தும் போராடிய மாணவர்கள் மீது அடக்குமுறை ஏவிவிடப்பட்டது.

அமைதியான முறையில் ஜனநாயக உரிமையும், அடிப்படை வசதியும் கோரிய மக்கள் மீது துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டன. அம்பேத்கார் சிலைவைத்த தாழ்த்தப்பட்டவர்கள், பஸ் நிறுத்தம் கோரிய மீனவர்கள் கூட சுட்டுத்தள்ளினர்; இந்தப் பிரச்சினைகளை சாதி, மதக்கலவரங்களாக மாற்றினர்.



மதக் கலவரங்களைத் தூண்டுவதில் பிரதானக் காரணமாக இருக்கும் ஆர்.எஸ்.எஸ். இந்து முன்னணி [illegible]களை விட்டுவிட்டு, காங்கி[illegible] ஜனதா ஆளும் மாநிலங்களை[illegible]மிய அமைப்புகளின் [illegible] தேசியப் பாதுகாப்பு மற்றும் [illegible]த கலவர நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டங்களின் கீழ் சிறையில் அடைக்கின்றனர். பாசிச ஜெயலலிதாவை மட்டுமல்ல; இந்து முன்னணியை விமர்சித்து சுவரொட்டி போட்டால்கூட இவ்வாறு கறுப்புச் சட்டங்கள் பாய்கின்றன.

அதிகார வெறியூட்டப்பட்ட போலீசாரோ கொலைவெறி பிடித்தவர்களாக மாற்றப்படுவதையே இந்தப் போக்குகள் காட்டுகின்றன. இவ்வளவும் பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பல் நான்குமாத கால ஆட்சியிலேயே நடந்தவைதாம். காமராஜர் கல்வித் துறையிலும், அண்ணாத்துரை மேடைப் பேச்சிலும், எம்.ஜி.ஆர் சத்துணவு போடுவதிலும் தமது முத்திரையைப் பதித்ததைப்

www.padippakam.com

போல ஜெயலலிதா காவல்துறையில் தனது முத்திரையைப் பதிப்பதாக காங்கிரசார், அதன் பாசிச ஒடுக்கு முறையைப் பாராட்டு கின்றனர்.

அண்ணாத்துரைக்கும் பெரியாருக்கும் விழா எடுப்பதும், நன்கொடை வழங்குவதும்; காவிரிப் பிரச்சினையில் உறுதியும் கச்சத் தீவை மீட்க சபதமும் எடுப்பது; தமிழை ஆரம்ப நிலையில் கட்டாயக் கல்வியாக்குவது போன்றவற்றால் ஏதோ இன உணர்வுள்ளவராக ஒருபுறம் நடிப்பது; விடுதலைப் புலிகளின் ஆயுதக் கலாச்சாரம், ஊடுருவல் ஆகியவற்றையும், ஈழ ஆதரவு இயக்கங்களையும் ஒடுக்குவதாக பயபீதியூட்டுவது - இப்படிப்பட்ட நடவடிக்கைகளால் ஒருபுறம் மக்களது கவனத்தைத் திசைதிருப்பிவிட்டு பார்ப்பன சனாதன மீட்பை பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பல் மூடி மறைக்கிறது.

தமிழ்நாட்டில் பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பல் ஆட்சியைப் பிடித்து வெறியாட்டம் போடுவது ஒரு தனித்த சம்பவமாகப் பார்க்க முடியாது. அகில இந்திய ரீதியில் காங்கிரசு - பாரதீய ஜனதா ஆகிய பாசிச இந்துமத வெறி சக்திகள் ஆதிக்கம் பெற்று வருவதோடு பொருத்திப் பார்க்க வேண்டும். அவற்றுடன் நெருக்கமான ஆதரவும் உறவும் பெற்றிருப்பதால்தான் இரட்டிப்பு மூர்க்கத்தோடு ஈழ இந்தியத் தமிழர்கள் மீது பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பல் பாய்கிறது.

1979-80-ல் டி.வி.எஸ். - டி.ஐ. சைக்கிள்ஸ் - லட்சுமி ஆலை போன்ற தொழிலாளர் போராட்டங்களை பாசிச எம்.ஜி.ஆர். ஒடுக்கியதற்குப் பிறகு இதுவரை தொழிலாளர் இயக்கம் எங்கேயும் எப்படியும் தலையெடுக்க முடியவில்லை. அதைப்போலவே அரசியல் எதிர்ப்பு இயக்கங்கள் அனைத்தையும் அரசு பயங்கரவாதத்தை ஏவி ஒடுக்கி விட்டால் தனக்கு எதிர்ப்பாரும் மிக்காரும் யாரும் இல்லை என ஏகபோக ஆட்சி நடத்தலாம் என பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பல் எண்ணுகிறது.

கொஞ்ச நஞ்சம் இருந்த உரிமைகளையும் பறித்து, புரட்சிகர ஜனநாயக சக்திகள் உட்பட எல்லா வகையிலான எதிர்த்தரப்பையும் அடக்கி ஒடுக்கி அரசு பயங்கரவாத ஆட்சியை நிறுவுவதன் விளைவுகள் - முடிவுகளைப் பற்றி பாசிஸ்டுகளுக்கு அக்கறை கிடையாது. அவர்களது குறியெல்லாம் உடனடி அரசியல் ஆதாயம்தான். நாடு முழுவதையும் பஞ்சாப், காஷ்மீர், அசாம்களாக மாற்றுவதும், இரத்த வெள்ளத்தில் மூழ்கடிப்பதும் இறுதியில் மாபெரும் மக்கள் புரட்சியின் எழுச்சியினால் பாசிஸ்டுகள் வீழ்த்தப்படுவதும் தான் முடிவாக இருக்கும்.

**எவ்வாறாயினும் பார்ப்பன -பாசிச ஜெயா கும்பலின் கீழ் அணி திரண்டுள்ள பார்ப்பன சாதியினருக்கும் பிற சாதிப் பிழைப்புவாதிகளுக்கும் எதிராக தமிழக மக்களின் ஆத்திரம் திரும்புவதைத் தவிர்க்க முடியாது. எனவேதான் அவர்கள் தேர்ந்தெடுத்துள்ளது தற்கொலைப் பாதை என்கிறோம்.**

பரந்துபட்ட உழைக்கும் மக்களை அணிதிரட்டும் புரட்சிகர ஜனநாயக இயக்கங்கள், மத, இன, மொழிச் சிறுபான்மையினரது இயக்கங்கள் ஆகியவற்றை தேசவிரோத, பிளவுவாத, பயங்கரவாத, தீவிரவாத இயக்கங்கள் என முத்திரை குத்தி பீதியூட்டுவதன் மூலமே தமது அரசியல் செல்வாக்கை வளர்த்துக் கொள்ளவும், ஆட்சியைப் பிடிக்கவும் தக்க வைத்துக் கொள்ளவும் முடியும் என பாசிச இந்துமத வெறியர்கள் நம்புகின்றனர். இந்த இயக்கங்களைக் கையாள்வதற்கும், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் இவர்கள் மேற்கொண்டுள்ள வழிவகைகள் மேலும் ஆழமான புதைசேற்றில் இவர்கள் சிக்கிக் கொள்வதற்கே இட்டுச் செல்வதாக உள்ளன.

பாகிஸ்தான், வங்கதேசம், மியன்மார், சீனா ஆகிய அண்டை நாடுகளின் எல்லைகளை சுவர்களும் வேலிகளும் அமைத்து ஆள் நடமாற்றமற்ற இராணுவப் பகுதிகளாக மாற்றி விடுவது; பிரச்சினைக்குள்ளாகும் பிராந்தியங்கள் முழுவதையும் இராணுவம், உளவுப்படை மற்றும் அதிரடிப்படைகளிடம் ஒப்படைத்து விடுவது; பயங்கரவாத, கலவர நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம், தேசியப் பாதுகாப்புச் சட்டம், கலவரப் பகுதிகள் - சிறப்பு வழக்கு மன்றச் சட்டங்கள் என பல்வேறு கறுப்புச் சட்டங்களைப் பிறப்பித்து எல்லா குடியுரிமை - ஜனநாயக உரிமைகளையும் பறிப்பது; பத்திரிக்கையாளர்களோ, வெளி நாட்டவர்களோ உண்மை அறியச் செல்லும் எல்லா முயற்சிகளுக்கும் தடை விதிப்பது; வாகனப் போக்குவரத்துக்களைத் தடை செய்வதோடு, ஊரடங்கு உத்திரவுகளும், தேடுதல் வேட்டைகளும் நடத்துவது; தீவிரவாதிகள் நாசவேலைக்காரர்கள், உளவாளிகள் மற்றும் சந்தேகத்துக்குரியவர்கள் என முத்திரை குத்தி, பாதுகாப்புப் படையினருடன் மோதல் என்கிற பெயரில் இளைஞர்களைப் படுகொலை செய்வது இவைதான் பாசிச இந்துமத வெறியர்களின் அரசுக் கொள்கையாக உள்ளது.

இந்த அரசு பயங்கரவாத பாசிச அடக்குமுறையை செயல்படுத்துவதில் காங்கிரசு, பாரதீய ஜனதா கட்சிகள் போட்டி போடுகின்றன. இதை ஆதரிப்பதைப் பொருத்து மற்ற கட்சிகளின் தேச பக்தியை எடைபோடுகின்றன. இதை எதிர்ப்பவர்கள் மட்டுமல்ல இதற்கு எதிராக முனுமுனுப்பவர்கள் கூட தேச விராதிகளாகச் சித்தரிக்கப் படுகின்றனர்.

எதிரிகளை ஒழித்துக்கட்டி மாமூல் நிலைமை திரும்பாதவரை தேர்தல்களோ, ஜனநாயக - குடியுரிமைகளோ கிடையாது; யாருடனும் பேச்சு வார்த்தைகளோ, எந்த வகையிலான சமரசமோ கிடையாது என்று திடலடியாக மறுக்கின்றனர். இந்த நிலைமைகளையே காட்டிப் பீதியூட்டியும் இந்துமத, ''தேசிய'' வெறியூட்டியும் ஆட்சியைப் பிடிப்பதையும் தமது அரசியலாக்கி விட்டார்கள். கடந்த 10, 15 ஆண்டுகளில் நாட்டின் பல பகுதிகளிலும் காங்கிரசு, பாரதீய ஜனதா பாசிச இந்துமத வெறியர்கள் ஏற்படுத்தியுள்ள இந்த நிலைமைகளைத் தமிழ்நாட்டில் ஒரு சில மாதங்களிலேயே பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பல் உருவாக்கிவிட்டது. பஞ்சாபில் அகாலி கட்சிகள், காஷ்மீரில் ஐந்து கட்சிகள் கூட்டணி, அசா

தொழிலதிபர்கள் - முதலாளிகளுடன் கூடிக் குலவும் ஜெயலலிதா; ஏழை மக்களின் 'காவல் தெய்வமாம்'!?



படிப்பகம்

www.padippakam.com

மில் அசாம் கன பரிசத் போன்ற மிதவாத, சமரச சக்திகள் கூட இயங்க முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளதைப் போல தமிழ்நாட்டில் கருணாநிதி, ராமதாஸ், நெடுமாறன் தலைமையிலான கட்சிகள், அமைப்புகள் கூட இயங்க முடியாத அளவுக்கு நெருக்கடிகளை பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பல் ஏற்படுத்துகிறது. இவையெல்லாம் சரியானவைதான் எனப் பாராட்டி மேலும் மேலும் "சோ" போன்ற பார்ப்பன வெறியர்கள் தூபம் போட்டுத் தூண்டி விடுகின்றனர்.

உண்மையில் பார்ப்பன சாதியினரையும், பிற சாதிப் பிழைப்பு வாதிகளையும் பொருத்தவரை இது தற்கொலைப் பாதையாகும். எதிர்க்கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ள பெருந்தோல்வி, பார்ப்பன - பாசிச ஜெயலலிதா பெற்றுள்ள மிருகபலம், வீரமணி போன்ற பழைய எதிரிகள் விலை போயிருப்பது, ராமதாஸ் போன்றவர்கள் ஊசலாடுவது ஆகியவை ஜெயலலிதா ஆட்சியை அசைக்க முடியாதவாறு உறுதிப்படுத்தியுள்ளதாக அவர்கள் குதூகலிக்கின்றனர். ஜெயலலிதாவுக்குத் தற்போது திரட்டியுள்ள மக்கள் ஆதரவு நிரந்தரமாகி விட்டதென்று நம்புகிறார்கள்.

ஆனால் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பல் மேற்கொள்ளும் மக்கள் விரோத நடவடிக்கைகள், விலையேற்றம், பற்றாக்குறை போன்றவையும் அவற்றுக்கு எதிரான மக்கள் போராட்டங்களை ஒடுக்குவதும் மிக விரைவிலேயே அதற்குள்ள மக்கள் ஆதரவைக் கரைத்துவிடும் என்பது நிச்சயமாகி விட்டது. ஆனால் பல சூழ்ச்சிகளையும் பாசிச ஒடுக்குமுறையையும் மேற்கொண்டு தனது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளவே பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பல் முயலும். அது அவ்வளவு லேசில் ஆட்சி அதிகாரத்தை இழப்பதற்கு ஒரு போதும் சம்மதியாது.

வீரமணி போன்றவர்கள் ஏற்கனவே பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பலிடம் விலை போய்விட்டார்கள்; அக்கும்பலின் ஆட்சியை எதிர்த்துப் போராடுவதாகக் காட்டிக் கொள்ளும் அதே வேளையில் ராமதாஸ், நெடுமாறன் போன்றவர் தலைமையிலான கட்சிகளும் அமைப்புகளும் வீரமணியுடன் ஒட்டிக் கொண்டு ஏதோ ஒரு வகையில் பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பலுடன் சமரசம் செய்து கொள்வதற்கான தருணத்துக்காகவே காத்திருக்கின்றனர். வீரமணியும், பண்ருட்டியும் இதற்கான தரகு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்; அத்துரோகிகளை இன்னமும் தமது அணியில் ராமதாசும், நெடுமாறனும் சேர்த்துக் கொண்டிருப்பது இதையே காட்டுகிறது. தமிழக மக்களிடம் போதிய அளவு அம்பலப்பட்டு, நம்பிக்கையிழந்து விட்ட கருணாநிதியின் தலைமையோ காகிதப் போராட்டம் மட்டுமே நடத்தும் வகைக்கு செயலற்றுப் போய்விட்டது.




பார்ப்பன பாசிச ஜெயா கும்பலுக்கு எதிராக மீண்டும் தமிழகத்தில் போராட்டம் எழுச்சி பெறும்.

எனவே இந்தக் கட்சிகளில் உள்ள போர்க்குணமிக்க இளைஞர்கள் ஒன்று புரட்சிகர அமைப்புகள், இயக்கங்களின் தலைமையில் திரண்டு பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பலை எதிர்த்துப் போராட வேண்டும் அல்லது ஒரு சில தனிநபர் பயங்கரவாதக் குழுக்களில் அமைப்பாக வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். எவ்வாறாயினும் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் கீழ் அணி திரண்டுள்ள பார்ப்பன சாதியினருக்கும் பிற சாதிப் பிழைப்பு வாதிகளுக்கும் எதிராக தமிழக மக்களின் ஆத்திரம் திரும்புவதைத் தவிர்க்க முடியாது. எனவேதான் அவர்கள் தேர்ந்தெடுத்துள்ளது தற்கொலைப் பாதை என்கிறோம்.

தனிநபர் பயங்கரவாதத்தை நாம் ஒரு போராட்ட முறையாக அங்கீகரிக்கவோ ஆதரிக்கவோ இல்லை. குறிப்பாக சாதாரண சிவிலியன்களுக்கு எதிரான தனிநபர் பயங்கரவாதத்தை நாம் எதிர்க்கிறோம். ஆனால் பஞ்சாப், காஷ்மீர், அசாமிலும் தனிநபர் பயங்கரவாதம் அதிகரித்துக் கொண்டே போகிறது. அது அரியானா, டெல்லி, உ.பி., பம்பாய் போன்ற இடங்களுக்கும் பரவுகிறது. குறிப்பாக காங்கிரசு - பாரதீய ஜனதா பாசிச இந்துவெறியர்களுக்கும், அவர்களுக்குத் துணைபோகும் போலிக் கம்யூனிஸ்டுகளுக்கும், அரசு அதிகாரிகள் - படையினருக்கும் எதிராக இத்தகு தனிநபர் பயங்கரவாதச் செயல்கள் அதிகரித்து வருகின்றன.

இதற்குச் சில காரணங்கள், பின்னணிகள் இருக்கின்றன. பாசிச இந்துமதவெறிக்கும் அரசு பயங்கரவாதத்துக்கும் எதிர்விளைவாகவே தனிநபர் பயங்கரவாதங்கள் தலைதூக்கிப் பரவிவருகின்றன. ஒரு சிறுபான்மையினரான பார்ப்பன - பனியா கும்பலின் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஆட்சியாளர்கள், நாடு முழுவதும் இந்துமத வெறியையும், தேசிய வெறியையும் பரப்புவதற்காக மத, மொழி, இனச் சிறுபான்மையினருக்கு எதிராக அரசு பயங்கரவாதத்தை ஏவி விடுவதை, ஜனநாயக பூர்வமான வழிகளில் முறியடிப்பதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படும் போது தனிநபர் பயங்கரவாதம் வெடிக்கிறது. ஆர்.எஸ்.எஸ். பாரதீய ஜனதா ஆட்சி ஏற்படுமானால் இன்னும் வெறியாட்டம் போடும் இந்துமத வெறியர்களின் பாசிச - பயங்கரவாதத்தை எதிர்கொள்ள இசுலாமிய மதவாதிகள் பயங்கரவாதத்தை மேற்கொள்ளுவதும் கூட தவிர்க்க முடியாததாகிவிடும்.

அதேபோலத்தான கவர்ச்சிவாத அரசியல் ஆதரவும், அரசு அதிகாரமும் தம்மிடம் இருக்கும் திமிரோடும் வெறியோடும் பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பல் ஈழ, இந்தியத் தமிழர்களுக்கு எதிராக அரசு பயங்கரவாதத்தை ஏவிவிடுகிறது. சுவரில் முட்டிக் கொள்ளும்படி ஒரு கோடிக்குத் தள்ளப்படுபவர்கள் எதிர்த்துத் தாக்கவே செய்வார்கள். இன்னொரு பஞ்சாபை இங்கே உருவாக்குவதால் பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பல் ஆதாயம் அடையலாம். அது ஏ.கே. 47களும், பூனைப்படையும் புடைசூழத் தன்னைத் தற்காலிகமாகவேனும் தற்காத்துக் கொள்ளலாம். அக்கும்பலின் பின் பலமாகத் திரளும் பார்ப்பனருக்கும் பிழைப்புவாதிகளுக்கும் எவ்விதப் பாதுகாப்பும் செய்து தரவே முடியாது.

ஆனால் தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகள் முடிவற்ற இரத்தக் களறியில் தான் முடியுமே தவிர பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பலோடு அதன் மூத்த கூட்டாளியான காங்கிரசு - பாரதீய ஜனதா பாசிச இந்துமத வெறியர்களை வீழ்த்த முடியாது. அது மட்டுமல்ல இத்தகு தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகளை நம்பியுள்ள முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ அமைப்புகள் இறுதியில் எதிரிகளுடன் சமரசம் செய்து கொண்டு துரோகமிழைப்பதே வரலாறாகவும் இருக்கிறது. ஆகவே பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பலுக்கும், இந்துமத வெறி பாசிசத்துக்கும் எதிரான போராட்டத்தை இறுதிவரை உறுதியாக எடுத்துச் செல்லும் பொறுப்பு புரட்சியாளர்கள் மற்றும் ஜனநாயக சக்திகளின் தோள்களில் சுமத்தப்பட்டிருக்கிறது. ● ஆர்.கே.

www.padippakam.com




● *''ஈழ அகதிகளை வெளியேற்றாதே, ஈழப்போராளிகளுக்குத் தமிழகத்தில் செயல்பட உரிமையுண்டு'' என்று சொல்கிறோம். ஆனால் இன்றைய நிலையில் ஈழப்போராளி அமைப்பு என்றால் அது எல்.டி.டி.ஈ.தான். ஆனால் விடுதலைப் புலிகளை பாசிஸ்டுகள் என்கிறோம். அப்படியானால் நாம் யாரை ஆதரிக்கிறோம்? விமர்சனத்துடன் விடுதலைப்புலிகளை ஆதரிக்கிறோமா? இல்லையென்றால் ஈழப்போராளிகள் என்று குறிப்பிடுவது யாரை?*

**— முகிலன், இராமேசுவரம்.**

● *சுயநிர்ணய உரிமை பற்றிய பு.ஜ. நிலைப்பாட்டின்படி புலிகள் இயக்கம் வராதபோது, தமிழகத்தில் செயல்பட ஈழப்போராளிகளுக்கு உரிமை உண்டு எனக் கூறுவது முரண்பாடாக அல்லவா உள்ளது? ''தமிழகத்தில் செயல்பட உரிமை உண்டு'' என்று பொத்தாம் பொதுவாக கூறுவதன் மூலம் புலிகளுக்கும் தானே இது பொருந்தும்! அப்படியானால் விமர்சனப்பூர்வமாக, நிபந்தனையுடன் புலிகளை ஆதரிக்கிறோமா?*

**— ஜெயகாந்த்சிங், ஆவிச்சிக்குடி.**

★ விமர்சனத்துடனோ, நிபந்தனையுடனோ அல்லது வேறு எக்காரணத்துடனோ விடுதலைப் புலிகள் அமைப்பை நாம் ஆதரிக்கவில்லை. விமர்சனம், நிபந்தனை ஆகிய எதையும் மதிக்கும் நிலையைக் கடந்த பாசிசத் தன்மையுடையதாக அந்த அமைப்பு உள்ளது. நாம் மட்டுமல்ல, அந்த அமைப்பைத் ''தோழமையுடன் ஆதரித்து வரும்'' பிற அமைப்புகளின் விமர்சனங்கள், நிபந்தனைகளைக் கூட அது மதிப்பதில்லை.

''தமிழகத்தில் செயல்பட ஈழப் போராளிகளுக்கு உரிமையுண்டு'' என்று நாம் கூறும் போது, அது விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் சேர்த்துத்தான். அதாவது, அந்த அமைப்பை நாம் ஆதரிக்காத அதே சமயம் இந்தியாவில் அரசியல் தஞ்சம் புகுவதற்கும், அப்படி அரசியல் தஞ்சமடைபவர்களுக்கும் தரப்பட வேண்டிய ஜனநாயக உரிமையையும் அங்கீகரிக்க வேண்டும் என்கிறோம். அரசியல் - சித்தாந்தப் போராட்டத்தின் மூலம் அவர்களை முறியடிக்க வேண்டுமே தவிர அரசு பயங்கரவாதத்தை ஏவி, அரசியல் தஞ்சமடைந்தோருக்குள்ள உரிமைகளை மறுத்து ஒடுக்குவது தவறானது என்கிறோம். இந்தியாவின் ஆக்கிரமிப்பு - விரிவாக்க - ஆதிக்கத்துக்கு துணை போகும் ஈ.பி.ஆர். எல்.எஃப்., டெலோ, ஈ.என்.டி.எல்.எஃப் போன்ற ஈழ துரோக அமைப்பினரை அழைத்து வந்து, பாதுகாப்பு - பராமரிப்பு உபசாரம் செய்து கொண்டே, அத்தகை பேரங்கள் - ஒப்பந்தங்கள் முறிந்து போனதால் விடுதலைப் புலிகள் அமைப்பினரைப் பழிவாங்குவது தவறென்று எதிர்க்கிறோம். ஆகவே நமது நிலைப்பாட்டில் முரண்பாடில்லை. தமிழகத்தில் ஈழப் போராளிகளுக்கான உரிமைக்காகப் போராடும் அதே சமயம் எல்.டி.டி.ஈ.யினரின் பாசிசத் தன்மைகளை இப்போதும் அம்பலப்படுத்தி எதிர்த்து வருவதே இதற்குச் சான்றாகும்.

''ஈழப் போராளி அமைப்பு என்றால் அது எல்.டி.டி.ஈ.தான். அவர்கள் தான் போரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தவிர வேறு எந்த அமைப்பு ஈழத்தில் இருக்கிறது?'' என்று கேட்டு அவர்களை விமர்சனங்கள் - நிபந்தனைகளுடன் ஆதரித்தவர்கள், அப்படி எதுவும் இல்லாமல் முழுமையாக ஆதரித்தவர்கள் கூட கடந்த ஐந்து மாதங்களாக பொதுவில் ''ஈழப் போராளிகளை, ஈழப் போராட்டத்தை ஆதரிப்போம்'' என்று மாற்றிக் கொண்டார்களே கவனித்தீர்களா! ''ஈழப் போராட்டத்தில் உறுதியாக நிற்பவர்களை (விடுதலைப் புலிகள் உட்பட) ஆதரிக்கின்றது'' என்று பிரசுரம் போட்டுள்ளார்கள். இதிலிருந்து விடுதலைப் புலிகள் தவிர ஈழப் போராட்டத்தில் உறுதியாக நிற்பவர்கள் வேறு பிறரும் இருக்கிறார்கள் என்பதை அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்!

ஈழ விடுதலைப் போராட்டத்தில் உறுதியாக நிற்பவர்கள், ஈழப் போராளிகள் என்றாலே எல்.டி.டி.ஈ.யினர் என்பது தவறானது. ஜனநாயக மறுப்பு, பாசிசம், ஈழ துரோகம் ஆகியவற்றை எதிர்த்து எல்லாப் பெரிய ஈழ அமைப்புகளிலும் இருந்து வெளியேறியவர்கள் ஆயிரக்கணக்கில் உள்ளனர்; இவர்கள் தவிர ஆரம்பம் முதலே சில சிறிய போராளி அமைப்புக்களும் உள்ளன. இவர்களில் எவரும் இந்திய, இலங்கை அரசுகளுடன் சமரசம் செய்து கொண்டு ஈழ துரோக நிலை எடுத்தவர்கள் அல்ல. இருந்த போதும் பாசிசப் புலிகளினால் சிறிய அமைப்புகள் தடை, செய்யப்பட்டதோடு பலரைக் கடத்தியும், கொன்றும் நாடு கடத்தியும் புலிகள் அழித்து வருகின்றனர். கடந்த ஆகஸ்டு, 30-ந் தேதி இரு பெண்கள், ஒரு மாணவர், ஒரு ஆசிரியர் ஆகியோரையும், மே மாதம் 10 பேரையும் யாழ் நகரில் இருந்து புலிகள் கடத்திச் சென்றனர்;. கடந்த ஓராண்டில் குறைந்தது 600 பேர் இப்படிப் புலிகளால் கடத்தப்பட்டனர். அவர்களின் கதி என்னவாயிற்று என்று தெரியவில்லை. இவ்வாறு செய்து விட்டு ''எல்.டி.டி.ஈ.யினர் தவிர வேறு யார் இருக்கிறார்கள்?'' என்று கேட்பது குரூரமானது, வக்கிரமானது என ஏற்கனவே எழுதியுள்ளோம். புலிகளின் பாசிச ஒடுக்கு முறையையும் மீறி இன்னமும் ஈழத்திலும் உலகின் பல நாடுகளிலும் ஈழ விடுதலைக்காகப் போராடும் உறுதி கொண்ட பலர் இருக்கின்றனர். அவர்களை ஆதரிப்பது தான் ஜனநாயக, புரட்சிகர சக்திகளின் கடமையாகும்.

● *அல்ஹாஜ் பழனிபாபா அவர்கள் நடத்தி வரும் ஜிகாத் கமிட்டியை ஒரு மதவெறி இயக்கம், அதைத் தடை செய்ய வேண்டும் என்று சில ஆர்.எஸ்.எஸ்; பா.ஜ.க; இந்து முன்னணியைச் சேர்ந்தவர்களும் மற்றும் ஏனைய அமைச்சர்களும் (அரங்கநாயகம்) சொல்கிறார்களே, ஜிகாத் மதவெறி இயக்கமா? ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. இந்து முன்னணி மதவெறியா? தங்களுடைய கருத்த என்ன? தடை செய்யக் கூடிய இயக்கம் எது?*

## ☆ விமர்சனத்துடன் புலிகளை ஆதரிக்கிறோமா?
## ☆ ஜிகாத் கமிட்டி ஒரு மதவெறி இயக்கமா?

**— ஒய்.அப்துல்ஜீர், கோவை**

★ ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. இந்து முன்னணி முதலிய இந்துமத வெறி அமைப்புகளைப் போலவே ஜிகாத் கமிட்டி, ஜமாத் இ-இசுலாமி போன்றவை இசுலாமிய மதவெறி இயக்கம் என்பதே எங்களுடைய கருத்தாகும். ஆனால் இரண்டுக்கும் சில வேறுபாடுகள் இருப்பதாகக் கருதுகிறோம். பெரும்பான்மையினரின் பெயரால் செயல்படும் இந்துமத வெறி பாசிசத்தின் விளைவாக ஏற்பட்டது தான் இசுலாமிய மதவெறி. அத்வானி, பழனிபாபா போன்றவர்கள் மதப்பற்று காரணமாக அதை அடிப்படையாகக் கொண்டு மதவெறி இயக்கங்களை நடத்துபவர்கள் கூட இல்லை. இவர்கள் அடிப்படையில் வகுப்புவாதிகள்; மதவெறியூட்டுவதற்காகவே, வகுப்புவாத அரசியல் ஆதாயத்துக்காகவே மத அடிப்படைக் கோட்பாடு வாதம் பேசுபவர்கள். மதவெறி இயக்கங்கள் அனைத்துமே தடை செய்யப்பட வேண்டியவை. பெரும்பான்மையினரின் பெயரால் செயல்படும் இந்து மதவெறி பாசிச இயக்கம் இசுலாமியர்கள் உட்பட சிறுபான்

படிப்பகம்

www.padippakam.com

மையினருக்கு மட்டுமல்லாது அனைத்து தேசிய இனங்கள், ஜனநாயக, புரட்சிகர சக்திகளுக்கும் ஆபத்தானது. அதைப் பிரதான எதிரியாக கொண்டு முறியடிக்க வேண்டும்; அதே சமயம் அதை எதிர்த்துப் போராடும் மதச்சார்பற்ற சக்திகளின் தலைமையின் கீழ் அணி திரளுவதற்குப் பதிலாக இசுலாமிய மதவெறி அமைப்புகளில் திரளுவது இசுலாமியர்களின் தற்கொலைப் பாதையாகும் என்பதை அச்சமூக இளைஞர்கள் உணரவேண்டும். இசுலாமிய மதவெறி அமைப்புகளில் திரளுவதால் இசுலாமியர்களைத் தனிமைப்படுத்தி ஒடுக்குவதற்கு இந்துமத வெறியர்களுக்குச் சாதகமாகிவிடும்.

● *''இன்றைய தகவல் தொடர்புச் சாதனங்கள் செய்திகளை மின்னல் வேகத்தில் மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் அமைந்துள்ளன. ஆனால் இச்சாதனங்கள் எதுவும் நம்கையில் இல்லை. இச்சாதனங்களைக் கையில் வைத்திருப்போரைக் காட்டிலும் கூடுதலாக, விரைவாக நாம் மக்களைச் சென்றடைய வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். நமது கருத்துக்களை முழுமையாகச் சொல்வதற்கு எதிரிகளின் கையிலுள்ள தகவல் தொடர்புச் சாதனங்கள் பயன்படுமானால் அவற்றை நாம் பயன்படுத்திக் கொள்ளத் தயங்கக் கூடாது... இவற்றைப் பயன்படுத்துவதில் ஓர் எச்சரிக்கை உணர்வு தேவை'' - என்று கவிஞர் இன்குலாப் கூறிய கருத்திற்கு தாங்கள் கொடுக்கும் விளக்கம் என்ன?*

*— இரா.கதிரவன், நல்லம்பள்ளி.*

★ எண்பதாண்டுகளுக்கு மேலாகிறது. ஜாரிசத்தின் கொடிய கட்டுப்பாடுகள் இருந்தன; வெளிநாடுகளில் தயாரித்து, கடத்திக் கொண்டு வந்து இரகசியமாக அச்சிட்டு பல ஆயிரம் பிரதிகள் தினசரியாக நடத்தப்பட்டது இஸ்காரா - தீப்பொறி. அதையே ஆதாரமாக வைத்து பாட்டாளிகளுக்கு அரசியல் போதமளித்தார் லெனின். பலமுறை தடை செய்யப்பட்டன, பத்திரிக்கைகள்; துரோகிகளால் கைப்பற்றப்பட்டன; அரசால் பறிமுதல் செய்யப்பட்டன. இத்தனையும் எதிர்கொண்டு வேறு வேறு பெயர்களில் பத்திரிக்கைகள் நடத்திப் பாட்டாளிகளை அணி திரட்டி வெற்றிகரமாகப் புரட்சி நடந்தேறியது. அதன் பிறகு தொலைபேசி, டெலிபிரிண்டர், டெலக்ஸ், ஃபாக்ஸ் என்று செய்தித் தொடர்பு சாதனத் தொழில் நுட்பம் அதி நவீனமாகிவிட்டது; பத்திரிக்கைகள் தவிர சினிமா, வானொலி, வானொளி, ''வீடியோ - ஆடியோ'' - இப்படி மக்கள் திரள் தொடர்புச் சாதனங்களும் முன்னேறிவிட்டன. இவற்றை எல்லாம் பாட்டாளிகளின் இயக்கம் பயன்படுத்துவதற்கு கவனம் செலுத்த வேண்டும் என்பது சரியானதுதான். ஆனால் இன்குலாப் அதைச் சொல்லவில்லை. இவரும், இவரைப் போன்ற சில ''அறிவுஜீவி''களும் சில முதலாளித்துவப் பத்திரிக்கைகளில் எழுதுவதை நியாயப்படுத்தவே மேற்கண்டவாறு கூறுகிறார். மக்கள் திரள் பத்திரிக்கை மட்டுமல்ல; பலமுறை முயன்றும் ஒரு சிறு பத்திரிக்கை கூட இவராலும் இவர் சார்ந்த அமைப்பாலும் நடத்த முடியாத கையாலாகாத்தனம்; எதையாவது, யாரையாவது பயன்படுத்திக் கொண்டு குறுக்கு வழியில், திடீரென்று வளர்ந்துவிடும் நப்பாசை, கடினப்பட்டு உழைத்து உருப்படியான அமைப்பை ஏற்படுத்தும் அக்கறையின்மை போன்றவற்றின் வெளிப்பாடுதான் இன்குலாப் முன்வைக்கும் அணுகுமுறை. கடந்த காலத்திய இத்தகு அணுகுமுறையால் கண்ட பலன் என்னவென்று அவரே திரும்பிப் பார்க்கட்டும். ஏகாதிபத்திய உளவாளிகளைக் கொண்டுள்ள தன்னார்வக் குழுக்களைப் பயன்படுத்துவதாகப் புறப்பட்டு இவர் சார்ந்த அமைப்பு அவற்றுக்கே பலியாகியது. இவரே தராசு, நக்கீரன், விசிட்டர் என்று பயணப்பட்டு அந்தரகத்திலேயே கழிசடையான ''பிரச்சனை''யாக முடிந்தார். பாட்டாளிகளின் கருத்தை அரசியலில் கொண்டு செல்வது ஒரு சித்தாந்தப்பணி; அரசியல் - சித்தாந்தப் பணிக்கான சொந்த அரங்கம் ஒன்றைப் பெற்றிராத பாட்டாளிகள் இயக்கம் புரட்சிக்குத் தலைமையேற்கவும் முடியாது; பாட்டாளிகளது சொந்த அரங்கம் என்பது வெறும் பிரச்சார மேடை மட்டுமல்ல; அவர்களை அணி திரட்டும் அமைப்பாளனும் ஆகும். எதிரிகளின் அரங்கத்தைச் சார்ந்து நிற்பதன் மூலம் இப்பணிகளை ஒரு போதும் நிறைவேற்றிட முடியாது.

● *கல்வித் தகுதியே இல்லாமல் கல்வி அமைச்சராகி விட்ட ஆர்.எம்.வீரப்பன் 'தமிழ்நாட்டில் உள்ள மூன்று லட்சம் வேலையில்லாப் பட்டதாரிகள், வேலையில்லாப் பட்டதாரிகளா? வேலை தெரியாத பட்டதாரிகளா?' (தினமலர், 27.10.91, பக்:17) என்று திமிராகப் பேசியுள்ளதை எப்படிக் கண்டனம் செய்யலாம்?*

*— என்.அப்துல் ரகுமான், சென்னை- 14.*

★ 1972-73 ஆம் ஆண்டுகளில் குஜராத் அரசாங்கத்தை நீக்கும்படி ஒரு மாபெரும் மாணவர் எழுச்சி நடைபெற்றது. உங்கள் கேள்வியைப் படித்ததும் அதுதான் நினைவுக்கு வந்தது. அப்போது மந்திரியின் பெயரைக் கழுதைக்குச் சூட்டி செருப்பு மாலை போட்டு மாணவர்கள் இழுத்துக் கொண்டு போனார்கள்; மொட்டையடித்து கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி ஊர்வலமாக இழுத்துக் கொண்டு போனார்கள். மக்கள் எதிரிகளான மந்திரிகளை என்ன செய்வது, எப்படிக் கண்டிப்பது என்பது மக்களது விழிப்புணர்வையும், பலத்தையும் பொறுத்தது.

● *ஆயுள் காப்பீட்டுக் கழகம் (எல்.ஐ.சி.) பற்றிய கேள்விக்கு புதிய ஜனநாயகம் மற்றும் சோசலிசம் அமைப்புகளின் கீழ்தான் இது மக்களுக்கும் தேசத்திற்கும் பயன்பட முடியும் என்று எழுதியுள்ளீர்கள். புதிய ஜனநாயகம் மற்றும் சோசலிச அமைப்புகளின் கீழ் எல்.ஐ.சி. போன்ற அமைப்புகளே தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.*

*ஏனெனில், இன்று நிலவிவரும் ஆணாதிக்க, நிலப்பிரபுத்துவ முறையிலான சமுதாயத்தினை, கருத்துக்களை நியாயப்படுத்தும் வகையில் தான் இந்த நிறுவனங்கள் நடத்தப்படுகின்றன. அதாவது பெண் பொருளாதார பலம் பெறாத நிலையை அங்கீகரித்து, அது அப்படித்தான்; அவள் மற்றவர்களைச் சார்ந்துதான் வாழவேண்டும் என்ற நிலையை நியாயப்படுத்தும் வகையில், அதனை ஏற்றுக் கொள்ளும் வகையில் மக்களின் மனநிலையைத் தயார்படுத்தும் நோக்கில்தான் இந்த நிறுவனங்கள் செயல்படுகின்றன. (உ-ம்) ஒரு குடும்பத்தலைவனைப் பார்த்து (BREAD WINNER) உன்னை நம்பித்தான் இந்தக் குடும்பமே இருக்கிறது. நீ இறந்துவிட்டால் உன் குடும்பம், உன் மனைவி, மக்கள் நடுத்தெருவில் வந்து விடுவார்கள் என்று கூறித்தான் அவர்கள் இதற்கு ஆள் சேர்க்கிறார்கள். எனவே, ஆணாதிக்க சமுதாயத்தினை வேரோடு அழித்து, பெண்களும் பொருளாதார, மற்றும் அனைத்து ரீதியிலும் சமத்துவம் பெறுவதற்கான அமைப்பு முறையான புதிய ஜனநாயகம் மற்றும் சோசலிச அமைப்புகளின் கீழ் நாமும் இதுபோன்ற நிறுவனங்களை வைத்துக் கட்டிக் காப்பதும் நல்லதல்ல. மேலும் அவற்றிற்கு தேவையுமில்லை. இதைப் பற்றி தங்களுக்கு ஆணித்தரமான மறுப்பு ஏதேனுமிருப்பின் தெரிவிக்கவும்.*

## ☆ புதிய ஜனநாயக -சோசலிச கட்டமைவில் எல்.ஐ.சி. போன்ற அமைப்புகள் தேவைதானா?

*— லூசன், ஆவடி.*

★ புதிய ஜனநாயகம் மற்றும் சோசலிச அமைப்புகளின் கீழ் ஆயுள் காப்பீட்டுக் கழகம் (எல்.ஐ.சி.) போன்ற நிறுவனங்கள் வைப்பது சரியல்ல, தேவையுமில்லை என வாசகர் சுட்டிக்காட்டியது சரிதான். பிரச்சினையை முழுமையாக ஆய்வு செய்வதில் குறைபாடு நேர்ந்ததை அறிகிறோம். ஆனால் வாசகரின் விளக்கம் ஒரு பகுதியை, முக்கியமான பகுதியை மட்டுமே தெளிவுபடுத்துகிறது. இப்போது எதிர்கால வாழ்வை உத்திரவாதப்படுத்துவது என்கிற பெயரில் பெண்களும் கணிசமான அளவுக்கு ஆயுள் காப்பீட்டுத் திட்டங்களில் சேர்க்கப்படுகிறார்கள். எவ்வாறாயினும் முதலாளிகளுக்கான மூலதன சேகரிப்பு - கொள்ளை நிறுவனமாகவே அது இருக்கிறது; மேலும் எதிர்கால வாழ்க்கைக்கான உத்திரவாதத்தை ஒவ்வொருவரும் தம் சொந்தப் பொறுப்பில் தேடிக் கொள்ளச் செய்யும் ஏற்பாடாகவே இப்போது இருக்கிறது. ஆனால் புதிய ஜனநாயகம் மற்றும் சோசலிச அமைப்புகளின் கீழ் அரசியல், சமூக அமைப்புகளே அத்தகைய உத்திரவாதமளித்திடும் என்பதால் ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்ற நிறுவனங்கள் தேவையில்லைதான். ●



படிப்பகம்

www.padippakam.com



ஆழ்கடலில் இந்தியக் கடற்படையிடம் சிக்கிய புலிகள் இயக்கத்தினர்.

# சர்வதேசக் கடலிலும் புலி வேட்டை!

''தமிழகத்தை நோக்கி வந்து கொண்டிருந்த புலிகளின் இரண்டு ஆயுதக் கப்பல்கள் பிடிபட்டன'' என்று அலறின நவ.10-ம் தேதி தமிழ்ப் பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகள். பிறகு, ''இரண்டு கப்பல்களல்ல; ஒரு கப்பல், ஒரு படகு'' என்று செய்தி மாறியது. பிறகு, ''ஒரு படகு முழுகி விட்டது; ஒரு கப்பல் மட்டுமே பிடிபட்டது'' என்று சுருங்கியது.

''நவம்பர் 6-ம் தேதி மாலை தமிழகக் கடற்கரையில் பெருமளவு வெடி மருந்துப் பொருட்களை இறக்கிவைக்க புலிகள் திட்டமிட்டிருப்பதாக கிடைத்த உளவுச் செய்தியின் அடிப்படையில் சென்னையிலிருந்து கடற் காவல்படையின் விமானம் ஒன்று இந்தியக் கடற்பிராந்தியத்தைக் கண்காணிக்க அனுப்பப்பட்டது. சந்தேகத்திற்கிடமான முறையில் காரைக்கால் கரை வட்டாரத்தில் இரண்டு கப்பல்கள் சென்று கொண்டிருந்ததைக் கண்டுபிடித்த அந்த விமானம் அக்கப்பல்களுக்கு 'எச்சரிக்கை' விடுத்தும் பதில் ஏதும் இல்லாமல் போனதால் அவற்றை வழிமறித்துப் பிடிக்க கடற்படைக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. கடற்படை அக்கப்பலையும், உடன் வந்த படகையும் சுற்றிவளைத்துப் பிடித்தது. படகில் விரிசல் ஏற்பட்டதால் மூழ்கிவிட்டது. கப்பல் மட்டும் பிடிபட்டது'' என்று கடற்படை அதிகாரிகள் பத்திரிக்கைகளுக்குச் செய்தி கொடுத்துள்ளனர்.

கப்பலில் இருந்த இலங்கைத் தமிழர்களிடம் ஆயுதங்கள் ஏதும் இல்லையென்றும், இந்தியப் படை சுட்டபோதும் அவர்கள் திருப்பிச் சுடவில்லை என்றும் எதிர்ப்பு ஏதும் காட்டாமல் அவர்கள் சரணடைந்தனர் என்றும் கடற்படை ஒப்புக் கொள்கிறது. குண்டுகள், கண்ணிவெடிகள் தயாரிப்பதற்கான கந்தகம், பொட்டாசியம் நைட்ரேட், கரி, ஆணி, பாட்டரி செல்கள் ஆகிய மூலப் பொருட்கள்; 20,000 லிட்டர் டீசல், 13,000 லிட்டர் பெட்ரோல், 5,000 ஒலிநாடாக்கள், வீடியோ ரெக்கார்டர்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், வயர்லெஸ் கருவிகள் மற்றும் ராணுவச் சீருடைகள் ஆகியவை கப்பலிலிருந்து கைப்பற்றப்பட்டதாகக் கடற்படை கூறுகிறது. பிடிபட்டு விடுவோம் என்று தெரிந்ததும் சங்கேத மொழிக் குறிப்புகள் மற்றும் பிற ஆவணங்களை அவர்கள் கடலில் எறிந்து விட்டதாகவும், இருப்பினும் ஒரு டயரி அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டிருக்கிறது என்றும் அவர்கள் கடற்புலிகள் என்பது தெரிய வந்துள்ளது என்றும் கடற்படை அதிகாரிகள் கூறுகின்றனர். சென்னைக்குக் கொண்டு வரப்பட்டபின் பிடிபட்ட நபர்களும், பொருட்களும் விசாரணைக்காக 'க்யூ' பிரிவு போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டனர்.

இந்தியக் கடற்படையின் இந்த மாபெரும் 'சாதனை' தொடர்பாக தவிர்க்கவியலாமல் சில கேள்விகள் எழுகின்றன.

காரைக்காலிலிருந்து 10 கடல் மைல் (சுமார் 20 மைல்) கிழக்கேதான் முதன் முதலில் அக்கப்பலைக் கண்டதாக கடற்காவல் படை கூறுகிறது. இது இந்தியக் கடல் எல்லைக்குட்பட்ட பகுதியல்ல. சர்வதேசக் கடற்பிராந்தியம். அதன் பின் 60 கடல் மைல்கள் (120 மைல்) தூரம் துரத்திச் சென்று இந்தியக் கரையிலிருந்து 140 மைல் தூரத்தில் சென்று கொண்டிருந்த அக்கப்பலை இந்தியக் கடற்படை சுட்டிருக்கின்றது.

அக்கப்பல் இந்தியக் கரையில் வெடி மருந்துகளை இறக்க வந்தது என்றும் அதனால்தான் நடவடிக்கையில் இறங்கியதாகவும் முதலில் நியாயப்படுத்தியது இந்தியக் கடற்படை. ஆனால் அதில் உள்ள சரக்குகள் யாழ் பகுதியைச் சேர்ந்த 'வெற்றிலைக் கேணி' என்னுமிடத்தில் இறக்குவதற்குக் கொண்டு செல்லப்பட்டன என்றும், ''சிங்கப்பூர், பாங்காக் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஆயுதங்களைக் கொண்டு சேர்க்க நிரந்தரமாக சர்வதேசக் கடற்பரப்பில் மிதந்து கொண்டிருக்கும் கப்பல் இது'' என்றும் உளவுத்துறையினரை மேற்கோள் காட்டி 'இந்து' பத்திரிக்கை எழுதுகிறது.

இந்தியக் கடல் பிராந்தியத்தைப் புலிகளிடமிருந்து பாதுகாப்பது என்று தொடங்கி இப்போது சர்வதேச அளவில் இந்திய ஆயுதக் கொள்முதல் வழிகளை அடைப்பது குறித்து கடற்படையும், தமிழகக் காவல் துறையும் பேசத் தொடங்கியுள்ளன. சர்வதேசக் கடல் பகுதியினுள் புகுந்து இத்தகைய அடாவடிச் செயல்களில் ஈடுபடுவது சர்வதேசக் கடல் வழிகள் குறித்த விதிமுறைகளை மீறுவதென்பதைத் தெரிந்தே செய்கிறது, இந்தியக் கடற்படை. போதைமருந்து, தங்கக் கடத்தலுக்கு இக்கப்பல்களைப் புலிகள் பயன்படுத்துகின்றனர் என்றும், அந்த வருவாயிலிருந்துதான் ஆயுதம் வாங்கப்படுகிறது என்றும் கூறுவதன் மூலம் தனது செயலுக்கு நியாயம் கற்பிக்க முயல்கிறது கடற்காவல்படை. இது உண்மைதானெனினும் இதைச் சொல்வதற்கு இவர்களுக்கு தார்மீக அருகதை இல்லை.

கடற்காவல்படை மற்றும் சுங்கத்துறையின் ஆதரவு, அரவணைப்புடன் தான் சர்வதேச, இந்திய கடத்தல் சாம்ராச்சியங்கள் இந்தியாவில் நிலை பெற்றுள்ளன என்பது பாமரனுக்கும் தெரிந்த உண்மை. மேற்குக் கரையில் இந்தியக் கடல் எல்லைக்குள்ளேயே புகுந்து ஐரோப்பிய, ஜப்பானிய மீன்பிடி படகுகள் கடல் வளங்களைக் கொண்டு செல்கின்றன. சர்வதேசக் கடல் பிராந்தியத்தில் நிரந்தர மிதக்கும் கலத்தை தனது சாம்ராச்சியமாகக் கொண்டு ஆட்சி நடத்தும் ஆதநான் கசோகி எனும் சர்வதேச போதை மருந்து, ஆயுதக் கடத்தல் பேர்வழியுடன் இந்திய அரசு கைகுலுக்கி விருந்து வைக்கிறது. ஆனால் 'புலி வேட்டை'க்கு மட்டும் புதிய நியாயங்கள் கூறப்படுகின்றன.

ராஜீவின் ஆட்சியில் ''அமைதி காக்கும் ராணுவம்.'' ராவின் 'ஆட்சியில் ''அமைதி காக்கும் கடற்படை.'' சரியாகச் சொன்னால் இது ஒரு ஆக்கிரமிப்பு நடவடிக்கை. புலிகளைத் தமிழகத்திலிருந்து மட்டுமல்ல, இலங்கையிலிருந்தும் ஒழித்துக் கட்டும் முயற்சி. பனாமாவிலும், ஈராக்கிலும் அமெரிக்கா நடத்திய 'தற்காப்பு' யுத்தங்களின் வகையைச் சேர்ந்ததுதான் இந்நடவடிக்கை. உலக மேலாதிக்கம் அமெரிக்காவின் இலக்கு. தெற்காசிய பிராந்திய மேலாதிக்கம் இந்திய ஆட்சியாளர்களின் இலக்கு!

● அஜித்



படிப்பகம்

www.padippakam.com

# இந்திய மேலாதிக்கத்துக்கு மூக்கறுப்பு!

நவம்பர் 7-ம் நாளன்று இலங்கையில் நடைபெறவிருந்த தெற்காசிய பிராந்திய கூட்டமைப்பு (சார்க் - SAARC) மாநாடு காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அதிகார பூர்வமாக அறிவிக்கப்படவில்லையே தவிர, இந்திய ஆதரவு - இந்திய எதிர்ப்பு என்று சார்க் நாடுகள் பிளவுபட்டு நிற்கின்றன. இப்பிராந்தியத்தில் தொடர்ந்து மேலாதிக்கம் செலுத்தி வரும் இந்தியா இப்போது மூக்கறுபட்டு நிற்கிறது.

ஏறத்தாழ 7 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா, பாகிஸ்தான், இலங்கை,வங்கதேசம், நேப்பாளம், பூடான், மாலத்தீவு ஆகிய 7 நாடுகள் சேர்ந்து சார்க் கூட்டமைப்பை ஏற்படுத்தின. இப் பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கிடையே நல்லுறவையும் பொருளாதார ஒத்துழைப்பையும் வளர்ப்பது, கலாச்சார பரிமாற்றம், தகவல் தொடர்பு, போதை மருந்து ஒழிப்பு, பயங்கரவாதத்தை முறியடிப்பது என்பதாக அவற்றின் பணிகள் வரையறுக்கப்பட்டன. சுழற்சி முறையில் கடந்த மாநாட்டில் மாலத்தீவின் அதிபர் அப்துல் கயூம் தலைமைப் பொறுப்பேற்றார்.

இம்முறை இலங்கையில் மாநாடு நடைபெறுவதால் அந்நாட்டின் அதிபர் பிரேமதாசா சுழற்சி முறையில் தலைவராக்கப்படுவார். ஆனால் பிரேமதாசா தலைமைக்கு வருவதை இந்தியா விரும்பவில்லை. ஏனெனில், இலங்கையை ஆக்கிரமித்த "இந்திய அமைதி'ப் படையை (IPKF) வெளியேற வேண்டுமென்பதில் அவர் உறுதியாக இருந்தார். அன்னியப்படை தமது மண்ணில் நிலை கொண்டுள்ள வரையில் சார்க் மாநாட்டை நடத்த முடியாது என்று எதிர்ப்பு தெரிவித்தார். பின்னர் 'அமைதி'ப் படையை எதிர்த்துப் போராடிய புலிகளுக்கு ரகசியமாக ஆயுத உதவி செய்தார். அண்மையில் தவறான செய்தியைக் கொடுத்து இலங்கையின் மதிப்பைக் குறைத்துவிட்டதாகக் கூறி இந்திய வானொலியின் கொழும்பு,தலைமை நிருபரை இலங்கையிலிருந்து வெளியேற்ற உத்திரவிட்டார். இந்நிலையில் இந்திய எதிர்ப்பாளரான பிரேமதாசா சார்க் தலைமைக்கு வருவாரானால், ஏற்கனவே இந்தியாவின் மேலாதிக்கத்தை எதிர்த்து வரும் பாகிஸ்தான், வங்கதேசம் ஆகிய நாடுகளுடன் சேர்ந்து இந்தியாவை அம்பலப்படுத்தி தனிமைப்படுத்தக்கூடும் என்று இந்தியா அஞ்சுகிறது.

எனவே சார்க் கூட்டமைப்பில் இந்திய மேலாதிக்க எதிர்ப்பு நிலை பலம் பெறுவதற்குள் அதை முளையிலேயே கிள்ளியெறிய இந்தியா பல்வேறு சதிகளில் இறங்கியது. சார்க் மாநாடு நடைபெறும்போது இக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் 7 நாடுகளின் தலைமைப் பொறுப்பிலுள்ள அதிபர்களும், பிரதமர்களும் மன்னர்களும் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்பது விதி. இதை சாதகமாக்கிக் கொண்டு, மாநாட்டில் பூடான் மன்னர் பங்கேற்க கூடாது என இந்தியா இரகசியமாக மிரட்டியது. தான் வெளிநாட்டுக்குச் செல்லும் நேரத்தில் தேசவிரோத சக்திகள்



இந்திய எதிர்ப்பாளரான பிரேமதாசா

ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் இறங்கப் போவதாக உளவு நிறுவனங்களுக்குத் தகவல் வந்துள்ளதால், நாட்டின் நலன் கருதி சார்க் மாநாட்டிற்கு வர இயலாது என்று பூடான் மன்னர் அறிவித்தார். மேலும் அரசு பிரதிநிதி மூலம் தமக்கு மாநாட்டு அழைப்பிதழை முறைப்படி கொடுக்காமல் அவமதித்து விட்டதாக இலங்கை மீது குற்றம் சாட்டினார்.

விதிமுறைகளின்படி பூடான் மன்னர் மாநாட்டில் கலந்து கொள்ள முடியாததைக் காட்டி இந்தியா முட்டுக்கட்டை போட்டது. மன்னருக்குப் பதிலாக அவருடைய பிரதிநிதியைப் பங்கேற்க வைத்து மாநாட்டை நடத்தலாம் என்று இதர நாடுகள் கூறிய ஆலோசனையையும் இந்தியா ஏற்கவில்லை. இந்தியாவின் அடாவடித்தனத்தால் வேறுவழியின்றி மாநாடு தள்ளி வைக்கப்பட்டது. விதிகளைக் காட்டி யோக்கியவானாக வாதிடும் இந்தியா, கடந்த ஆண்டு மாலத்தீவில் சார்க் மாநாடு நடந்தபோது, இலங்கை அதிபர் பிரேமதாசாவுக்குப் பதிலாக அந்நாட்டின் பிரதமர் விஜயதுங்க கலந்து கொண்டபோது ஆட்சேபம் தெரிவிக்கவில்லை. இதே போல முன்னாள் பாகிஸ்தான் அதிபர் ஜியாவுக்குப் பதிலாக பிரதமர் ஜுனேஜோ முந்தைய மாநாட்டில் பங்கேற்ற போது எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

சார்க் மாநாடு முன்னர், இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் ரகசியமாக தலையிட்டு பிரமேதாசவைக் கவிழ்க்கும் கீழ்தரமான முயற்சிகளில் இந்தியா இறங்கியது.

இலங்கையின் ஆளும் யு.என்.பி. கட்சிக்குள்ளேயே லலித் அதுலத் முதலி, திசநாயகா ஆகியோர் தலைமையில் உள்ள சிறு கும்பலை பிரேமதாசாவுக்கு எதிராக கலகம் செய்யத் தூண்டிவிட்டது. இந்திய அமைதிப் படைக்கு எதிராக போரிட்ட புலிகளுக்கு ரகசியமாக பிரேமதாசா ஆயுத உதவி செய்ததை எதிர்த்தும், புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது என்றும் அக்கும்பல் நெருக்கடி கொடுத்தது. புலிகளுக்கும் பிரேமதாசா அரசுக்கும் உடன்பாடு ஏற்பட்டு விட்டால் அது இந்தியாவின் மேலாதிக்க முயற்சிகளுக்குத் தடையாகிவிடும்; ஈழத்தில் துரோக குழுக்களின் பொம்மையாட்சியை நிறுவி, இலங்கை மீது மேலாதிக்கம் செய்ய முயற்சிக்கும் இந்தியாவின் கனவுக் கோட்டைகள் சரிந்துவிடும்; எனவே ஒருபுறம் ராஜீவ் சாவைக் காரணம் காட்டி தமிழகத்தில் புலிகளை வேட்டையாடி துரத்துவது; மறுபுறம் இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையே உடன்பாடு ஏற்படாமல் தடுத்து புலிகளை தனிமைப்படுத்தி தாக்கி அழிப்பது என்கிற திட்டத்துடன் இந்தியா தொடர்ந்து முயற்சித்தது.

ஆனால் இந்தியா எதிர்பார்த்த திசையில் எதுவும் நடக்கவில்லை. லலித் அதுலத் முதலி கும்பலின் கலகங்கள் தோல்வி அடைந்ததோடு, புலிகளுக்கும் பிரேமதாசா அரசுக்குமிடையில் பேச்சுவார்த்தைகளும் நடந்து வருகின்றன. சார்க் மாநாடு தள்ளிப் போடப்பட்ட போதிலும், பாகிஸ்தான் மற்றும் வங்கதேசப் பிரதமர்கள் இலங்கைக்கு நேரில் வந்து பிரேமதாசாவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இலங்கை நாடாளுமன்றத்திலேயே இந்தியாவுக்கு எதிராக கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. இலங்கையின் நாளேடுகள், இந்தியாவின் கீழ்தரமான சதிகளையும், அதன் மேலாதிக்க முயற்சிகளையும் அம்பலப்படுத்தி சாடுகின்றன. பூடான், நேபாளம், மாலத்தீவு ஆகிய நாடுகளை மிரட்டிப் பணியவைத்து இந்தியா கூட்டணி சேர்த்துக் கொண்ட போதிலும், தனது மேலாதிக்கத்தை நியாயப்படுத்த முடியாமல் சார்க் கூட்டமைப்பில் இந்தியா தனிமைப்பட்டுப் போயுள்ளது.

ஆனாலும் பரப்பளவிலும், ராணுவ ரீதியிலும் பலமான இந்தியா, தனது விஸ்தரிப்புவாத - அகண்ட பாரதக் கொள்கைகளைக் கைவிட்டு விடாது. மேலும் ஆத்திரமடைந்து புதிய சதிகளையும் ஆக்கிரமிப்பையும் தொடரவே செய்யும். பாசிச காங்கிரசும் இந்துவெறி பாசிஸ்டுகளான பாரதீய ஜனதாவும் மட்டுமல்ல; போலிக் கம்யூனிஸ்டுகளும் எதிர்க்கட்சிகளும் இந்திய ஆளும் வர்க்கங்களின் விரிவாக்க - மேலாதிக்கச் செயல்களை ஆதரித்தே வந்துள்ளனர்.

எனவே காஷ்மீர் விவகாரத்தைக் காட்டி பாகிஸ்தானுக்கு எதிராக இந்துவெறி - தேசிய வெறியூட்டி தாக்குவதற்கு இந்தியா தயங்காது. அதேபோல அசாம் அகதிகள் விவகாரத்தைக் காட்டி வங்க தேசத்தை அச்சுறுத்தும். புலிகளும் இலங்கை அரசும் கூட்டு சேர்ந்து இந்தியாவுக்கு எதிராக, தமிழகத்தில் சதிச் செயல்களில் ஈடுபடுவதாக அவதூறு பரப்பும். அண்டைநாடுகள் போர் தொடுக்க முயற்சிப்பதாக பீதியூட்டி, அவசர நிலை பாசிச ஆட்சியைக் கட்டவிழ்த்துவிடும். இத்தகைய பாசிச ஆட்சியானது இந்திய மக்களுக்கும் ஈழத்தமிழருக்கும் மட்டுமல்ல; சிறிய அண்டை நாடுகளுக்கே எதிரானதாகும். எனவே தெற்காசிய பிராந்தியத்தில் இந்தியா தனிமைப்பட்டுள்ளதைச் சாதகமாக்கிக் கொண்டு, அதன் பாசிச மேலாதிக்க முயற்சிகளை அம்பலப்படுத்தி, அதன் குறுகிய தேசிய வெறி - இந்து வெறிக்கு பலியாகிவிடாமல் இந்திய மக்களை மீட்க புரட்சிகர ஜனநாயகவாதிகள் தொடர்ந்து போராட வேண்டும்.

● செல்வம்.

படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM R.N. 42648/85 Regd. No. TN/MS(S) 344

இவர்கள் சென்னை காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரியில் முதன் முதலாக நடந்த அழகிப் போட்டியில் வெற்றி பெற்ற 'மிஸ்'கள்! போட்டியை நடத்தி இவர்களைத் தேர்ந்தெடுத்த டி.வி. அழகி ஃபாத்திமா பாபு உடன் 'போஸ்' கொடுக்கிறார்.

இன்று கல்லூரிகளெங்கும் கட்டுரைப் போட்டி, நாடகப் போட்டி, கவிதை - பேச்சுப் போட்டி, விளையாட்டுப் போட்டிகள் வரிசையில் அழகிப் போட்டியும் இணைக்கப்பட்டு வருகிறது; கல்லூரிகள் மாணவிகளுக்கு கற்றுக் கொடுக்கும் கூடுதலான திறமை - தகுதியாகிவிட்டது. எழுத்தாளர், கவிஞர், பேச்சாளர், நடிகர், விளையாட்டு வீராங்கனை போன்ற கூடுதல் தகுதிச் சான்றிதழ்கள் எல்லாம் புறந்தள்ளப்பட்டு இனி 'கல்லூரி அழகி' என்ற கூடுதல் தகுதிச் சான்றிதழ்தான் வேலைக்கான முன்னுரிமையாக்கப்படும்! இதுவன்றி 'அழகி' என்றால் பத்திரிகைகள் படம் பிடித்து விளம்பரப்படுத்தும்; பேரும் - புகழும் கிடைக்கும்!



ஏற்கனவே சினிமா கவர்ச்சி - மாயையில் மூழ்கிகிடக்கும் நமது மாணவிகளுக்கு போதாதா இவை? இனி அவற்றை தொழில் சுத்தமாகவே செய்யத் தொடங்கி விடுவார்கள்! ஏற்கனவே பல கல்லூரி மாணவிகள் இப்படி மாறி விட்டார்கள். படிப்பையும் பண்பையும் கற்றுக் கொள்ள வேண்டியவர்கள் பத்திரிக்கைகளில் அழகு குறிப்புகளைத் தேடுகிறார்கள். சமூக அவலத்தையும் அரசியல் கொடுமைகளையும் கவனிக்க வேண்டியவர்கள் சினிமா நடிகைகளின் அலங்காரங்களைக் கவனிக்கிறார்கள். நூல் நிலையத்திற்குச் செல்லவேண்டியவர்கள் அழகு நிலையத்திற்குச் செல்கிறார்கள். வாழ்க்கையின் அர்த்தத்தைப் பற்றி அறிய வேண்டியதற்குப் பதில் அழகு சாதனங்களில் தரத்தை தேடியலைகிறார்கள். பெண்கள் மீதான அநீதிக்கெதிராக போராட வேண்டிய வயதில் 'அழகி' யாவதற்காக போராடுகிறார்கள்.

# இதுதான் இன்றைய இந்தியா

இதோ இவர்களும் கல்லூரி மாணவிகள்தான். அழுகும் அழகிற்காக அலைபவர்கள் அல்ல; அடக்கப்படும் தன் இன மக்களின் உரிமைக்காகப் போராடும் அசாம் மாநிலத்தின் 'உல்ஃபா' போராளிகள்.

அசாமில் 'காண்டாமிருக நடவடிக்கை' என்ற பெயரில் 'உல்ஃபா போராளிகளை மட்டுமல்ல; அப்பாவி மக்களையும் சிறைபிடித்து சித்திரவதை செய்வது, வீடு புகுந்து சூறையாடுவது, கைது செய்து கொன்றுவிட்டு காணாமல் போனதாகப் புளுகுவது என இந்திய ராணுவத்தின் அட்டூழியங்கள் தொடர்கின்றன. கோல்பாரா மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளி ஆசிரியர் பூர்நந்தாதாஸ், செப்டம்பர் 24-ந் தேதி ராணுவத்தினரால் கொடூரமாகத் தாக்கப்பட்டே கொல்லப்பட்டார். ஹஜோ பகுதியைச் சேர்ந்த ராஜ்குமார் சௌத்ரி என்பவரை விசாரணை என்ற பெயரில் ராணுவம் இழுத்துச் சென்று சித்திரவதை செய்து கொன்றது.

கோபூர் அருகிலுள்ள ஒரு கிராமத்தில் ராஜு பருவா என்ற 20-வது கல்லூரி மாணவியை 4 ராணுவத்தினர் கும்பலாக கற்பழித்துக் கொன்றனர். கௌகாத்தி பல்கலைக்கழக மாணவர்களும் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டனர். இத்தகைய கொலைகார ராணுவத்திற்கெதிராக அசாம் மாணவ - மாணவிகள் கிளர்ந்தெழுந்து போராடி வருகிறார்கள்.



உரிமைக்காகப் போராடும் போராளிகளை விலங்குகள் போல் கயிறு கட்டி அவமானப்படுத்தும் இந்திய அரசு, இன்னொரு புறம் பிற மாநிலங்களில் மாணவ - மாணவிகள் போராளிகளாகி விடக்கூடாது என்பதற்காகவே, ஏகாதிபத்திய - சீரழிவுக் கலாச்சார சிந்தனைகளை கல்லூரிகள் மூலமே திணித்து வருகிறது. இச்சதிக்கு நீங்கள் அடிமையாகப் போகிறீர்களா? சொல்லுங்கள்! நீங்கள் அழகிகள் அணிவரிசையிலா? போராளிகள் அணிவரிசையிலா?